ஆசிரியர் : கலைச்செல்வி மணிமேகலை

அருள்

அருட்பெருஞ்சோதி



தனிப்பெருங்கருணை

அருள்

தமிழ்மாதம் முதல்நாள் தோறும் வெளிவருகிறது

அன்பார்ந்த வாசகர்களுக்கு

வாழ்க்கையில் உங்களுக்கு அவ்வப்போது ஏற்படக் கூடிய சிக்கல்களையும் பிரச்னைகளையும், சுருக்கமாக — ஆனால் தெளிவாக, எழுதியனுப்புங்கள். அவற்றிலிருந்து நீங்கள் விடுபடுவதற்கு உரிய ஆத்மிக — தார்மிக — சமய ரீதியான ஆலோசனைகளை, "அருள்" பத்திரிகையில் வெளியிடுகிறோம்.

உங்கள் ஊரையோ பேரையோ நீங்கள் எங்களுக்குத் தெரிவிக்கவேண்டிய அவசியம் இல்லை. கையெழுத்துக் கூடப் போடாமல் வெறும் விஷயத்தை மட்டும் ஒரு கடிதத்தில் எழுதியனுப்பினால் போதும். உங்கள் ஊரையும் பேரையும் நீங்கள் குறிப்பிட்டு எழுதினால் கூட, அவற்றை நாங்கள் வெளியிட மாட்டோம்.

—ஆசிரியர்

அருள் 4	ஆண்டுச்	அக்டோபர்
கருணை 1	சந்தா	15-10-69
ஐப்பசி, சௌமிய	ரூ. 3-60	விலை : 30 காசு.

சந்தா அனுப்ப வேண்டிய முகவரி : நிர்வாகி, "அருள்"
4, தணிகாசலம் செட்டிதெரு, தியாகராயநகர், சென்னை-17.

உ

திருச்சிற்றம்பலம்

திங்கள் விளங்கும் சடைத்தருவை,
    தீம்பால் சுவையை, செந்தேனை,
செங்கை மருவும் செழுங்கனியை,
    சீரார் முக்கட் செங்கரும்பை,
மங்கை மலையாள் மணந்தபெரு
    வாழ்வை, பவள மலைதன்னை,
எங்கள் பெருமான் தனையந்தோ
    என்னே எண்ணு திருந்தேனே!

அன்பர் இதய மலர்க்கோயில்
    அமர்ந்த பரமா னந்தத்தை,
துன்பம் அகலச் சுகமளிக்கும்
    தூய துணையை, சுயஞ்சுடரை,
வன்ப ரிடத்தில் மருவாத
    மணியை, மணியார் மிடற்றானை,
இன்ப நிறைவை, இறையோனை
    என்னே எண்ணு திருந்தேனே!

—திருவருட்பா

இறைவி வணக்கம்

ஸ்ரீ மூக மகாகவி

தாயே காமாக்ஷி ! பிரம்மா, விஷ்ணு, சிவன் என்னும் மூன்று மஹாபுருஷர்களிடத்தும், முறையே அவர்களது முகம், மார்பு, இடது துடை என்னும் இடங்களில், ஸரஸ்வதியாகவும் லக்ஷ்மியாகவும் கௌரியாகவும் நீயே விளங்கிக் கொண்டு இருக்கின்றனே!

பிறவிப் பெருங்கடலை வற்றச் செய்வதும், மூலாதாரம் முதலான ஆறு ஆதாரகமலங்களில் ஸஞ்சரிக்கின்றதும், காஞ்சிமாநகரில் கோயில் கொண்டிருப்பதுமான ஞானம்ருத ஆனந்த ஸ்வரூபத்தை யாம் சிந்திக்கின்றோம்.

தாயே காமாக்ஷி! உனது திருவடிக்கமலங்களைப் பூஜிப்பதனால் உள்ளத்திலே பெருக்கெடுக்கிற ஆனந்தப் பேரலைகளில் மூழ்கித் திளைக்கும் ஒருபக்தன், அதற்கு அப்புறமும் இவ்வுலகச் சுழலில் பந்தப்பட்டுக் கிடப்பான் என்று யாரேனும் கூறுவார்களாயின், ஸமுத்திரத்தின் அலைகளில் கற்பாறை மிதக்கும் என்று கூறுவதற்கு ஒப்பாகும்!

ஸத்ஸங்கம் எனப்படுகிற சாதுக்களின் கூட்டுறவு ஒன்றின் மூலமாகவே, மனிதன் ஆத்ம ஞானத்தைத் தேடிக் கொள்ள வேண்டும்.

சாதுக்களோடு நெருங்கிப் பழகுவதால், உள்ளத்தில் விவேக வைராக்கியங்கள் ஏற்படுகின்றன. விவேக வைராக்கியங்களால், மனம் சலனமற்ற நிலையை அடைகிறது. அப்போது ஆத்மஞானம் தானுகவே பிறக்கிறது.

எனவே, ஈஸ்வரனுல் வழங்க முடியாத ஆத்ம ஞானத்தை, நமக்கு சாதுக்கள் வழங்கி விடுகிருர்கள். அதனுல் தான், ஈஸ்வரனைக் காட்டிலும் சாதுக்கள் பெரியவர்கள் என்ற கருத்தில், ''தொண்டர் தம் பெருமை சொல்லவும் அரிதே!'' என்ருர் ஔவை மூதாட்டியார்.

நம் தமிழகத்தில், ஈஸ்வரனுடைய லீலா விநோதங்களை எடுத்துப் பேசுகிற இராமாயணம், பாரதம், பாகவதம், கந்த புராணம், திருவிளையாடல் புராணம் போன்றவற்றை உபந்யாசம் செய்கின்ற பெரியோர்கள் பலர் இருக்கிருர்கள். ஆனுல், சாதுக்களாகிய மகான்களின் கதைகளை மக்களுக்கு விளக்கிக் கூறுகிற வித்தகர்கள், ஒரு சிலரே உள்ளனர்.

அந்த ஒரு சிலருக்குள்ளேயும்;

இறைவனைப் பற்றி ஒரு பாட்டுக் கூடப் பாடாமலே பன்னிரு ஆழ்வார்களில் ஒருவராக 'இடம்' பெற்றுவிட்ட மதுர கவி ஆழ்வாரைப் போல;

ஈஸ்வர-சம்பந்தமான ஒரு கதையைக் கூடத் தொடாமல், முழுக்க முழுக்க அவனது அடியார்களாகிய சாதுக்களின் கதைகளையே உபந்யாசம் செய்து வருகிற ஒருவர் உண்டு என்ருல்;

அவர் தான் இவ்விதழின் அட்டைப் படத்தில் கம்பீரமாகக் காட்சியளித்துக் கொண்டிருக்கின்ற ஸ்வாமி சரவணபவானந்தர்.

இவர் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த நாகப்பட்டினத்தில் பிறந்தவர். திருவரச மூர்த்தி என்பது இவரது இயற்பெயர். பூர்வ புண்ய வசத்தால், இவர் தமது ஆருவது வயதிலேயே முருக பக்தராகி, தியானம், பஜனை, பூஜை, க்ஷேத்ராடனம் ஆகியவற்றில் ஈடுபடத் தொடங்கிவிட்டார். அதன் விளைவாகவே போலும், இவருக்கு எட்டாவது வயதிலேயே கவிபாடும் திறமை ஏற்பட்டுவிட்டது.

யாப்பிலக்கணம் கற்காமலே கவிபாடும் ஆற்றல் ஒருவருக்கு வந்து விடுமானுல், அவருக்கு வரகவியென்று பெயர். அவ்வாறு வரகவி ஆன பிறகு, இவர் தம்முடைய ஒன்பதாவது வயதில், முதுகுளத்தூர் பிச்சைக்கவிராயர் என்னும் புலவர் பெருமானிடத்தில், இலக்கண இலக்கியங்களைப் பாடம் கேட்டார். பதினுேராம் வயதில், இவர் பல பெரியோர்கள் முன்னிலையில் அக்ஷராவதானம் செய்து, அரிய தோர் புகழுக்கு உரியவர் ஆனுர்.

பன்னிரண்டாவது வயதில், வடலூர் இராமலிங்க வள்ளலாரின் திருவருளும், முருகப் பெருமானின் அருங்கருணையும் இவருக்கு ஒருங்கே கிட்டின. அந்நிகழ்ச்சிகள் முற்றிலும் அந்

தரங்கமான அனுபவங்களாகையால், அவற்றை அவர் வெளியேவிரித்துக் கூறவிரும்புவதில்லை. இருந்தாலும், அவரோடு நெருங்கிப் பழகியவர்கள், அவரிடம் காணப்பட்ட சில அபூர்வமான ஆற்றல்களைக் கொண்டு, அவருக்கு ஏதோ ஒரு திருவருட்பேறு கிடைத்திருக்கிறது என்பதை, அப்போதே தெரிந்து கொள்ள முடிந்தது.

தம்முடைய பதினொருவது வயதில், ஞானானந்த யதீந்திரர் என்ற மகானிடம், குமாரக் கடவுளுடைய ஷடாக்ஷரீ மந்திர உபதேசத்தையும், சரவண பவானந்தர் என்ற தீக்ஷா நாமத்தையும் இவர் பெற்றார். அது முதற் கொண்டு, இவர் தீவிரமான ஷண்முகோபாஸனையில் ஈடுபட்டார். அதன் பலனாகவே போலும், இவருக்கு ஆத்ம ஞானத்தை உபதேசிப்பதற்கு, பிரம்ம முடி யதீந்திரர் என்னும் ஒரு பைராகி ஸ்வாமிகள் வந்து சேர்ந்தார்.

இம்மாதிரி ஞானிகளின் தொடர்பு கிடைத்த பிறகு, இவரது வாழ்க்கையின் போக்கிலேயே ஒரு மாறுதல் ஏற்பட்டது. இறைவனது அடியார்களது வரலாறுகளை எண்ணி யெண்ணி, இவருடைய உள்ளம் உருகியது. குறிப்பாக, இராமலிங்க வள்ளலாரின் திருவருட்பா, இவர் இதயத்தைக் கொள்ளை கொண்டது. அந்த இளம் வயதிலே (அதாவது, பதினொருவது வயதிலே), திரிசிராப்பள்ளிக் குழுமியானந்த ஸ்வாமி கோவிலில், இவர் முதன் முதலாக வள்ளலாருடைய திவ்ய சரித்திரத்தைக் கதாகாலக்ஷேபம்செய்தார். அத்துடன், வள்ளலார் மீது அருட்பெரும்பாசுரம் என ஒன்று பாடி முடித்து, அந்த நூலை வடலூரில் சென்று அரங்கேற்றினார்.

அதன்பிறகு, இறைவனது திருவருளைப் பெற்ற மகான்களின் வரலாறுகளை ஆராய்வதிலும், அவற்றைப் பொதுமக்களிடையே கதாகாலக்ஷேபம் செய்வதிலுமே, இவர் இடையறாத ஆர்வம் கொண்டவர் ஆனார். இவ்வாறாக, மொத்தம் 101 கதாகாலக்ஷேபங்களை இவர் உருவாக்கியுள்ளார். அவற்றுள் பெரும்பாலானவை, வேறு எவராலும் கையாளப்படாதவை ஆகும். எடுத்துக்காட்டாக, பாம்பன் ஸ்வாமிகள், அபிராமபட்டர், மனுநீதிச் சோழன், தண்டபாணி ஸ்வாமிகள், பேரூர் சாந்தலிங்க ஸ்வாமிகள், குமரகுருபரர் இவர்களுடைய வரலாறுகளை யெல்லாம், கதாகாலக்ஷேப வடிவத்திலும் உபந்யாச வடிவத்திலும் இன்றைக்கு நமக்கு வழங்கிக் கொண்டிருப்பவர் ஸ்வாமி சரவணபாவானந்தர் ஒருவரே யாவர்.

இவற்றைத் தவிர, இவர் ஆயிரக்கணக்கான இசைப் பாடல்களை இயற்றியிருக்கிறார். அவற்றைப் பாடிப் பயின்று புகழ்படை.த்து விளங்கும் சங்கீத வித்வான்கள் இன்று பலபேர் இருக்கிறார்கள். இவர் பதினாயிரக் கணக்கான கவிகள்பாடியுள்ளார். இன்னும் பாடிக்கொண்டேயிருக்கிறார். ஏராளமான நூல்களையும் எழுதியுள்ளார்.

இதில் முக்கியமாகக் குறிப்பிடத்தக்க ஒரு செய்தி என்னவென்றால், வடலூர் இராமலிங்க ஸ்வாமிகளைப் .பற்றி முதன் முதலாகப் பாடல்கள் இயற்றியவர், நமது சரவணபவானந்தரேயாவர். தம்முடைய கதாகால

க்ஷேபங்களின் மூலம், வள்ளலாரின் வரலாற்றினைத் தமிழ் மக்களிடையே முதன் முதலாகப் பரப்பத் தொடங்கியவரும் இவரேதான். வள்ளலாரை நேரில் பார்த்த பதினொரு பெரியவர்களை இவர் நேரில் பார்த்திருக்கிறார். அவர்களிடமிருந்து வள்ளலாரைப் பற்றிய பல அரும் பெரும் உண்மைகளை, இவர் கேட்டு அறிந்திருக்கிறார். அவற்றை இவரிடமிருந்து நாம் கேட்கும் போது, நம்முடைய உள்ளம் மட்டும் அல்ல, ஊனும் கூட உருகுகிறது.

ஸ்வாமி சரவணபவானந்தர் எல்லோரிடமும் இனிமையாகப் பழகுபவர். அவர் ஆற்றியிருக்கும் அருஞ்செயல்களையும், பெற்றிருக்கும் விருதுகளையும் எடுத்துக் கூறுவது என்றால், அதற்கு இந்தக் கட்டுரையில் இடம் போதாதது. அவரைப் பற்றி ஒரு புத்தகமே எழுதலாம். அவரது வரலாற்றை ஒரு கதாகாலக்ஷேபமாகவே செய்யலாம். அவ்வளவு ரசமான விஷயங்கள் அதில் அடங்கியுள்ளன.

ஸ்வாமி சரவணபவானந்தருக்கு, இப்போது ஐம்பத்தேழு வயது ஆகிறது. அவர் இன்னும் நெடுங்காலம் இந்த நிலவுலகில் வாழ்ந்து, மக்களுக்கு சாதுக்களின் பெருமைகளை எடுத்துச் சொல்லி, அவர்களை ஸத்ஸங்கத்தில் நாட்டம் கொள்ளுமாறு ஊக்குவிப்பதற்கு, இறைவன் அவருக்கு ஏராளமான ஆயுளையும், ஆக்கத்தையும் அருள வேண்டுமாய், அவன் திருவடிகளை வழுத்துவோமாக!

தியானம் செய்ய வேண்டிய முறை



பகவான்

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர்

சாதகன் ஒருவன் தன் இஷ்ட தெய்வத்தை எங்கு வைத்துத் தியானம் பண்ணவேண்டும்?

ஹிருதய கமலம் அதற்கு உற்ற இடமாகும். ஹிருதயத்தில் வைத்து தியானம் பண்ணு.

ஒருவன் எதைத் தியானிக்கிறானோ, அதன் இயல்பு அவன் உள்ளத்துக்கு வருகிறது.

உடலில் கட்டி ஒன்று கிளம்பியிருக்கும் பொழுது, மனிதன் ஏனைய அலுவல்களைச் செய்து கொண்டிருந்தாலும், மனத்தின் ஒருபகுதி அக்கட்டியினிடத்துச் செல்லும். சாதகன் ஒருவன் உலகக் கிருத்தியங்களைச் செய்து கொண்டிருப்பதற் கிடையில், மனத்தில் பெரும்பகுதியை தெய்வத்தினிடத்துத் திருப்ப வேண்டும்.

எடுத்த எடுப்பில் சாதகன் ஒருவன் நிர்குண நிராகார பிரம்மத்தைத் தியானிக்க முடியாது. சகுண சாகார பிரம்மத்தைத் தியானித்துப் பழகுவது நன்று.

கடலின் அடிப்பகுதியிலிருக்கும் மணிகளை எடுப்பதற்கு, ஒருவன் அதனுள் ஆழ்ந்து மூழ்க வேண்டும். அதே விதத்தில், தியானத்திலும் ஒருவன் ஆழ்ந்து மூழ்க வேண்டும். மனத்தின் மேல்பரப்பில் அலைந்து கொண்டிருப்பதில் என்ன பயன்?

யோகி ஒருவனுடைய மனது, யாண்டும் ஆத்ம சொரூபத்திலேயே லயித்திருக்கிறது. அடைகாக்கும் பறவை வெறுமனே கண்ணை விழித்திருக்கின்றது. ஆனால் அதன் நாட்டமோ முட்டையின் மீது. அங்ஙனம் யோகியும் கண் விழித்திருக்கின்றான். ஆயினும், அந்தர்முக

திருஷ்டியில் அவன் மனது ஆழ்ந்திருக்கிறது. அவன் முகத்தைப் பார்த்தாலே அதன் அறிகுறி விளங்கும்.

ஏகாந்தத்தில்ஈசுவரத்தியானம் பழகினுல், ஞானமும் வைராக்கியமும் விவேகமும் பக்தியும் உண்டாகும். ஈசுவரத் தியானம் பழகுவதற்கு மாறுக உலக விஷயங்களில் ஈடுபட்டால், மனது கீழ்மையடையும். அதனிடத்துக் காமமும் காசு ஆசையும் அதிகரித்து விடும். உலக வாழ்க்கையில் காமமும் காசுஆசையும் தவிர வேறு எதுவும் இல்லை.

உன் உள்ளத்தில் அரும்பொன் இருக்கிறது. ஆனுல் நீ அதை இன்னும் அறிந்துகொள்ளவில்லை. மாசுபடிந்து அது மறைந்திருக்கிறது. உள்ளத்தினுள் அது இருப்பதை நீ அறிந்துகொள்ளும்பொழுது, உலக வியவகாரங்கள் தாமாகவே குறைந்து விடும்.

சிஷ்யன் : கடவுளைக் காண்பது மனிதனுக்கு சாத்தியமா?

பரமஹம்ஸர் : ஆம். மனிதன் கடவுளைக் காண முடியும். தனியாக ஓரிடத்தில் இருந்துகொண்டு, தியானம், ஜபம், ஸ்தோத்திரம்முதலிவைகளில் ஈடுபட வேண்டும். நிலைத்தது எது, நிலையற்றது எது என்று விசாரித்துப் பார்க்கவேண்டும். இம்முறைகளைக் கையாண்டால், கடவுளைக் காணலாம்.

உறையூற்றிய பாலை அசையாது ஓரிடத்தில் வைக்காவிட்டால், நல்ல தயிர் உண்டாகாது. நீ அமைதியாக ஓரிடத்தில் ஏகாந்த வாசம் செய்யாவிட்டால் பக்தி உண்டாகாது. உறைந்த தயிரினின்று வெண்ணெயைக் கடைந்தெடுப்பது போன்று, உன் உள்ளத்தினின்று ஈசுவர பக்தியைக் கடைந்தெடு.

ஒருவன் தன்மனத்தில் உதிக்கும் ஆசைக்கேற்ற நிலையை அடைகிருன்.

இரண்டு நண்பர்கள் தெரு வழியில்போய்க்கொண்டிருந்தார்கள். ஓரிடத்தில் பாகவதம் வாசிக்கப்பட்டது. நண்பர்களில் ஒருவன் அதைக் கேட்க அங்கே போய் உட்கார்ந்து கொண்டான்.

மற்றவன் அங்கு சற்று நின்று பார்த்து விட்டு, அது தனக்கு உதவாது என்று போய்விட்டான்.

போனவன், ஒருவேசி வீடு புகுந்தான். ஆனுல் சிறிது நேரத்துக்குள் தான் செய்த பிழையை அவன் உணர்ந்தான். அந்தச்சூழ்நிலையில் அவனுக்கு அருவருப்பு வந்துவிட்டது.

''என் நண்பனுடன்கர்ணுமிர்தமாகிய பாகவதம் கேட்பதற்குப் பதிலாக, இத்தகைய பொல்லாத இடத்துக்கு வந்து சேர்ந்தேனே''

என்று அவன் தன்னை நொந்து கொண்டிருந்தான்.

இனி, பாகவதம் கேட்க உட்கார்ந்தவனுக்குச் சிறிது நேரத்துக்குள் அதில் அலுப்பு வந்து விட்டது. ''இம்மனிதன் எதையெதையோ பிதற்றுகிறான். என் நண்பனுடன் வேசி வீடு சென்றிருந்தால், நான் இன்புற்று இருந்திருப்பேனே'' என்று அவன் மனத்துக்குள் எண்ணிக் கொண்டிருந்தான்.

பிறகு, அந்த நண்பர் இருவரும் இறக்கும் காலம் வந்தது. பாகவதம் கேட்க உட்கார்ந்தவனை, யமபடன் பிடித்துக் கொண்டு போனான். வேசி வீட்டில் வருந்திக் கொண்டிருந்தவனை, விஷ்ணு தூதர் வந்து வைகுண்டத்துக்கு அழைத்துச் சென்றனர்.

அவன் இருந்தது வேசி வீட்டில் எனினும், அவனுடைய மனது ஹரியை நாடிக்கொண்டிருந்தது மற்றவன் பாகவதம் வாசிக்கிற புண்ணிய இடத்தில் அமர்ந்திருந்தான் எனினும், அவனது மனது விபசாரத்தனத்தில் உழன்று கொண்டிருந்தது. அவரவர் மனநிலைக்கேற்ற கதி மரணத்துக்குப் பிறகு வாய்த்தது.

அதிகாலையில், பிராம்ம முகூர்த்தத்தில் தியானம் பண்ணுவது மிக நன்று. சூரியோதயத்தின் பொழுதும், அஸ்தமனத்தின் பொழுதும், தியானம் பண்ண வேண்டும்.

தியானம் பண்ணிப் பழகுகிறவர்கள், பரம் பொருளை உபாதி ரகிதனாக வைத்து தியானம் பண்ணுவது நன்று. ஆனால் அது மனம் மொழிக்கு எட்டாத நிலை. அப்படி தியானம் பண்ணுவது மிகக்கஷ்டம்.

தாமிரப் பாத்திரம் ஒன்றைத் தினந்தோறும் துலக்க வேண்டும். இல்லையேல், அதில் களிம்பு ஏறுகிறது. மனம் தாமிரப் பாத்திரம் போன்றது. தினந்தோறும் தியானத்தால் அதைத் துலக்கி வைத்திருக்க வேண்டும்.

நான் கண்மூடியிருந்து தியானம் பண்ணிய காலம் உண்டு. இப்பொழுதோ, கண்மூடியிருந்தும் கண்திறந்திருந்தும் தியானம் பண்ணுகிறேன். பார்க்கும் பொருள்களெல்லாம் பரமனுடைய வடிவங்களாக எனக்குத் தென்படுகின்றன.

ஈசனைக்குறித்து தியானம் பண்ணுவதற்குப் பொருத்தமான இடம் எது?

ஹிருதய கமலத்தில் ஈசனை வைத்து தியானம் பண்ணலாம். அது மிகப்பொருத்தமான இடம். சகஸ்ராரத்தில் வைத்து தியானம் பண்ணுபவர்களும் உளர். பின்பு அவரை எந்த இடத்தில் வைத்து

தியானம் பண்ண சாதகன் ஒருவனுக்குத் தோன்றுகிறதோ, அந்த இடத்தில் தாராளமாக அவரைவைத்து தியானம் பண்ணலாம். ஏனெனில், பிரம்மம் இருக்கும் இடம் எது, இல்லாத இடம் எது என்று பாகுபடுத்த முடியுமா?

நீரின் மேல்பரப்பில் நீந்துகிறவர்கள், ஆழ அடியிலிருக்கும் முத்தை எடுக்க முடியாது. அவர்கள் ஆழ அடியில் மூழ்க வேண்டியது அவசியம். அங்ஙனம் சாதகன் ஒருவன், தன்மனத்தினுள் ஆழ்ந்து மூழ்கவேண்டும்.

மீன் கண் ஒன்றை இலக்காக வைத்து அர்ஜுனன் அம்பு எய்தபொழுது, மீன் கண்ணும் அர்ஜுனன் கண்ணும் ஒன்றுபட்டுவிட்டன. கும்பகம் அவனுக்கு வாய்த்துவிட்டது. மனம் ஒடுங்கும்பொழுதே இத்தகைய நிலை அமைகிறது.

பறவையின் கண்ணை இலக்காகக்கொண்டு அர்ஜுனன் அம்பைக் குறிவைத்த பொழுது, அவன் மனத்திலிருந்து ஏனைய எண்ணங்களெல்லாம் அகன்று போய்விட்டன. குறியும் குறி வைத்தவனும் ஒன்று பட்டு விட்டார்கள். ஆதலால் அந்த இலக்கை அடிக்க அவனுக்கு இயன்றது. யார் ஒருவனுக்கு பகவான் இலக்கு ஆகின்றாரோ, அவன் உள்ளத்தினின்று ஏனைய எண்ணங்களெல்லாம் போய் விடுகின்றன.

குண்டலினி சக்தி எழுந்திருப்பதற்கு முன்பு ஆத்மபோதம் வருவதில்லை.

எனக்குப்பாரமார்த்திக அனுபவங்கள் வெவ்வேறு விதங்களில் வாய்த்ததுண்டு. ஒரு வேளையில் எறும்பு ஊறி மேலே போவது போன்று உணருகிறேன். மற்றொரு வேளையில், குரங்கு ஒன்று ஒரு கிளையினின்று மற்றொரு கிளைக்குத் தாவிப் போவது போன்று உணருகின்றேன். மீன் ஒன்று நீரினுள் நீந்திப் போவது போன்று உணர்வதுமுண்டு.

மானுட சரீரத்தில் இடை, பிங்கலை, சுஷும்னை ஆகிய மூன்று முக்கியமான நாடிகள் உள. ஆறு ஆதாரங்களும் சுஷும்னை நாடியில் இடம் பெற்றிருக்கின்றன. மெழுகில் செய்யப்பட்ட மரம் போன்று, ஆறு ஆதாரங்களும் சைதன்யம் நிறைந்தவைகள். குண்டலினி சக்தி மூலாதாரத்தில் அடங்கியிருக்கிறது. மூலாதாரம் என்னும் தாமரைக்கு நான்கு இதழ்கள் உண்டு. எல்லாருடைய சரீரங்களிலும், ஆதி சக்தி குண்டலினி சக்தியாக மூலாதாரத்தில் வீற்றிருக்கின்றாள். சுருண்டு படுத்திருக்கிற சர்ப்பம்போன்றது குண்டலினி சக்தி. பக்தியில் தீவிரமாகச் செல்லுகிற சாதகனிடம், குண்டலினி சக்தி விரைவில் எழுந்திருக்கிறாள். அவள் எழுந்திருந்தாலொழிய, தெய்வ தரிசனம் வாய்க்காது.

இரு வகையான பார்வைகள்



ஜகத்குரு
ஸ்ரீ காமகோடி
பீடாதிபதிகள்

பகவத் கீதையில் ஒரு சுலோகம் இருக்கிறது.

அதில், யமி தனியான ஜ்யோதிஸோடு இருக்கிறார் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

ஸம்யமி ராத்திரியில் பிரகாசிக்கிறான்; எல்லோரும் எப்பொழுது தூங்குவார்களோ அப்பொழுது விழித்துக்கொண்டிருக்கிறான்; எப்பொழுது எல்லோரும் விழித்துக் கொண்டிருக்கிறார்களோ அப்பொழுது, உள்ளதை உள்ளபடி அறிகிறவனுக்கு இருட்டாக இருக்கும் என்று பகவத்கீதை சொல்லுகிறது. இதற்கு என்ன அர்த்தம்?

நம்முடைய சாஸ்திரப்படி, லோகத்திலுள்ள பதார்த்தங்களெல்லாம் பரமாத்மஸ்வரூபமாகும். அதைத் தவிர இரண்டாவது வஸ்துவே கிடையாது.

உபநிஷத், பேதம் இல்லை என்று சொல்லுகிறது. எல்லாம் பரமாத்ம ஸ்வரூபம். பரமாத்ம ஸ்வரூபத்தில், பார்க்கிறவனும் ஒருவன். அதனால் தான், தனக்கு வேறாகப் பரமாத்மா என ஒன்று இல்லாமல், எல்லாவற்றையும் அவன் தானாகவே பார்ப்பான்.

நாம் பார்ப்பது அவனுக்குப் பொய்யாக இருக்கிறது. தனக்கு வேறாகப் பார்த்தால் அவனுக்கு இருட்டு. 'எல்லாம் நானே!' என்று பார்க்கிறதை விட்டு விட்டு, வேறே என்று பார்க்கும் பொழுது, அவனுக்குத் திண்டாட்டம் ஏற்படுகிறது.

"வேறே ஒருவன் அடிப்பது போல நினை" யென்றால், அது நம்மால் முடியும். அவனால் முடியாது. "நம்மை நாமே அடித்துக்கொள்ளுவதாக நினை" யென்றால், அது நம்மால் முடியாது.

நமக்கு எல்லாம் வேருகத் தோன்றுகிறது.

எல்லாவற்றையுமே நாமாகப் பார்ப்பதென்ருல், நமக்கு இருட்டாகிறது. வேருகப் பார்ப்பதாஞல், அவனுக்கு இருட்டாகிறது. மத்தியில் ஒருவர் இருக்கிருர். அவரைத் தடஸ்தர் என்பார்கள். கரையில் இருப்பவர் அவர். காவேரியில் ஒருவன் போகிருன். வயலில் ஒருவன் உழுதுகொண்டிருக்கிருன். கரையில் ஒருவன் இருக்கிருன். அவனுக்கு இரண்டுபேரும் காணப் படுவார்கள்.

ஊரிலிருக்கிறவனே, "'எல்லாம் நானே!' என்று பார்" என்ருல் இருட்டாகிறது; ஞானியை "எல்லாவற்றையும் உனக்கு வேருகப் பார்" என்ருல் இருட்டாகிறது; ஸ்வாமி இரண்டையும் பார்க்கிருர். தம்மையும் பார்க்கிருர்; தமக்கு வேறே யாகவும் பார்த்துக் காரியமும் பண்ணுகிருர்.

நிலைக்கண்ணுடி ஒன்று இருக்கிறது. அதில் நாம் பார்க்கிருேம். நம்முடைய பிரதிபிம்பம் தோன்றுகிறது.

மாடு வந்து பார்க்கிறது. ஏதோ எதிரிமாடு வந்திருக்கிறதென்று நினைத்து முட்டுகிறது; கண்ணுடி உடைந்து போகிறது.

நமக்கும் ஓர் எதிரி மனிதன் தோன்றுகிருன்; ஆனுல் அது பிரதிபிம்பம் என்பதை அறிகிருேம். அந்த மாதிரிதான் ஸ்வாமியும் இருக்கிருர்.

நாம் வைத்த கண்ணுடி ரஸம் பூசினது. அதைப்போல ஸ்வாமி இருக்கிருர். நாம் வேருெருவனேடு சண்டை போடுவதாக நினைக்கிருேம். கண்ணுடியில் பார்த்த மாடு போல எண்ணுகிருேம். உண்மையில் நம்மையே நாம் அடித்துக்கொள்ளுகிருேம். மாடுபோல் இருப்பதால் தான் பசு என்ற பெயர் ஜீவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது.

ஸம்யமி பார்ப்பதற்கும் நாம் பார்ப்பதற்கும், இதுதான் வித்தியாஸம். ஸம்யமி பார்த்தால், இது வெறும் பிரதிபிம்பம் என்று எண்ணிவிடுகிருர். நாம் வேருகப் பார்க்கிருேம்.

பரமேசுவரஞகிய ஸம்யமி நமக்காகப் பார்க்கிருர். ஸ்வாமி ஸம்யமியாக இருந்த அவஸரந்தான் தக்ஷிணுமூர்த்தி. வேறேயாகப் பார்ப்பதில் நமக்குப் பிரகாசமாக இருக்கிறது. ஞானிக்கு இருட்டாக இருக்கிறது. தாஞகப் பார்ப்பதில் ஞானிக்குப் பிரகாசமாக இருக்கிறது; நமக்கு இருட்டாகிறது. நாம் எப்படிப் பார்க்கிருேமோ அப்படி லோகம் இருக்கிறது. நம்முடைய திருஷ்டி மூக்குக் கண்ணுடிபோல இருக்கிறது.

முனியாகவும் ஸம்யமியாகவும் பரமேச்வரன் ஓர் அவஸரத்தில் இருந்தார்.

ஞானமார்க்கத்தில்பிரவேசித்த பக்தர்கள், பரமேச்வராராதனை யில் பிரார்த்தனை பண்ணுகிற ஒரு சுலோகம் உண்டு.

மதுரையில் ஆவணி மூலத் திரு நாள் நடக்கிறது. அது பகவான் பிட்டுக்காக மண்சுமந்த தினம். வைகையில் உடைப்படைக்க வேண்டுமென்று மண் சுமந்தார். அப்பொழுது அரசன் பிரம்பினால் அடித்தான். அந்தப் பிரம்படி எல்லோருக்கும் பட்டது.

இந்த விஷயத்தைப் பற்றிச் சொல்லும் சிவலீலார்ணவத்தில், இந்த ஸமயத்தில் ஸ்வாமியிடம் சிலபேருக்கு அதிருப்தி உண்டா யிற்றென்றும், அநேகம்பேர் அநேக தினுஸாகப் பேசினார் களென்றும் சொல்லப்பட்டிருக் கிறது.

''உன்னுடைய அடியைப்பாகம் பண்ணுவதில் மாத்திரம், நீ விச் வாத்மகன் என்பதைக் காட்டி னாய். பிட்டுக் கொடுத்தாளே, அப்பொழுது என்ன செய்தாய்? அப்பொழுது மட்டும் இரண் டாவது இல்லை. சிவாத்வைதம். அடிபட மாத்திரம் எங்கும் தேகம் இருக்கிறதோ?'' என்று ஒருவர் சொன்னார்.

இப்படிப் பலபேர் பலவிதம் சொன்னார்கள். ஸ்வாமிபக்ஷ மாகப் பேசுகிறவர் ஒருவர் வந் தார்.

''நீர் அநாதையாக இருக்கிறீர். வைகையாறு உடைப்பெடுத்துக் கொண்டதென்று அடைக்க வந் தீர். பரிபாலனம் பண்ணவேண்டி யது நாராயணருடைய வேலை. அவர் இப்பொழுது ஸமுத்திரத் தில் ஆனந்தமாகத் தூங்குகிறார். எங்கே உடைப் பெடுத்தால் அவ ருக்கு என்ன! எவ்வளவு ஜலம் ஏறினாலும் அவருக்குத் தெரி யாது. பிரளய உபத்திரவம் தெரியாத இடத்தில் அவர் இருக் கிறார். கேட்பார் கிடையாது. இவருடைய உத்தியோக மாயிற்றே, இவர் தூங்கிக்கொண் டிருக்கிறாரே என்று கேட்பார் கிடையாது. மண்கூடையைத் தூக்கமாட்டாமல் தூக்கி, நீர்சிர மப்படுகிறீர். உமக்குப் பிரம்படி கிடைக்கிறது. இந்த அநியா யத்தை யார் முன்னிலையில் போய்ச் சொல்வீர்! நீர் அநாதை. சொல்லுகிறதற்கு உமக்கு மேல் ஒரு நாதன் இல்லை. சொல்லி யாவது ஆறலாம். அதற்குக்கூட இடம் இல்லை'' இப்படி அவர் சொன்னார்.

மற்றொருவர் பெரிய மேடை யின் மீது ஏறிக்கொண்டார். எல் லோரையும் கூட்டிக்கொண் டார்.

''இப்பொழுதே ஒருதீர்மானம் பண்ணிவிட வேண்டும். அப் புறம் ஆள் அகப்படமாட்டார். இப்பொழுது பண்ணா விட்டால் துன்பம்'' என்று சொல்லிப் பேச ஆரம்பித்தார்.

''ஏ ஸாதுக்களே! வாருங்கள். அப்புறம் என்று சொல்லாதீர் கள். இப்பொழுது கூடியிருக் கிறோம். என்ன தீர்மானம் பண் ணுவது தெரியுமா? நீர் பிரம்படி யைப் பிரித்துக் கொடுத்தீரே? அதை வாங்கிக்கொள்ளத் தயா ராயில்லை யென்று அவரிடம் சொல்லவேண்டும். அடிபட்டா

லும் நாம் சம்மதிக்க மாட்டோம் என்று சொல்லிவிடவேண்டும்'' ஜப்தி பண்ணினாலும் உடனே ஆக்ஷேப மனுக் கொடுத்தால், பின்னால் வியவஹாரம் சௌகரியம் அல்லவா?

அவர் சொல்லுகிறார்: ''இப்பொழுதே கொடுக்காமற் போனால், அப்புறம் நமக்குத்தான் கஷ்டம். இவர் எங்கே பார்த்தாலும் அடிபடுகிற பேர் வழி. இன்னும் ஒருவன் காலாலுதைப்பான், கல்லாலடிப்பான், வில்லாலடிப்பான், எச்சில் துப்புவான், இத்தனைக்கும் நாமும் பங்காளிகளாக நிற்க வேண்டியிருக்கும். எல்லாவற்றுக்கும் பாகத்துக்குப் பாத்தியப்படவேண்டும். தெரிந்தவரைக்கும் இவ்வளவு பேர் அடித்திருக்கிறார்கள். இன்னும் எவ்வளவு பண்ணுவார்களோ பக்தர்கள்!'' என்றார்.

கடைசியாக ஒருவர் வந்தார். ஸ்வாமியிடம் நான் ஒன்று கேட்கிறேனென்று வந்தார். ''ஒரு வாணிச்சியிடம் வெல்லம் போட்ட பிட்டை வாங்கிக் கொண்டு, அதற்காக வைகைக் கரையில் மண் கொட்டுகிறேனென்று அடிபட்டீர். என் ஹிருதயகமலத்தில் பக்தி ரஸம் இருக்கிறது. அங்கே வந்து என் மனோபாவத்தைச் சாப்பிட்டு விட்டு, ஸம்ஸாரப் பிரவாஹத்தை அடையும். நான் அடிக்க மாட்டேன். ஒன்று கொடுத்தால்தான் பண்ணிகிறதென்று வைத்துக் கொண்டிருக்கிறீர். பக்திரஸத்தையும் மனோபாவத்தையும் கலந்து கொள்ளும்'' என்று பிரார்த்திக்கிறார்.

அப்படியே நாமும் பிரார்த்திப்போம். மனோபாவம் போய்விட்டால், யமியினுடைய நிலை உண்டாகி ஆத்மானந்தத்தைப் பெறலாம்.



DIRECTOR
அனைவருக்கும்
ஆனந்தம் அளிப்பது
காளி
மார்க்
காளி மார்க்
Kali mark
ஸ்டுடியோ 'செட்'டில்
அனைவரையும்
ஆட்டிவைக்கும்
டைரக்டரையும்
ஆட்கொள்வது
காளிமார்க் பானம்.
ஆயிரக்கணக்கானவர்கள்
காளிமார்க்கின் குளிர்ந்த,
புதுமை மாறாத, ருசியை
அனுபவிக்கின்றனர்.
நீங்களும் உங்கள் தாகம்
தணிய காளிமார்க்
பானங்கள் அருந்துங்கள்.
50 ஆண்டுகளாகப் புகழ் பெற்றவை. எங்கும் கிடைக்கும்.

அண்ணனுக்குத் தம்பி சொன்ன அறிவுரை



பாரத ஸிம்ஹம் பிரம்மஸ்ரீ
சேங்காலிபுரம்
அனந்தராம தீக்ஷிதர்

மங்கள வஸ்துக்களான வேத வித்துக்கள், அக்நி ஹோத்ரி, பசு, ஸுமங்கலி, தங்கம், முத்து, பவழம், வலது உள்ளங்கை முதலியவற்றை தரிசிப்பதாலும், மங்கள காரியங்களைச் செய்வதாலும், ஐச்வர்யம் ஏற்படுகிறது. ஸாமர்த்தியத்தால் நன்கு வளர்கின்றது. சீக்கிரமான செய்கையால் வேரூன்றுகிறது. அடக்கத்தால் நிலைத்து இருக்கின்றது.

அறிவு, நற்குலத்தில் பிறப்பு, ஐம்புலன்களை அடக்குதல், கல்வி, பராக்கிரமம், மிதமாகப் பேசுதல், சக்திக்குத் தக்கபடி தானம், நன்றியறிதல் ஆகிய இந்த எட்டு குணங்களும், மனிதனை பிரகாசிக்கச் செய்கின்றன.

யாகம், தானம், அத்யயனம், தவம், ஸத்யம், பொறுமை, தயை, லோப குணமில்லாமை இவை எட்டும், தர்மத்திற்கு வழிகளாகச் சொல்லப்படுகின்றன.

உண்மை பேசுதல், அழகு, சாஸ்திரம், வேதாத்யயனம், நற்குலப் பிறப்பு, நன்னடத்தை, சரீரபலம், பொருள், சூரத்தன்மை, ஆச்சரியமாய் பேசுதல் இந்தப்பத்தும், ஸ்வர்க சுகத்தைப் போன்ற சுகத்தை அளிக்க வல்லன.

பாவத்தைச் செய்கிறவன் அபகீர்த்தியை அடைந்து, பாவத்தின் பயனை துக்கத்தை அநுபவிக்கிறான். நல்ல கர்மங்களைச் செய்கிறவன் நல்ல புகழை அடைந்து, நற்பயனை சுகத்தை அடைகிறான்.

ஆகையால், மனிதன் நல்ல காரியங்களைத் தீவிரமாய் செய்து கொண்டு, பாவம் செய்யாதிருக்க வேண்டும். திரும்பத் திரும்பப் பாவத்தைச் செய்தால், புத்தியைக் கெடுத்துவிடும். புத்தியை இழந்தவன், தினமும் தொடர்ந்து பாவத்தையே செய்வான்.

திரும்பத் திரும்ப புண்ய கர்மங்களைச் செய்தால், புத்தியை வளர்க்கும். வளர்ந்த புத்தியை உடையவன், தினந்தோறும் புண்ய கர்மத்தையே செய்வான். புண்ய காரியங்களைச் செய்கிறவன், புண்யலோகங்களை அடைகிறான். ஆகையால், மனிதன் மனத்தை அடக்கி, புண்யத்தையே செய்யவேண்டும்.

அஸூயைப்படுகிறவனும், குரூரமாகப்பேசுகிறவனும், துவேஷத்தைச் செய்கிறவனும், ரஹஸ்யமாக அப்ரியத்தைச் செய்கிறவனுமான மனிதன், பாபத்தைச் செய்து விரைவில் பெரிய கஷ்டத்தை அடைவான்.

அஸூயைப்படாமலும், நல்ல புத்தியுடனும், நல்ல காரியங்களை எப்பொழுதும் செய்து கொண்டிருப்பவன், பெரும் துயரத்தை அடைவதில்லை. எங்கும் பிரகாசிப்பான்.

ஒருவன் எதைச் செய்தால் இரவில் சுகமாக இருப்பானோ, அதை அவன் பகலிலேயே செய்து கொள்ளவேண்டும். எதைச் செய்தால் மழைக்காலம் முழுவதும் சுகமாய் வஸிப்பானோ, அதை மற்ற எட்டு மாதங்களில் செய்து கொள்ளவேண்டும். எதனால் வயது காலத்தில் சுகமாய் வஸிப்பானோ, அதை இளமையிலேயே செய்து கொள்ளவேண்டும். எதனால் இறந்தபின் சுகமாய் வஸிப்பானோ, அதை உயிர் உள்ள அளவும் செய்து கொள்ளவேண்டும்.

ஜீர்ணமான அன்னத்தையும், யௌவனம் நீங்கிய மனைவியையும், யுத்தத்தில் வெற்றி அடைந்த சூரனையும், தத்வமறிந்த தபஸ்வியையும் கொண்டாடுகிறார்கள்.

அதர்மத்தால் ஸம்பாதித்த பொருளை தானம் செய்து, தோஷங்களை மறைக்க முயற்சி செய்யலாம். ஆனால் அந்த தோஷமும் மறையாமல் ஆவதோடு, வேறு குற்றங்களும் வெளியாகும்.

விவேகமுள்ளவர்களுடைய தவறை குரு போக்கி விடுவார். துஷ்டனுடைய தவறை அரசன் போக்கி விடுவான். இவ்விருவர்களுக்கும் தெரியாமல் ரஹஸ்யமாய்த் தவறு செய்கிறவனை, யமன் தண்டித்துவிடுவான்.

முனிவர்கள், நதிகள், மஹான்களுடைய குலம், ஸ்திரீகளின் கெட்ட நடை, இவைகளின் காரணங்கள் பரீக்ஷிக்கத் தக்கதல்ல.

பிராம்மணர்களை பூஜிப்பதில் ஆவலுள்ளவனும், கொடையாளியும், பந்துக்களிடத்தில் நேர்மையாக இருப்பவனும், நன்னடத்தை உள்ளவனுமான அரசன், நீண்ட காலம் பதவியில் இருந்து மக்களைப் பாதுகாப்பான்.

சூரன், நல்ல கல்வியுள்ளவன், தேசஸேவையை நன்கு செய்யத் தெரிந்தவன், ஆக இம்மூன்று பேர்களும், தங்கம் விளையும் பூமியை அடைவார்கள்.

கோபமடைந்து தூஷிப்பவனை, பதிலுக்கு தூஷிக்கலாகாது. இவனுடைய பொறுமையே அவனை எரித்துவிடும். அவனுடைய புண்யத்தையும் இவன் அடைந்து விடுவான்.

நாஸ்திகனையோ, ஆஸ்திகனையோ, தவம் செய்கிறவனையோ, திருடனையோ அடைந்து ஒருவன் வசித்தால், அவர்களது குணமானது இவன் சித்தத்தில்பதிந்து விடும். வஸ்திரமானது எந்த வர்ணமுள்ள சாயத்தில் நனைக்கிறேமோ, அது போலாகும். இவனும் அவ்வாறு ஆகிறன்.

எவன் அதிகமான வார்த்தை பேசுவதில்லையோ, பிறரைக் கொண்டும் பேசும்படி செய்வதில்லையோ, அடிக்கப்பட்டும் எதிர்த்து அடிப்பதில்லையோ, அடிக்கும்படி செய்கிறது மில்லையோ, தனக்கு கெடுதி செய்தவனையும் கொல்ல விரும்புகிறதில்லையோ, அவன் புண்யலோகம் செல்லும்போது, தேவர்கள் ஆசையோடு வரவேற்கின்றனர்.

பேசுவதைக்காட்டிலும், பேசாமலிருத்தல் மிகவும் சிலாக்யமானது என மஹான்கள் சொல்கிறர்கள். இது முதலாவதாகும். பேசினல் உண்மையைப் பேச வேண்டும். இது இரண்டாவதாகும். அப்படி உண்மையைப் பேசுவதிலும், பிரியத்தை பேச வேண்டும். இது மூன்ருவதாகும். அப்படி பிரியத்தைப் பேசுவதிலும், தர்மமாய் உள்ளதையே பேசவேண்டும். இது நான்காவதாகும்.

மனிதன் எப்படிப்பட்டவர்களுடன் சேருகிருனே, எப்படிப்பட்டவர்களுடன் வேலை செய்கிருனே, எப்படிப்பட்டவனுக ஆக விரும்புகிருனே, அப்படிப்பட்டவனுகவே ஆகிருன்.

எதெதிலிருந்து விலகுகிருனே, அததிலிருந்து விடுபடுகிருன். எல்லாவற்றிலிருந்தும் விலகினல், சிறிதும் துக்கமேற்படாது.

எல்லோருடைய க்ஷேமத்தையும் கோரி, ஒருவருக்கும் கெடுதல் செய்ய மனமற்றவனுய் இருந்து கொண்டும், ஸத்யம் பேசிக் கொண்டும், மென்மையும் அடக்க

முள்ளவனும் இருப்பவன் உத்தம புருஷனுவான்.

எவன் பயனில்லாத இன்சொல்லைப் பேசுவதில்லையோ, கொடுப்பதாகச் சொன்னுல் கொடுத்துவிடுவானே, பிறருடைய குற்றத்தை அறிவானே. அவன் மத்யமபுருஷனுவான்.

தன்னம்பிக்கையும் இல்லாமல், மற்றவர்கள் நல்லது சொல்வதையும் நம்பாமல், நண்பர்களையும் விட்டுவிட்டு இருப்பவன் அதமஞன மனிதன்.

எவன் தனக்கு ஸம்பத்தை விரும்புகிருனே, அவன் உத்தமர்களையே ஆச்ரயிக்கவேண்டும். அவசியமானசமயமேற்பட்டால், மத்யமர்களையும் ஆச்ரயிக்கலாம். அதமர்களை ஒரு பொழுதும் அடுக்கக்கூடாது.

○

கங்கைவேடனும் காளத்திவேடனும்



ஸ்ரீ திருமுருக
கிருபானந்த வாரியார்

அன்பு என்ற ஒன்றுடன் கூடியிருப்பது தான் உயிர் வாழ்க்கை. அன்புஇல்லையானல், அவ்வுடம்பு, எலும்பின் மீது தோல் போர்த்த ஒரு பொம்மை போன்றது என்கின்றார் திருவள்ளுவர்.

ஆகவே, உயிர் வாழ்க்கைக்கு உயிராக இருப்பது அன்பு. உயிர்களின் சிகரமாக இருப்பவன் மனிதன். ஆகவே மனிதன் அன்பு என்ற ஒன்றை மேற்கொள்ளவில்லையானல், அவன் மனிதனுக மாட்டான்.

இனி, இந்த அன்புடைமை உயர்ந்த பண்புடையார்பால் காணப்படும்.

கருடனுடைய குஞ்சு பறக்குமானல், அதில் வியப்பு ஒன்றும் இல்லை. ஆமைக்குஞ்சு ஆகாயத்தில் பறந்து போனுல், அது ஆச்சரிய மல்லவா?

அதுபோல், கொலை புலை பரம்பரையாகவே இல்லாத அந்தணர் சைவர் முதலியோர் அன்புடையவராக இருந்தால், அது ஆச்சரியம் ஆகாது. பரம்பரையாகவே கொலை புலை முதலிய கொடுங் குணங்கள் நிறைந்த வேடர் மரபில் ஒருவர், அன்புக்கு உறைவிடமாக, அன்பின் சிகரமாக விளங்குவரானல்; அது மிகமிக ஆச்சரியமாகும்.

கங்கைக் கரையில் வாழ்ந்த குகனும், காளத்தியில் அருள் பெற்ற கண்ணப்பரும், வேடர் குலத்தில் வந்தவர்கள்.

இருவர்களும் அன்புருவமாகத் திகழ்ந்தார்கள்.

மாணிக்கவாசக சுவாமிகள், நால்வரில் நனி சிறந்தவர். சன்மார்க்க ஆசிரியர். கல்லுங் கசிந்துருகுமாறு, கனியமுதம் அன்ன திருவாசகத்தைப்பாடியருளினர். இத்தகைய பெருமானர் வியந்து பாராட்டுகின்றார் கண்ணப்ப நாயனரை.

அவர் பாராட்டுகின்ற அழகே ஒரு தனிச் சுவையானது.

"சமானமில்லாதவர்கள் இரு வர்" என்கின்றார்.

அந்த இருவர் யார்?

"கண்ணப்பர் ஒன்று, நான் ஒன்று" என்கின்றார்.

"கண்ணப்பருக்கும் இந்த உல கிலே நிகர் கிடையாது. எனக்கும் இந்த வுலகில் நிகர் கிடையாது" என்றால், மணிவாசகர் தற் பெருமை பேசுகின்றாரா என்று தோன்றும். இல்லே, இல்லே.

"அன்புடையவர்களிலே கண்ணப்பருக்குச் சமானம் இல்லே. அன்பு இல்லாதவர் களிலே எனக்குச்சமானம்இல்லே" என்கின்றார் அவர்.

ஆ! ஆ! என்ன அருமை; அன் பின் உச்சியில் கண்ணப்பரும், அதன் அடியில் மாணிக்கவாச கரும் நிற்கின்றார்கள். அந்தப் பாடல் இது:

> கண்ணப்பன் ஒப்பதோர்
> அன்பின்மை கண்டபின்
> என்னப்பன் என்னெப்பில்
> என்னேயும் ஆட் கொண்டருளி
> வண்ணப் பணித்தென்னே
> வாவென்ற வான் கருணேச்
> சுண்ணப்பொன் னீற்றற்கே
> சென்றூதாய் கோத்தும்பி

மார்க்கத்தில் போட்டுத் தேய்ந்த பழஞ் செருப்பு, சிவ பெருமானுடைய புருவ நடுவில் ஏறியது.

கொப்புளித்து உமிழ்ந்த தண் ணீர், பரமேச்வரனுக்குச் சிறந்த அபிஷேகமாயிற்று.

சிறிது கடித்து எச்சில் செய்த மாமிசத்துண்டு, உயர்ந்த தேவா மிர்தம் போல் ஆயிற்று.

வனவேடன் பக்த சிகாமணி யாக ஆனன்.

ஆதலால் பக்தி என்னதான் செய்யாது? இது பரம ஆச்சரியம் என்று கூறுகின்றார் ஆதிசங்கரர்.

கண்ணப்ப நாயனரை, சமய குரவர் நால்வர்களும் நக்கீரர் முதலிய பெரும் புலவர்களும் புகழ்ந்து பாடியிருக்கின்றார்கள்.

இவர் அன்புருவமாகி, இறை வன் மீது எல்லேயில்லாத அன் பினேச் செலுத்தி, ஆறுநாள் தொண்டுசெய்து முத்தி பெற்றார்.

இனி கங்கை வேடர்குல திலக ராம் குகப்பெருமானேப் பற்றிச் சிந்திப்போம்.

குகன் உயர்ந்த அன்புக் கருவூல மாக விளங்கினன்.

இராமரிடம் அன்பு செலுத்திய வர்கள் பலர். அநுமான், சுக்ரீ வன், விபீஷணன், ஜடாயு, சபரி, சரபங்கர், பரத்துவாசர் முதலி யோர் ஸ்ரீராமரைநேசித்தார்கள். ஆனல், பயன் ஒரு சிறிதுங் கரு தாது நேசித்தவன் குகன்; நிஷ் காம்ய பக்தி செய்தவன்.

"நாட்டிலே குகனர் செய்த நன்மையை நயக்கமாட்டேன்" என்று சுக்ரீவன் கூறி வியந்து பாராட்டுகின்றன்.

மிகச் சிறந்த நண்பனுகக் குகன் விளங்கினன்.

அதனல் இராமன், அவ்வேடர் குலத்தவனே, ஆசாரம் கல்வி முத

லிய ஒன்றினுலும் தகுதி இல்லாத அவனே, தன் தம்பி என்று கூறித் தழுவிக்கொண்டார்.

''ஆழநீர்க் கங்கை அம்பி
கடாவிய
ஏழை வேடனுக் கெம்பி நின்
தம்பி; நீ
தோழன்; மங்கை கொழுந்தி
யெனச் சொன்ன
வாழி நண்பினை உன்னி
மயங்குவாள்''

என்று சீதையின் உள்ளத்தில் வைத்துக் குகனுடைய பெருமையை விளக்குகின்ருர்.

குகனைப் பற்றி இலட்சுமணர் இராமரிடம் கூறும் போது, ''சுற்றமுந்தானும் உள்ளத் தூயவன் தாயின் நல்லான் என்று குறிப்பிடுகின்ருர்.

இப்படி குகன் தலை சிறந்த அன்பனுக விளங்கியதற்குக் காரணம், பண்டைப் பிறப்பின் தவப்பயனுகும்.

கண்ணர் முற்பிறப்பில் அர்ச்சுனன் என்பதை நினைவு கூர்தல் வேண்டும்.

அதுபோல், குகனைப் பற்றியும் சிந்திக்கத் தக்க செய்தியுண்டு

கங்கைக் கரையில் ஒரு முனிவர் மாதவம் புரிந்து கொண்டிருந்தார்.

ஒரு மன்னன் வேட்டையாடினுன். பாணம் குறி தவறி, ஒரு முனிவரைக் கொன்று விட்டது. அதனுல் பிரம்மகத்தி அவனைத் தொடர்ந்தது.

அதற்கு அஞ்சியஅரசன், கங்கைக் கரையில் தவஞ்செய்யும் முனிவரிடம் பிராயச் சித்தங் கேட்டு உய்வான் வேண்டி வந்தான்.

அவ்வேளையில், முனிவர் ஆசிரமத்தில் இல்லை.

அவருடைய தவப் புதல்வன், கூரிய மதியும் சீரிய நலமும் பூண்டவன். வயது பன்னிரண்டு.

அப்புதல்வன் அரசனை வரவேற்று, ''உமக்கு என்ன குறை?'' என்று வினவினுன்.

''குழந்தாய், நான் இந்த நாட்டு மன்னன்; வேட்டையாடினேன். குறி தவறிய கணை ஒரு அந்தண முனிவரைக் கொன்று விட்டது. அதனுல் பிரம்மகத்தி என்னைத் தொடர்ந்து வருத்துகின்றது. அது தீரும் வழியைக் கேட்க வந்தேன். உன் தந்தை இன்மையால் வருந்துகின்றேன்.''

''அரசே! வருந்தற்க. அப்பாவம் தீரும் வழியை நான் கூறுவேன். என்னைச் சிறுவன் என்று கருதாதே. ஒரு சிறுவன் விளக்கை எடுத்துச் சென்ருல், இருள் விலகுந்தானே? விளக்குத் தான் உயர்வு, எடுத்தேகும் ஒருவன் சிறுவன் எனினும் குற்றமில்லை.

''ஆதலால், நான் உனக்குக் கழுவாய் கூறுவேன். இதோ இந்தக் கங்கையில் நீராடு. வட திசை நோக்கி நில்! சித்தத்தை ஒருமுகமாக்கி, காதலாகிக்கசிந்து கண்ணீர்மல்கி, 'முருகா, முருகா' என்று மும்முறை கூறு. பிரம்ம கத்திப் பாவம் தீரும்.''

அரசன் அதன்படி செய்து, பாவந்தீரப்பெற்று, முனிபுத்திரனைப் பணிந்து, துயர் தணிந்து நகரம் போனுன்.

பின்னர் முனிவர் வந்தார். தேர்ச்சுவட்டினை நோக்கி, ''யார் வந்தது?'' என்று கேட்டார்.

முனிமகன் நிகழ்ந்ததைக் கூறினுன். முனிவருடைய கண் சிவந்தது சீற்றமுற்ருர்.

''மூடனே! என்ன காரியம் புரிந்தாய்? உனக்கு முருக பக்தி யிருக்கின்றதா? அடாத காரியம் புரிந்துவிட்டாய்.

''நீ என் மகனா? மலையளவு பஞ்சுப் பொதியைக் கொளுத்த மூன்று தீக்குச்சி தேவையா?

''ஒருமுறை 'முருகா' என்று கூறினால், கோடி பிரம்மகத்திப் பாவந்தீருமே? ஒரு பிரம்மகத்தியைப் போக்க மூன்று முறை 'முருகா' என்று கூறவேணுமா? முருக நாமத்தின் பெருமையை நீ நன்கு அறிந்தாயில்லை. ஆதலால் வேடனாகப் பிறக்கக் கடவது'' என்று சபித்தார்.

அம்மைந்தன் நடுங்கித் தந்தையைத் தொழுதான். அவர் திருவுள்ளம் இரங்கி, ''நீ கங்கைக் கரையில் வேடர்குலத்தலைவனாகப் பிறப்பாய். முருகனுடைய நாமங்களில் ஒன்றாகிய குகன் என்ற பேருடன் விளங்குவாய். ஸ்ரீராமருடைய நண்பனாக வாழ்ந்து, முடிவில் முருகனுடைய திருவடி சார்வாய்'' என்று அருள் புரிந்தார்.

அன்தபடியே, அம்முனிவர் திருமகன் குகன் என்ற வேடர் பெருமானாகப்பிறந்தான் என உணர்க.

பெண் உருக்கொண்ட பெருமான்



ஸ்ரீவித்யா மார்த்தாண்ட
•
பிரம்மஸ்ரீ
C. V. ஸ்வாமி சாஸ்திரிகள்

ஸ்ரீ மஹாலக்ஷ்மியின் கடாக்ஷத்துக்குப் பாத்திரமான தேவர்கள், பெருங்களிப்பு அடைந்தார்கள். அவளுடைய கடாக்ஷத்தைப் பெறாத அசுரர்கள் கலக்கம் அடைந்தார்கள். அந்நிலையில், அவர்கள் தன்வந்தரியின் கையிலிருந்த அமிருத கலசத்தைப் பிடுங்கிக் கொண்டார்கள். உடனே தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் பெரும் போர் மூண்டது.

இதைப் பார்த்ததும், பிரம்மதேவர் தம்முடைய ஸத்யலோகத்துக்குச் சென்று விட்டார். பரமேஸ்வரன் கைலாஸத்துக்குப் போய் விட்டார். ஆனால், ஸகல லோகங்களையும் காப்பாற்றக் கடமைப்பட்டவரான மஹாவிஷ்ணு மட்டும் அங்கேயே இருந்தார். அவர் ஸ்ரீ பராசக்தியான லலிதாம்பிகையைத் தனக்கு அபேதமாக தியானம் செய்து, அவளைப் போலவே அதியற்புதமான பேரெழில் வாய்ந்த ஒரு பெண் வடிவத்தைப் பெற்றார்.

சிருங்கார ரஸத்திற்கு அதிதேவதை போல் காட்சியளித்த அந்த ஜகன் மோகினி, ஸர்வாலங்கார பூஷிதையாய், போர் புரிந்து கொண்டிருக்கும் தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் நடுவே வந்து நின்று, தன்னுடைய புன்னகையால் அவர்களுடைய உள்ளங்களை அபஹரித்தாள்.

உடனே அவ்விரு சாராரும் போர் புரிவதை நிறுத்திவிட்டு,

அவளையே மோஹத்தோடு நோக்கினார்கள்.

அவள் அசுரர்களைப் பார்த்து, "நீங்களும் தேவர்களும் ஒன்று கூடி, மிகவும் சிரமப்பட்டு அமிருதத்தைக் கடைந்தெடுத்திருக்கிறீர்கள். இப்போது இந்த அமிருதத்துக்காக நீங்கள் சண்டை போட்டுக் கொள்வது சரியல்ல. ஆகையால் அதை என் கையில் கொடுங்கள். நான் அதை முறைப்படி பகிர்ந்து கொடுக்கிறேன்" என்று கூறினாள்.

அவளுடைய அந்த இனிமையான பேச்சில் மயங்கி, அசுரர்கள் தம் வசமிருந்த அமிருத கலசத்தை அவள் கையில் கொடுத்து விட்டார்கள்.

அவள் அதை வாங்கிக் கொண்டு, தேவர்களையும் அசுரர்களையும் தனித்தனி வரிசையாக அமர்ந்திருக்கச் செய்து, முதலில் தேவர்களுக்கு அமிருதத்தைப் பரிமாறத் தொடங்கினாள்.

இடது கையில் அமிருத கலசத்தையும், வலது கையில் தங்கக் கரண்டியையும் ஏந்தியவாறு, தன் கைவளைகள் குலுங்க அவள் பரிமாறிக் கொண்டே வந்தாள்.

அப்போது, ராகு என்னும் அசுரன் ஒருவன், சூரியனுக்கும் சந்திரனுக்கும் நடுவே, தேவர்களின் வரிசையிலே தானும் ஒரு தேவனைப்போல் உட்கார்ந்திருந்தான்.

அவன் அப்படி உட்கார்ந்திருப்பதை, சூரியனும் சந்திரனும் அந்த மோகினிக்கு ஜாடையால் உணர்த்தினார்கள்.

உடனே மோகினி, தன் கையில் இருந்த கரண்டியால் ராகுவின் தலையை வெட்டினாள்.

ஆனால் அதற்குள் ராகு தனக்குப் பரிமாறப்பட்ட அமிருதத்தைச் சாப்பிட்டு விட்டிருந்தானாகையால், தலைதுண்டிக்கப்பட்டும் கூட அவன் இறக்கவில்லை. அவனுடைய தலையானது ஆகாயத்தைச் சென்று அடைந்தது.

இவ்வாறு அமிருதம் முழுவதையும் தேவர்களுக்கே அளித்து, அமிருதம் இல்லாத வெறும் கலசத்தை அசுரர்களுக்கு எதிரே வைத்து விட்டு, மோகினி மறைந்து போய் விட்டாள்.

அப்போதுதான், அசுரர்கள் தாம் மோகினியால் ஏமாற்றப் பட்டு விட்டதை உணர்ந்தார்கள்.

அவர்கள் கோபம் அடைந்து, தேவர்கள் மீது பாய்ந்தார்கள். தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் இடையே கடுமையான போர் மூண்டது.

அந்தப் போரிலே, தேவர்கள் தமக்கு அமிருத பானத்தால் கிடைத்த புதுமையான பேராற்றலின் காரணமாக, அசுரர்களைக் கொன்று குவித்தார்கள். கொல்லப்படாத அசுரர்கள் நாலாதிக்குகளிலும் சிதறி ஓடினார்கள்.

இந்திரன் மீண்டும் தேவலோகம் சென்று, தன் சிம்மாசனத்தை அடைந்து, முன் போலவே இராஜ்ய பரிபாலனம் செய்யத் தொடங்கினான். தேவர்களும் மிக்க மகிழ்ச்சி கொண்டவர்களாய், தமது வழக்கமான சுவர்க்க போகங்களில் திளைத்து வரலானார்கள்.

இங்கு இப்படியிருக்க, நாரதர் திருக்கைலாயம் சென்று, சிவபெருமானைத் தரிசித்தார்.

அப்போது சிவபெருமான், ''நாரதரே! தன்வந்தரியிடமிருந்து அசுரர்கள் அமிருத கலசத்தைப் பிடுங்கிக் கொண்டவுடன், தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் ஒரு பெரும் போர் மூண்டதே: அதன் முடிவு என்ன ஆயிற்று?'' என்று வினவினர்.

அதற்கு நாரதர், ''பிரபோ! தாங்கள் அறியாதது எதுவுமே இல்லே. இருந்தாலும் கேட்பதனுல் சொல்லுகிறேன்'' என்று தொடங்கி, திருமால் மோகினி வடிவம் எடுத்து அசுரர்களே ஏமாற்றித் தேவர்களுக்கு அமிருதம் வழங்கிய செய்தியை விரிவாக எடுத்து உரைத்தார்.

அந்தச் செய்தியைக் கேட்டதும், பரமேஸ்வரன் பார்வதி தேவியுடன் புறப்பட்டு, விஷ்ணுவைப் பார்ப்பதற்காகத் திருப்பாற்கடல் போய்ச் சேர்ந்தார்.

விஷ்ணுவும் அவரைப் பிரியத்தோடு வரவேற்று உபசரித்து, ''தாங்கள் வந்த காரியத்தைக் கூறவேண்டும்'' என்று கேட்டார்.

அப்போது பரமேஸ்வரன், ''மஹா யோகீஸ்வரராயும், ஸர்வ ஸௌபாக்கியங்களுடன் விளங்குகிற சுந்தரமூர்த்தியாயும் இருக்கும் தாங்கள், ஒரு பெரும் பேரெழில் வாய்ந்த ஜகன்மோகினியாக வடிவம் எடுத்தீர்களாமே? சிருங்கார ரசத்தின் சாரமாகவும், வாக்கு மனங்களுக்கு எட்டாததாகவும் உள்ள அந்த திவ்ய ரூபத்தை நான் பார்க்க ஆசைப்படுகிறேன்'' என்று வேண்டிக் கொண்டார்.

உடனே ஸ்ரீ மஹாவிஷ்ணு அங்கிருந்து மறைந்தார்.

அவர் எங்கு போய் விட்டார் என்று, பரமசிவன் நாலாபுறமும் தேடிப் பார்த்தார்.

அப்போது ஓரிடத்தில், ஒரு புதுமையான உத்தியான வனத்தை அவர் கண்டார்.

அசோக மரங்களில் நடனம் ஆடிக் கொண்டிருக்கும் மயில்களும், மாந்தளிரை உண்டு களிப்போடு கூவிக் கொண்டிருக்கும் குயில்களும், மந்த மாருதத்தால் அசையும் தாமரை மலர்கள் நிறைந்த தடாகங்களும், நறுமணம் கமழும் பல்வேறு வகையான அழகிய பூக்களிடையே ரீங்காரமிட்டுத் திரியும் வண்டுகளும் நிறைந்த அந்த உத்தியான வனத்திலே ;

ஒரு பாரிஜாத மரத்தின் அருகே ;

பால சூர்யனைப்போல் சிவந்த திருமேனியையும்,

செம்பஞ்சுக் குழம்பு இடாமலே சிவந்து விளங்கும் சிற்றடிகளேயும்,

விலே மதிக்க முடியாத பத்மராக மணிகளேப் போன்று ஒளி வீசுகிற நகங்களேயும்,

மன்மதனுடைய அம்புப் புட்டிலேப் போன்ற கணேக்கால் பிரதேசத்தையும்,

யானேயின் துதிக் கைகளேப் போன்ற துடைப் பிரதேசத்தையும்,

நீர்ச் சுழல்போலக் குழிந்திருந்த நாபிப் பிரதேசத்தையும்,

மூன்று ரேகைகளுடன் கூடிய உதரப் பிரதேசத்தையும்,

மிகவும் பருத்து விளங்கிய குச மண்டலங்களையும்,

வலம்புரிச் சங்கு போன்ற அழகிய கழுத்தையும்,

கண்ணுடி போன்ற முகத்தையும்,

சிவந்த இதழ்களையும்,

மல்லிகை மொக்குப் போன்ற பல்வரிசைகளையும்,

தாழம்பூவின் உள்ளிருக்கும் பெரிய தளம் போன்ற நீண்ட கண்களையும்,

அஷ்டமிச் சந்திரன் போல் விளங்கும் நெற்றித்தடத்தையும்,

கருமணல் போன்று நெளிநெளியான கேசபாரத்தையும் பெற்றிருந்த ஒரு நவயௌவன மங்கையானவள் ;

பாதங்களில் இனிமையாக ஒலிக்கும் சதங்கைகளை அணிந்தவளாய்,

இடுப்பிலே மிருதுவான மெல்லிய செந்நிறப் பட்டாடை உடுத்தவளாய்,

நகில் மண்டலத்திலே புரளும் முத்து மாலைகளைத்தரித்தவளாய்,

பெரிய முத்துக்களால் சோபிக்கும் நாஸாபரணங்களையும், மோதிரங்களையும் புனைந்தவளாய்,

காதுகளில் ஒளி வீசுகின்ற கனக தாடங்கங்களை உடையவளாய்,

நெற்றியிலே கஸ்தூரி திலகத்தையும், சீமந்த சிந்தூரத்தையும் பெற்றவளாய்,

திக்கெட்டிலும் திவ்ய மணம் கமழும் கற்பூர வீடிகையை மெல்லுபவளாய்,

தலையில் சந்திரகலையைத் தாங்கியவளாய்,

கண்கள் மதத்தால் சுழலுபவளாய்,

பல்வேறு வகையான நவரத்னுபரணங்களால் அலங்கரிக்கப் பட்டவளாய்,

தன் மார்பகத்தே புனைந்துள்ள மாலைகள் அசைந்தாடப் பந்து விளையாடிக் கொண்டிருப்பதைப் பார்த்தார் பரமேஸ்வரன்.

உடனே அவர் பார்வதியை விட்டுவிட்டு, அந்தப் பாவையை நோக்கி ஓடினுர்.

அவர் கையில் பிடிபடாதவாறு, அந்தப் பாவையும் ஓடினுள்.

ஆனுல் பரமசிவன் விடவில்லை. மிகவும் சிரமப்பட்டு, அவளைப் போய்ப் பற்றிப் பிடித்தார்.

பிடித்து, முற்றிலும் பரவசப் பட்டவராய் அவளை ஆலிங்கனம் செய்து கொண்டார்.


அப்போது, அவருடைய ரேதஸ்ஸிலிருந்து தோன்றியவர்தான், மகா பலவானுகிய தர்மசாஸ்தா என்னும் ஹரிஹரபுத்ரர்.

சாஸ்தா தோன்றியவுடன், அந்த மோகினியும் மறைந்து விட்டாள். பரமசிவனும் கைலாசம் போய்ச் சேர்ந்துவிட்டார்.

—என்று, இப் புண்ய கதையை அகஸ்தியருக்குக் கூறி முடித்தார் ஹயக்ரீவர்.

★

கலிபுருஷனும் யமதர்மனும்



வேத வேதாந்த
வித்வரத்னம்
பிரம்மஸ்ரீ

ஆர். முத்துக்கிருஷ்ண சாஸ்திரிகள்

பாதங்களை நன்றாகக் கழுவி மிகவும் சுத்தனாக இருந்து கொண்டே ஜபம் ஹோமம் அர்ச்சனம் இவற்றைச் செய்ய வேண்டும். ஏனென்றால் பாதசௌச மற்ற, அதாவது பாதங்களை அலம்பாமலிருந்த நளனிடம் கலி புருஷன் பிரவேசித்தான்.

ஸ்மிருதிகளில் எந்த வைதிக கர்மாவைச் செய்யத் தொடங்கினாலும், பாதங்களையும் கைகளையும் சுத்தம் செய்தபின் தொடங்க வேண்டும் என்று விதிக்கப் பட்டிருக்கிறது. அவ்வாறு செய்யாவிடில், அக்கர்மாக்கள் பயனற்றவை என்பது மட்டுமல்லாமல், பலவித தீங்குகளும் விளையக்கூடும் என நள சரித்திரத்திலிருந்து தெரியவருகிறது.

தமயந்தி ஸ்வயம்வர காலத்தில், தமயந்தியை மணந்து கொள்ள ஆசைகொண்டு, இந்திரன், யமன், வருணன், அக்னி முதலிய தேவர்களும் வந்திருந்தனர். நளனும் வந்திருந்தான்.

ஆனால் தமயந்தி மற்ற தேவர்களை விரும்பாமல், நளனையே வரித்துவிட்டாள். தேவர்களும் அவளுடைய மன உறுதியையும் நளனுடைய பல நற் குணங்களையும் கண்டு மெச்சி, நளனுக்கு எட்டு வரங்களை யளித்துவிட்டு, அவரவர்களுடைய இருப்பிடங்களை நோக்கிச் சென்றனர்.

அப்படிச் செல்லுகையில், தமயந்தியின் ஸ்வயம்வரத்தைக் குறித்து வந்துகொண்டிருக்கும் கலிபுருஷனையும் த்வாபரனையும் கண்டனர்.

"எங்கு செல்லுகின்றாய்?" என தேவேந்திரன் கலியை நோக்கிக் கேட்கவே;

"தமயந்தி ஸ்வயம்வரத்திற்குச் செல்லுகிறேன். எப்படியாவது அவளை மணந்துகொள்ள வேண்டுமென்பது என்னுடைய ஆசை" எனக் கலி பதில் உரைத்தான்.

இந்திரன்: "அவளுடைய ஸ்வயம்வரம் முடிந்து விட்டது. அவள் எங்கள் முன்பே நளனை வரித்துவிட்டாள். அவ்விருவருக்கும் விவாஹமும் பூர்த்தியாகி விட்டது. இனிச் சென்று என்ன பயன்?"

கலி: "ஹா! அப்படியா! என்ன அநீதி! தங்களைப்போன்ற தேவர்களையெல்லாம் தள்ளி விட்டு, மனிதனையா அவள் வரித்தாள்! அப்படிச் செய்த அவளை நாம் சும்மா விட்டு விடலாமா? தண்டிக்கவேண்டாமோ?"

இந்திரன்; "அப்பா! கோபித்துக் கொள்ளாதே! எங்களுடைய அனுமதியைப் பெற்றுத்தான், அவள் அவ்வாறு செய்தாள். அதில் தவறு என்ன? எல்லா நற்குணங்களும் நிரம்பிய நளனை யார்தான் வரிக்கமாட்டாள்? அவன் எல்லா தர்ம சூக்ஷ்மங்களையுமறிந்தவன். நான்கு வேதங்களையுமுணர்ந்தவன். அவனுடைய கிருஹத்தில் பிரதிதினம் நடைபெறும் யாகங்களில், தேவர்கள் மிகவும் திருப்தியடைகின்றனர். அஹிம்ஸா தர்மத்தில் மிகவும் ஈடுபட்டவன். உண்மையையே உரைப்பவன். தைர்யம், அறிவு, தபஸ், சாந்தி முதலிய பல நற்குணங்களுக் கிருப்பிடமானவன். அப்படிப்பட்ட உத்தம மனிதனை ஒருவன் சபிக்க விரும்புனல், தன்னைத் தானே சபித்துக் கொண்டதாக ஆகும். அவனை சபிப்பதும் தண்டிப்பதும் கொடிய பாபமாகும். அப்படிச் செய்தவன் நிச்சயமாக நரகத்தையடைவான்."

பிறகு கலி, "இந்த துஷ்டன் நளனை நான் விட்டுவிடப் போவதில்லை. அவனை இராஜ்யத்தை இழக்கும்படி செய்து, அவன் மணந்துகொண்ட தமயந்தியுடன் சுக வாழ்க்கையை நடத்த முடியாமலும் செய்து விடுகிறேன். நீயும் எனக்கு உதவியாக, அவன் சூதாட்டத்திற்கு உபயோகிக்கும் சொக்கட்டான் காய்களுள் புகுந்துகொள்" என த்வாபரனிடம் சொல்லி, அவனுடன் நளனிருக்கும் இடத்தை நோக்கிச் சென்றான்.

ஆனல் அவனிடம் திடீரெனப் பிரவேசிக்கக் கலிபுருஷனல் முடியாததால், பல வருஷங்கள் காத்துக்கொண்டே இருந்தான்.

ஆசார சீலனிடம் கலிபுருஷன் ஒருபொழுதும் பிரவேசிக்க முடியாது. ஆதலால், கலிபுருஷன் சமயத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்க வேண்டியதாயிற்று.

பதினெரு வருஷங்களுக்குப் பின், பன்னிரண்டாவது வருஷத்தில், நளனிடம் பிரவேசிக்கக் கலிபுருஷனுக்கு ஓர் சந்தர்ப்பம் வாய்த்தது.

அதாவது, ஒரு ஸமயம் அவசியம் பாதப்பிரக்ஷாலனம் செய்ய வேண்டிய காலத்தில், அதைச் செய்யாமலே ஸந்தியோபாஸனத்தையும் செய்யத் தொடங்கினன். அப்பொழுது கலிபுருஷனல் அவனிடம் பிரவேசிக்கமுடிந்தது. பிரவேசித்தான். அதனல் நளன் இராஜ்யத்தையும் மனைவியையும் இழந்தான். பலவித துன்பங்களையும் அனுபவித்தான்.

ஆதலால் பாதசௌசம் செய்து மிக சுத்தனுக இருந்துகொண்டே கர்மாக்களைச் செய்யத் தொடங்க வேண்டும் என சித்திக்கின்றது.

மாண்டவ்யர் என்ற ஓர் சிறந்த பிராம்மணன், வனத்தில் தனது ஆசிரமத்திற்கு அருகில் உள்ள ஓர் மரத்தடியில் தவம் புரிந்துகொண்டிருந்தார்.

இரு கைகளையும் மேலே தூக்கிக் கொண்டு, யாருடனும் பேசாமல், பல காலமாக அவ்விடத்திலேயே வீற்றிருந்தார்.

ஒரு சமயம் பல திருடர்கள் ஓர் அரசனுடைய அரண்மனையில் ஏராளப் பொருள்களைத் திருடிக் கொண்டு. அந்த மாண்டவ்யரின் ஆசிரமத்திற்குள் திருடிய பொருள்களுடன் ஒளிந்துகொண்டிருந்தனர்.

சற்று நேரத்திற்கெல்லாம், அரசனுடைய சேவகர்கள் திருடர்களை பலவிடங்களிலும் தேடிக் கொண்டு, மாண்டவ்ய முனிவரின் ஆசிரமம் வந்து சேர்ந்தனர்.

" திருடர்கள் இங்கு வந்தார்களா? எந்த வழியாகச் சென்றனர் " என்று அந்த முனிவரிடம் கேட்டனர்.

அவர் ஒன்றும் சொல்லாமல் மௌனமாக இருந்தார்.

உடனே, அரசரின் சேவகர்கள் அந்த ஆசிரமத்திற்குள் புகுந்து பார்த்தனர்.

அங்கு திருடர்களையும் பொருள்களையும் காணவே, அந்த முனிவரும் இந்தத் திருட்டில் சம்பந்தப் பட்டிருக்கக்கூடும் 'என்ற சந்தேஹத்தின் பேரில், அவரையும் அந்த திருடர்களையும் அரசனிடம் கட்டி இழுத்துக்கொண்டு வந்தனர்.

அரசனும், அவர்கள் எல்லோரையும் சூலத்தில் ஏற்றிக் கொன்றுவிடும்படி உத்தரவிட்டான்.

அந்த சேவர்களும் அவ்வாறே செய்துவிட்டனர்.

சூலத்தில் ஏற்றப்பட்ட மற்ற திருடர்கள் அனைவரும் இறந்து விட்டனர்.

மாண்டவ்யர் மட்டும், அவருடைய தவத்தின் மகிமையால், உணவின்றியே பல காலம்வரை சூலத்திலேயே உயிருடன் வாழ்ந்து வந்தார்.

அதையறிந்த அரசன், மந்திரிகளுடன் அவர் அருகில் சென்று, தாம் செய்த குற்றத்தை மன்னிக்க வேண்டும் என வேண்டிக் கொண்டு, அவரை சூலத்திலிருந்து விடுவிக்க முயன்றான்.

ஆனால் அந்த சூலத்தை அவர் உடலிலிருந்து எடுக்க முடியவில்லை. உடனே அந்த சூலத்தை அடியில் வெட்டிவிட்டான். சூலத்தின் நுனி மட்டும் அவருடைய கழுத்திலேயே பதிந்திருந்தது.

ஆதலால் அன்றுமுதல் அவர் ''ஆணிமாண்டவ்யர்'' என உலக மக்களால் அழைக்கப்பட்டார்.

''ஆணி'' என்றால் சூலத்தின் நுனி என்று பொருள். அத்துடனேயே அவர் எப்பொழுதும்

இருந்து வந்ததால், அவருக்கு ''ஆணி மாண்டவ்யர்'' எனப் பெயர் ஏற்பட்டது.

உடனே அவர் யமலோகம் சென்று, ''எதற்காக என்னை இவ்வாறு தண்டித்தாய்?'' எனக் கேட்டார்.

உலகில் அரசர்களிடம் எல்லா திக்பதிகளுடைய அம்சங்களு மிருக்கின்றன. அவற்றுள், யமனுடைய அம்சமே தண்டிக்கின்றபடியால், தன்னுடைய தண்டனைக்கு யமனே பொறுப்பாளி எனக்கருதி, யமனிடம் சென்று இவ்வாறு வினவினுர்.

யமன்: ''நீங்கள் பல பூச்சிகளுடைய இறக்கைகளில் ஊசியை எடுத்துக் குத்தினீர்கள், அதன் பயனுகவே நீங்களும் இப்பொழுது சூலத்தால் குத்தப்பட்டீர்கள். தானம் சொற்பமாக இருந்தாலும் அது எவ்வாறு பல மடங்கு பயனை அளிக்கின்றதோ, அதுபோல் அதர்மம் சொற்பமாக இருந்தாலும் அது பல துன்பங்களை அளிக்கின்றது.''

ஆணிமாண்டவ்யர்: ''எப்பொழுது என்னுல் அவ்வித பாவம் செய்யப் பட்டது?''

யமன்: ''தாங்கள் சிறு பையனுக இருக்கையில்.''

ஆணிமாண்டவ்யர்: ''பிறந்து பன்னிரண்டு வருஷங்கள் வரை பாலன் என்று பெயர். அதுவரை அவன் எவ்விதக் குற்றத்தைச் செய்தாலும் அது குற்றமாகாது. அதற்காக அவனை தண்டிப்பதும் தவறு. தர்ம தத்துவத்தை உணராமல் நீ இவ்வாறு என்னை தண்டித்தபடியால், நான்காவது வர்ணத்தில் ஓர் மனிதனுகப் பிறக்கக் கடவாய்.''

அவருடைய சாபத்தால் மனிதராகப் பிறந்தவர்தான் விதுரர். அவர் நான்காவது வர்ணத்தைச் சேர்ந்தவராயினும், தர்மராஜனே விதுரராகத் தோன்றியிருக்கின்றபடியால்தான், தர்ம சாஸ்திரத்திலும் அர்த்த சாஸ்திரத்திலும் நிபுணராகவும், காமம், குரோதம் முதலியகெட்ட குணங்கள் அற்றவராயும், பரம சாந்தராயும், சிறந்த அறிவாளியாகவும் விளங்கிவந்தார். ஸ்ரீ கிருஷ்ணனுடைய அளவுகடந்த பிரேமைக்குப் பாத்திரமானுர். அவர் திருதராஷ்டிரருக்குச் செய்த உபதேசமே ''விதுர நீதி'' என்று மிகப் பிரசித்திபெற்று அனைவராலும் போற்றப்பட்டு வருகிறது.

இவ்வாறு யமனையே சபிக்குந் திறமையுள்ள மாண்டவ்யரை ''திருடன்'' என்று கட்டி இழுத்து வந்து சூலத்தில்ஏற்றியதென்பது, இரவில் சஞ்சரித்ததால் ஏற்பட்ட வினை. ஆதலால், நிசியில் இங்குமங்கும் திரிந்து, ஆலோசிக்காமல் திடீர் என எக்காரியத்தையும் செய்யலாகாது.

○

இலக்கியப் பொன் மொழிகள்

மகாகவி காளிதாஸர்

பொன்னின் தூய்மையோ மாசோ நெருப்பிலிட்டால் தெரியும்.

நல்ல விஷயத்திலே செய்யும் முயற்சி பயன்படுகிறது.

வணக்கத்தினல் அடங்குவதன்றே பெரியோரின் சினம்?

மேகங்களைப் போல், நல்லோர் எடுத்துக்கொள்வதும் திரும்பக் கொடுப்பதற்கேயன்றே?

மாறி மாறித் தேவர்களால் பருகப்பட்ட சந்திரனுக்கு, தன்கலைகள் குறைவதே வளர்வதை விடப் போற்றத்தக்கதல்லவா?

வேறு வேறுபட்ட சுவைகளையுடையது உலகம்.

மனமானது முற் பிறப்பிலிருந்த சேர்க்கையைத் தெரிந்து கொள்ளும்.

ஈசன் நினைத்தால் ஒவ்வோரிடத்தில் நஞ்சும் அமுதாகும், அமுதும் நஞ்சாகும்.

மடிவதே உடலெடுத்தோருக்கு இயல்பு; உயிர்த்திருப்பதுதான் இயற்கைக்கு மாறுபட்டது என்று அறிஞரால் கூறப்படுகிறது.

பிராணி ஒரு கணம் மூச்சு விட்டுக்கொண்டிருப்பதும், அதன் பேறே ஆகும்.

படித்தோரும் ரஜோகுணத்தால் கண்மூடப் பெற்றவராய், அடிவைக்கக்கூடா விடத்திலும் அடியெடுத்து வைப்பர்.

தடையின்மையே காரியம் கைக்கூடப்போவதற்கு அறிகுறி.

தேஜஸ்விகள் விஷயத்தில் வயது கவனிக்கப்படுகிறதில்லை.

வெள்ளத்தின் வேகத்தால் வேர் பறிக்கப்பட்ட ஆற்றங்கரை மரத்தை, மெள்ள வீசும் காற்றுக் கூட வீழ்த்துகிறது.

நற்காலத்தில் துவக்கப்பட்ட செயல்முறைகள், பயனைப் பயக்கின்றன.

புகழைச் செல்வமாய்க் கொண்டோருக்கு, புகழ் தம் உடலைக் காட்டிலுமே பெரிதாயிற்றே? புலப்பொருள்களைவிடப் பெரிதென்று சொல்லவும் வேண்டுமோ?

இளமை, அழகு, செல்வம்— இவற்றில் ஒவ்வொன்றும் இறுமாப்பிற்குக் காரணம்.

வெறும் நீதி பயங்கொள்ளித் தனமாகும். வெறும் வீரமும் மிருகத்தனமாகும்.

இனிய சிற்றின்பங்களால் இழுத்துச்செல்லப்பட்ட புலன்களை, அவற்றினின்றும் திருப்புவது சிரமம்.

சந்திரனின் கிரணங்களில் களங்கம் முழுகி மறைவது போல், ஒற்றைத் தோஷம் குணக்கும்பலில் அமுங்கி மறைகிறது.

தன் வேண்டுகோள் மறுக்கப் பட்டுவிடுமோ வென்ற ஐயத்தினால், தான் விரும்பும் பொருளைக் குறித்தும் நல்லோன் நடுநிலையையே அடைகிறான்.

எவர்கள் மனமானது கலங்குவதற்கு வேண்டிய காரணமிருப்பினும் கலங்குவதில்லையோ, அவரே தீரர் ஆவர்.

பொல்லான் பதில்தீங்கினால் ஒய்வானே அல்லாது, நன்மையால் ஒயமாட்டான்.

யஜமானர்களுக்குத் தம் ஏவலரிடம் ஆக வேண்டிய காரியத்தையொத்தவாறு, அவர்களது ஆதரவும் (ஒருவரைவிட்டு ஒருவரிடம்) நிலைபெறாது பெயர்ந்து கொண்டே இருக்கும்.

மனிதருக்குப் புகழ் ஏற்படுவதற்கு, அவர் செய்யும் காரியம் சிறந்ததன்றாயினும், மற்றொருவனால் செய்ய முடியாததாக இருக்கவேண்டும்.

உலகைப் படைக்கும் பிரமனின் முயற்சி, குணங்களையெல்லாம் பூர்ணமாக அமைப்பதில் பெரும்பாலும் நோக்கமற்றிருக்கிறது.

தம்மைத் தாமே அடக்கியாள்வோருக்கு, இடையூறுகள் ஒரு போதும் நிஷ்டையைக் கலைக்க மாட்டா.

உற்றார் முன்பு துயரம் மடை திறந்துவிட்டது போலல்லவா வருகிறது?

மாந்தருக்குக் காதலிகளிடம் அன்பு நிலையற்றதாயிருக்கும்; நண்பரிடம் அவ்வாறு இராதல்லவா?

தான் அடைய விரும்பும் பொருளில் உறுதியான நிச்சயத்தைக் கொண்ட மனத்தையும், பள்ளத்தைக் குறித்தோடும் நீரையும், யாரே திருப்பவல்லார்?

அறத்தால் முதிர்ந்தோர் விஷயத்தில், வயது கவனிக்கப்படுகிறதில்லை.

நடுநிலையில் ஆழ்ந்த மனத்தோரும், மேனியிற் சிறந்தோர் வந்தால், அவரைக்குறித்து கௌரவமிக்க (உபகாரச்) செயல்களைச் செய்வார்கள்.

உடலன்றோ அறஞ்செய் கருவிகளில் முதன்மை பெற்றது?

இரத்தினம் (யாரையும்) தேடிப் போவதில்லை; அது அல்லவோ தேடப்படுவது?

மனவிருப்பங்களுக்குச் செல்லக் கூடாத இடம் இல்லையே!

உலகில் சாதாரணமாய்க் காணப்படுவது போலில்லாமலும், நினைக்க முடியாத காரணங்களைக் கொண்டதாயுமுள்ள மஹாத்மாக்களின் நடத்தையை, சிற்றறிவினர் பகைப்பர்.

பெரியோரைத் தூற்றுகிறவன் மட்டுமன்று, அவனுக்குச் செவி சாய்ப்பவனும் பாவத்தை யடைகிறான்.

(ஒருவர் எடுத்துக்கொண்ட) சிரமம், பயன்பெற்றதும் அது அவருக்குப் புத்துயிர் அளித்து விடுகிறது.

பெரும்பாலும், தன் குணங்களில் உயர்ந்தவர் காட்டும் ஆதரவு, ஒருவனுக்குத் தன்னிடம் நம்பிக்கையை உண்டுபண்ணுகிறது.

நல்லோர் மூலம் ஏற்பட்ட சேர்க்கைகள் தவறிப்போகா.

தூயவர் எங்கே தங்குகிறார்களோ, அதைத் தானே 'தீர்த்தம்' என்று சொல்லுகிறார்கள்?

நற்கணவனிடம் ஒப்புவிக்கப்பட்ட பெண்ணைக் குறித்து, தந்தைக்குத் துயரமில்லை.

காரியத்தை யறிந்தவர் தக்க காலத்தில் யஜமானரிடம் செய்து கொள்ளும் விண்ணப்பம், பயனுடையதாகிறது.

தன் கணவனுக்கு முற்றும் இசைந்தவளாவதாலன்றோ, மணமான பெண் தன் தாயின் மனத்துயரைப் போக்குகிறாள்?

காலத்தின் கேட்டினால் ஏற்பட்ட மாறுபாடு, தூய்மையுடையோரிடம் நீடித்திருக்காது.

●

மனம்

எல்லா முயற்சிகட்கும் முன்னோடியாயிருப்பது மனம் ; உணரும் திறன்கள் அனைத்தினும் மிக மிக உயர்ந்ததும் மனம். தொந்தக் கருத்துக்கள் அனைத்தும் உதிக்கும் இடமும் மனமே.

காட்சிகள் அனைத்திற்கும் மனமே தூதன், வியாவகாரிகப் பிரபஞ்சத்திலுள்ள எல்லா மூலப் பொருள்களினும் மிக நுண்ணியது மனமே. புறத்தே உருவைக் காணும் உணர்வெல்லாம், மனத்திலே உற்பத்தியாவன. தூய உள்ளத்தோடு பேசுபவனோ செயல் புரிபவனோ. — அவனிடம் அவனது சொந்த நிழலைப் போன்றே ஆனந்தம் உறையும்.

''பிறர் என்னைப் பகைக்கின்றனர். என்மீது அவநம்பிக்கை கொள்கின்றனர். என்னைத் தவறாகக்கருதுகின்றனர். என்னை வஞ்சிக்கின்றனர் ''— இத்தகைய நினைவுகட்குத் தன் உள்ளத்திலே இடங் கொடுப்பவன், தன்மீது அழிவைச் சுமத்தும் ஏதுக்களினின்றும் ஒருபோதும் நீக்கம் அடையான்.

தன்னை வென்றவன், தன்னிலும் ஆயிரமடங்கு பெருவலியுற்ற ஓராயிரம் பகைவர்களை வென்றும் தனது உணர்ச்சிப் பகுதிக்கு அடிமையாகி இருப்பவனைக் கட்டிலும், மெய்யாகவே வெற்றிமிக்க வீரனாவான்

— பகவான் புத்தர்

கணபதி முதல் சண்டேசர் வரையில்

கோயிலில் விநாயகரது ஸ்தானம் கன்னி மூலையாகும். நாம் செய்த குற்றங்கள் பாவங்களாக உருண்டு திரண்டு உருக்கொண்டு நிற்கின்றதாகத் தேங்காயைப் பாவித்து, அவை விநாயகர் வணக்கத்தால் உடைந்து சிதறின என நினைத்து உடைக்கப் படுவதே சிதர்தேங்காய் எனப்படுவது.

விநாயகர் வணக்கம் முடிந்த பின்னர், நந்திதரிசனம் செய்தும், துவார பாலகர்கள் தரிசனம் செய்தும், சந்நிதியிற் சென்று நின்று இறைவனை வணங்கித் தோத்திரப்பாக்கள் கூறுதல் வேண்டும்.

இங்கு, தேங்காய் பழம் முதலிய நிவேதனப் பொருள்களைக் கொடுத்து நிவேதிக்கச் செய்யலாம். அருச்சனையும் செய்விக்கலாம். கற்பூர தரிசனம் செய்து பிரசாதம் வாங்கித் தரித்துக்கொண்டு, மூலத்தான மூர்த்தியை நன்றாய் மனத்தில் பதியவைத்து, எலும்புகளெல்லாம் நெக்குநெக்குருகக் கண்ணீர் அருவிபோல் பாயக் கசிந்து கசிந்துருகித் துதித்து, வெளிவரல் வேண்டும்.

பின்னர், அம்பிகை சந்நிதியிலும் அவ்வாறே வணங்குதல் வேண்டும். அதன் பின் உட்பிராகாரங்களிலிருக்கும் ஒவ்வொரு மூர்த்தியையும் வணங்கிக் கொண்டே வலம் வருதல் வேண்டும்.

பரமேசுவரன் கல்லாலின்கீழ் சனகர் முதலிய நால்வருக்கு உபதேசஞ் செய்ய எழுந்தருளிய குருமூர்த்தமே, தக்ஷிணாமூர்த்தி திருவுருவமாகும். அவர், தம் சுட்டுவிரலைப் பெருவிரலோடு சேர்த்து, மற்ற மூன்று விரல்களையும் அகல விட்டுக் காட்டும் சின் முத்திரையால், உயிர்கள் ஆணவம், கன்மம், மாயையாகிய மூன்றினை

யும் அகற்றிக் கடவுளை அடைதல் வேண்டும் என உபதேசிக்கின்றார்.

ஆதலால், அவர் சந்நிதியடைந்த நாம், இறைவனைக் குருவாய்ப் பாவித்து வணங்க வேண்டும். அவர் உபதேசிக்கின்றபடி ஆணவம், கன்மம், மாயைகளை அகற்றி, இறைவனை அடைய முயலுதல்வேண்டும்.

சண்டேசுவரர் சந்நிதியானது, கோயிலின் வலப்பாகத்தில் சிறியதோர் இடைவழி விட்டு அமைக்கப்பட்டிருக்கும். மூலத்தானத்தில் சாத்திய மாலையும், நைவேத்திய மிச்சமுமே இங்குப் பூசைக்குரியன.

சண்டேசர் என்பது ஒரு பதவி. இப்பதவியிலிருப்பவரே சிவ பூஜையின் பயனை நமக்குத் தரும் அதிகாரியாவார். இப்போது இப்பதவியில்இருப்பவர்,சிவபெருமான் திருவருள் பெற்ற அடியார் தலைவர். எப்போதும் சிவத்தியானத்திலேயே இருப்பவர்.

இவரைக் கோயில் தரிசனம் அனைத்தும் முடிந்த பிறகு, வணங்குதல் வேண்டும். கையால் கொட்டி, அவர் நம்மைப் பார்ப்பதாக மதித்து, சிவதரிசனப் பலனைத் தருமாறு பிரார்த்திக்க வேண்டும்.

சிவபெருமான் ஒருவரே நம்மோடு என்றும் தொடர்பு உடையவர். நமக்கு நம்மினும் இனியவராக உள்ளவர். அவருக்கே நாமெல்லாம் உடைமைப் பொருள். அவருக்கே நாமெல்லாம் மீளா அடிமை.

இம்மனித சரீரம் ஒரு பெரு வாய்ப்பு. ''வாய்த்தது நந்தமக்கு ஈதோர் பிறவி மதித்திடுமின்'' என்றார் அப்பர் அடிகள். பெறுதற்கரியஇப்பிறவி, இக்கணம் இருக்கும் - இக்கணம் நீங்கும் என்று அறிதற்கு அறியாத நிலைமையை யுடையது. ஆதலால், நாம் இடையறாது எக்காலமும் சிவபெருமானிடம் அன்பு செய்தல் வேண்டுவதாகும்.

கோயில் வழிபாடனைத்தும் முடிந்த பிறகு, கொடிமரத்திற்குச் சற்று தூரம் விலகியிருந்து, மூல மந்திரத்தை நூற்றெட்டு முறையோ அதற்கு மேற்படவோ ஜபித்து, தாம்கண்ட இறைவன் திருவுருவத்தை நினைத்து, எங்கு சென்றிருந்து தியானிப்பினும் புறக்கண்ணால் கண்ட திருவுருவம் அகக்கண்ணால் காணும்படி ஆக்கிக்கொள்ளுதல் வேண்டும்.

தன்னடக்கம்

ஸ்வாமி விவேகானந்தர்

இரகசியமாகப் பிறரைக் குறை கூறுதல் பாவம். நீ அதை முழுதும் நீக்கவேண்டும். மனத்தில் பல நினைவுகள் எழலாம். ஆனால் அவற்றை வெளியிட முயல்வாயாயின், அது மெல்ல மெல்லக் காணியைக் கோடியாக்கும். மன்னித்து மறப்பாயாயின், எல்லாம் முடிந்துவிடும்.

வீண்வாதம் புரிய யாரேனும் உன்னிடம் வருவாராயின், மரியாதையாக உன்னை விலக்கிக் கொள். எல்லாக் கட்சியினிடத்தும் உனது அனுதாபத்தை வெளியிடல் வேண்டும். இந்த அடிப்படைக் குணங்கள் உன்னிடம் வெளித் தோன்றும் போதுதான், பேராற்றலோடு உழைக்கும் திறமை உனக்கு உண்டாகும்.

குழந்தை போன்ற கபடமின்மையோடு, ஆழ்ந்த யோசனையையும் இணைத்துக்கொள். அனைவரோடும் ஒத்துவாழ். அகந்தை நினைவை முழுவதும் ஒழித்துவிடு. ஒரு கட்சிச் சார்பான கருத்துசட்கு இடம் கொடாதே. பயனற்ற வாதப்போர் பெரும் பாவமாம்.

மனத்தளர்வு மத வாழ்வாகாது. வேறெதுவேனும்ஆகலாம். எப்போதும் இனிமையோடும் புன்னகையோடும் இருப்பது, ஒருவனை எப் பிரார்த்தனையையும் காட்டிலும் மிக அருகே கடவுளை அணுகச் செய்யும்.

ஜீவாத்மாவின் உறைவிடமாகிய இவ்வுடல், கருமத்திற்கு ஒரு மெய்யான சாதனமாகும்; இதை ஒரு நரகக்குகை ஆக்குபவன் குற்றவாளியாவான்; இதைப் பேணாதோனும் அவ்வண்ணமே.

அற்பமாயுள்ள யாதொன்றையும் நாடாதே. அதை உன் கால் விரல்களாலும் தொடாதே.

எவனேனும் கோள் சொல்ல உன்னிடம் வருவானாயின், அவனுக்குச் செவி சாய்க்க முற்றிலும் மறுத்துவிடு. காதாற் கேட்பதும் பெரும் பாவம். பின்வரும் கேடு கட்கு மூலை அதனிடமே உள்ளது. மேலும், ஒவ்வொருவரது குற்றங் குறைகளையும் பொறுத்துக் கொள். இலக்ஷக்கணக்காகக் குற்றங்களை மன்னித்துவிடு.

ஆன்ம வாழ்க்கையில் யான் இன்பமடைய இயலாதுபோயின், ஐம்புல நுகர்ச்சி வாழ்க்கையில் திருப்தியை நாடுவேனோ? எனக்கு அமுதம் கிடைக்க வழி இல்லையாயின், சாக்கடை நீரைப் பெறுவேனோ?

இன்பம் மனிதன்முன் தோன்றும் போது, தனது தலைமீது துன்ப முடியைச் சூடியே வருகின்றது. அதை வரவேற்போன், துன்பத்தையும் வரவேற்றல் அவசியம்.

அரசியல் வாழ்க்கையிலும் ஸமூக வாழ்க்கையிலும் ஒருவன் சுதந்திரம் பெறலாம்; ஆனாலும், விருப்பங்கட்கும் [illegible] சினத்திற்கும் அவன் அடிமையாயிருப்பின், உண்மையான சுதந்திரத்தின் தூய இன்பத்தை உணர இயலாது.

தன் விருப்பத்திற்கு இயைந்த வேலையாயின், மிகப் பெரு முட்டாளும் அதனை முடிக்கக் கூடும். ஆனால், எவ்வேலையையும் தன் விருப்பத்திற்கு ஏற்றதாக மாற்றுபவன் எவனோ, அவனே அறிவாளி யாவான். எவ் வேலையும் அற்பமானதன்று.

இயற்கையை மீறும் முயற்சியே மனிதனை அவனது நிலைக்குக் கொண்டு வருவது, இயற்கைக்கு இணங்குவதன்று.

பிறரது குற்றங்களைப் பற்றி ஒருக்காலும் பேசாதே. அவை எவ்வளவு கெட்டவையாயினும் சரி. அதனால் யாதொரு பயனும் என்றும் விளைவதில்லை. ஒருவனுடைய குற்றங்களைப் பற்றி பேசுவதால், அவனுக்கு ஒரு நாளும் உதவி செய்தவனாகாய். நீ அவனுக்குக் கேடு இழைக்கிறாய். உனக்கும் கேடிழைத்துக் கொள்கிறாய்.

புகை குடிக்கப் புகையிலையை ஒழுங்காகத் தயாரிக்கக் கூடியவன், ஒழுங்காகத் தியானிக்கக் கூடியனுமாவான்.

தன்னை அடக்கப் பழகிக்கொண்டவன், புறத்தேயுள்ள எதற்கும் வசப்படமாட்டான். அவனுக்கு அதன் பின் அடிமைத்தனம் இல்லை. அவனது மனம் விடுதலை பெற்றுவிட்டது. அத்தகையவனே உலகத்தில் நன்றாக வாழும் தகுதி பெற்றவன்.

நமது மன அமைதி மிகுந்து, நமது உணர்ச்சிகளின் தொந்தரவு குறையும் அளவிற்கு ஏற்ப, நமது அன்பு வளரும். நமது கருமமும் முன்னிலும் செம்மைப்படும்.

ஆண்டானைப் போன்று கருமம் செய்தல் வேண்டும். அடிமையைப் போன்றன்று. இடையறுது கருமம் புரிக; ஆனால் அடிமை வேலையைச் செய்யாதே.

நீ பற்றற்றிரு; மற்றவை வேலை செய்யட்டும்; மூளையின் பகுதிகள் வேலை செய்யட்டும்; இடையறுது வேலை செய்க. இவ்வுலகிற்கு நீ அன்னியன் போன்றும், வழிப்போக்கன் போன்றும், வேலை செய்க. ஆனால் உன்னைக் கட்டுறுத்தாதே; கட்டுறல் அஞ்சத்தக்கது.

முயற்சியின்மையை எல்லா வழியாலும் நீக்கல் வேண்டும். முயற்சி யென்பது எதிர்த்தலென்றே எப்போதும் பொருள் படும். உள்ளத்தையும் உடலையும் பற்றிய கேடுகளனைத்தையும் எதிர்த்து நில்; எதிர்ப்பது கைகூடும்போது, உனக்கு அமைதியும் உண்டாகும்.

வெளியிடுபவரும், ஆசிரியரும்: இராம. மணிமேகலை, 4 தணிகாசலம் செட்டி ரோடு, சென்னை-17. அச்சிடுபவர்: கொண்டா. காசி. சீதாராமன், ராமன்ஸ் பிரிண்டிங் பிரஸ், 81-பி பாண்டிபஸார், தியாகராயநகர், சென்னை-17.

ஆசிரியர் : கலைச்செல்வி மணிமேகலை

அருள்

அருட்பெருஞ்சோதி



தனிப்பெருங்கருணை

தமிழ்மாதம் முதல்நாள் தோறும் வெளிவருகிறது

அன்பார்ந்த வாசகர்களுக்கு

வாழ்க்கையில் உங்களுக்கு அவ்வப்போது ஏற்படக் கூடிய சிக்கல்களையும் பிரச்னைகளையும், சுருக்கமாக — ஆனால் தெளிவாக, எழுதியனுப்புங்கள். அவற்றிலிருந்து நீங்கள் விடுபடுவதற்கு உரிய ஆத்மிக — தார்மிக — சமய ரீதியான ஆலோசனைகளை, ''அருள்'' பத்திரிகையில் வெளியிடுகிறோம்.

உங்கள் ஊரையோ பேரையோ நீங்கள் எங்களுக்குத் தெரிவிக்கவேண்டிய அவசியம் இல்லை. கையெழுத்துக் கூடப் போடாமல் வெறும் விஷயத்தை மட்டும் ஒரு கடிதத்தில் எழுதியனுப்பினால் போதும். உங்கள் ஊரையும் பேரையும் நீங்கள் குறிப்பிட்டு எழுதினால் கூட, அவற்றை நாங்கள் வெளியிடமாட்டோம்.

—ஆசிரியர்

அருள் 4	ஆண்டுச்	நவம்பர்
கருணை 2	சந்தா	15-11-69
கார்த்திகை, சௌமிய	ரூ. 3-60	விலை : 30காசு.

சந்தா அனுப்ப வேண்டிய முகவரி : நிர்வாகி, ''அருள்''
4, தணிகாசலம் செட்டிதெரு, தியாகராயநகர், சென்னை-17.

உ

இறைவி வணக்கம்

ஸ்ரீ மூக மஹாகவி

சிவ! சிவ!! (என்ன ஆச்சர்யம்!) ஸ்ரீ காமாக்ஷியின் கடைக்கண் அருளைப் பெற்ற பெரியோர்கள், காட்டையும் வீட்டையும் ஒன்றாகக் கருதுகிறார்கள். நண்பனையும் பகைவனையும் ஒரே மாதிரியாக பாவிக்கிறார்கள். யுவதிகளின் கொவ்வைக் கனிபோன்ற உதடுகளையும், ஓட்டாஞ்சல்லிகளையும் ஸமமாகப் பார்க்கிறார்கள்.

பரதேவதையான ஹைமவதியானவள், கம்பாநதி தீரத்தினிடத்தே மிகப் பிரேமையுள்ளவளாய் இருக்கின்றாள். பற்றுக்களை விட்டொழித்த பெரியோர்களின் உள்ளத்திலே உறுதியாக உறைகின்றாள். ஸகல அண்டபிண்ட சராசரங்களிலும் வியாபித்து விளங்குகின்றாள். அழிவற்ற வாக்குகளின் வடிவான வேதங்களால் புகழப்படுகின்றாள். சிரஸிலே சந்திரகலையுடன் பிரகாசிக்கின்றாள்.

மலர்க்கணைகளை உடைய மன்மதனின் கர்வம் என்ற ஸம்பத்துக்குக்களஞ்சியம்போல் விளங்குகின்ற ஒருபொருள், காஞ்சீபுரப் பிரதேசத்தில் விளங்கிக்கொண்டிருக்கிறது. அந்தக் களஞ்சியத்துக்குள்ளே, என்னுடைய மனம் என்னும் மாணிக்கமானது, எப்படியோ பாதுகாப்பாக வைக்கப்பட்டிருக்கிறது.

ஹரிகதா காலக்ஷேப ஜ்யோதி
மன்னார்குடி சாம்பசிவ பாகவதர்

வேலவன்

இருபத்தைந்து ஆண்டுகட்கு முன் ஒரு நாள், சென்னை மயிலாப்பூரில் உள்ள தண்ணீர்த் துறை மார்க்கெட்டுக்கு, ஒரு சங்கீத வித்வான் காய்கறி வாங்கி வரச் சென்றார்.

அந்த வித்வான் வயதில் இளையவர். ஆனால் சங்கீத ஞானத்தில் பெரியவர். அவருக்கு, தியாகப்ரம்மத்தின் "நகுமோ" எனத் தொடங்கும் ஆபேரிராகக் கீர்த்தனையில் அளவு கடந்த பிரேமை. எப்போது பார்த்தாலும், அந்தக் கீர்த்தனையையே வாய்க்குள் முணுமுணுத்துக் கொண்டிருப்பார். அந்த வழக்கப்படியே, மார்க்கெட்டில் காய்கறி வாங்கும் போதும் அவர் முணுமுணுத்துக் கொண்டிருந்தார்.

அதே மார்க்கெட்டுக்கு, அப்போது இன்னொரு பெரியவரும் காய்கறி வாங்க வந்திருந்தார். அவருக்கு வயது எண்பது இருக்கலாம். கிருஷ்ண சர்மா என்று பெயர். அவர் அந்த இளம் வித்வானைப் பார்த்து, "நீர் இப்போது பாடிக் கொண்டிருக்கிற கீர்த்தனைக்கு அர்த்தம் தெரியுமா?" என்று கேட்டார்.

வித்வான் தமக்குத் தெரிந்தவாறு, அந்தக் கீர்த்தனையின் பொருளைக் கூறினார். அதைக் கேட்டுவிட்டு, "இது சாதாரணமான அர்த்தம். இதைக் காட்டிலும் இன்னும் ஆழமான உட்பொருள்கள் பல, அந்தக் கீர்த்தனையில் அடங்கியிருக்கின்றன" என்றார் பெரியர்.

அந்த உட்பொருள்களைக் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆசை, நம் இளம் வித்வானுக்கு ஏற்பட்டது. எனவே, அந்தப் பெரியவரைப் பின் தொடர்ந்து, அவருடைய வீட்டுக்குச் சென்றார்.

அன்று மிக நீண்ட நேரம், அந்த ஒரே கீர்த்தனையில் பொதிந்துள்ள பல அற்புதமான நுண் பொருள்களை, வித்வானுக்குவிளக்கிக் கூறினார் பெரியவர். அதுமட்டும் அல்ல, தியாகப்ரம்மத்தின் ஒவ்வொரு கீர்த்தனையுமே, இம்மாதிரி பல அரிய பெரிய பொருள்

களைத் தன்னகத்தே அடங்கப் பெற்றிருப்பதாகும் என்ற பேருண்மையையும் அவர் தெரிவித்தார்.

அன்று முதல், நம் இளம் வித்வான் நாள் தவறாமல் அந்தப் பெரியவர் வீட்டுக்குப் போய், தியாகப்ரம்மத்தின் கீர்த்தனைகளை ஒவ்வொன்றாகப் பொருள் கேட்டு வந்தார். ஒரு நாளைக்கு அவரைப் பார்க்கவில்லை யென்றால் இவருக்கு இருப்புக்கொள்ளாது. இவரைப் பார்க்கவில்லையென்றால் அவருக்கு இருப்புக்கொள்ளாது. பெரியவர் பகலில் கூறுவதையெல்லாம் குறிப்பெடுத்துக் கொண்டு வந்து, இரவு முழுதும் உட்கார்ந்து அந்தக் குறிப்புகளைத் தம் ஆழ்ந்த சிந்தனையால் விரிவு படுத்தி எழுதுவதே அந்த வித்வானுக்கு வேலையாகிவிட்டது.

இதன் விளைவாக, பெரியவர்கள் சாகித்யம் எதுவாக இருந்தாலும், அதில் அடங்கியுள்ள அர்த்த பாவங்களையும் ராகபாவங்களையும் கருத்தூன்றிக் கவனிக்கும் பழக்கம், இவரிடத்தில் உருவாகத் தொடங்கியது.

மயிலாப்பூரில், ஸ்ரீ தியாகராஜ சங்கீதவித்வத் சமாஜம் என்றுஒரு சபா இருக்கிறது. அந்த சபாவுக்கு, நமது இளம் வித்வான் தான் அப்போது காரியதரிசி. (இப்போது அவர் அதன் உபதலைவராக இருக்கிறார்.)

அந்த சபாவிலே ஒருநாள், ஸ்ரீ தியாகராஜஸ்வாமிகளின் சரித்திரத்தை உபந்யாசம் செய்வதற்கு, ஒருவரை அழைத்திருந்தார்கள், ஆனால் கடைசி நிமிஷத்தில், அவர் வரமுடியாது என்று கையை விரித்துவிட்டார். கதை கேட்க வந்திருந்த எல்லோருக்கும், பெரிய ஏமாற்றம் ஆகிவிடும் போல் இருந்தது. அந்த சமயத்தில், நமது இளம் வித்வான் ஒரு துணிச்சலான காரியம் செய்தார். அதாவது, தமது சட்டையைக் கழற்றிப் போட்டுவிட்டு ஓர் அங்கவஸ்திரத்தைப் போர்த்துக் கொண்டு, "ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகளைப் பற்றி, நானே இப்பொழுது சிறிது பேசப்போகிறேன்" என்ற முன்னுரையோடு, மேடையில் ஏறி உட்கார்ந்தார்.

அன்று அவர் செய்த அந்தக் கதையானது, மிகப் புதுமையான முறையில், கேட்போரின் உள்ளங்களை உருக்கும்படியாய் இருந்தது. "தியாகையரின் கதை நமக்கு ஏற்கெனவே தெரிந்ததுதான். ஆனால், அதை இவ்வளவு நுட்பமான பாவ விளக்கங்களோடு, யாரும் எடுத்துக் கூறக் கேட்டதில்லை" என்று பெரியோர்கள் பலர் பேசிக்கொண்டார்கள்.

அந்தக் கதையின் வெற்றிக்கு ஓர் அடையாளமாக, அடுத்த இரண்டு மூன்று நாட்களிலேயே, மயிலாப்பூர் ரானடே ஹாலில் இன்னொரு கதைக்கு ஏற்பாடு ஆயிற்று. இப்படியே அடுத்து அடுத்து, வாய்ப்புகள் மேலும் மேலும் வந்து கொண்டேயிருந்தன. முதலில் வெறும் உபந்யா

சம்போல் கதை செய்து கொண்டிருந்தவர், பிறகு பிடில் மிருதங்கம் என்ற இரண்டு பக்கவாத்தியங்களை வைத்துக்கொண்டார். சிறிது நாட்களுக்கெல்லாம், கையில் ஜால்ராவும் சப்ளாவும் ஏந்தும்படி நேர்ந்தது. அதுவரையில் உட்கார்ந்தபடியே கதை செய்தவர், பிற்பாடு நின்று கொண்டே கதை செய்கின்ற கட்டத்துக்கு வந்தார். இவ்வாறு, இளம் சங்கீதவித்வான் என்ற நிலையிலிருந்து, ஹரிகதாகாலக்ஷேபஜ்யோதியாக மலர்ச்சி அடைந்தவர்தாம், இவ்விதழின் முகப்பு அட்டையை அலங்கரிக்கின்ற பிரம்மஸ்ரீ மன்னார்குடி சாம்பசிவபாகவதர் அவர்கள்.

சங்கீதத் துறையில், பாகவதர் அவர்கள் மிகவும் உயர்வான ஒரு குருபரம்பரையில் வந்தவர். இராமநாதபுரம் பூச்சி ஸ்ரீநிவாச ஐயங்காரின் சிஷ்யரான எட்டயபுரம் இராஜகோபால பாகவதரிடம்,* இவர் தம்முடைய பதினைந்தாவது வயதில் சங்கீதம் கற்கத் தொடங்கினார். சில ஆண்டுகளுக்குப் பிறகு, சேலம் தசவாத்யம் வீரராகவ ஐயரைத் தம் குருவாகப் பெற்றார். கடைசியாக, சங்கீதபூபதிமஹாராஜபுரம் விசுவநாத ஐயரிடம் மாணவராய்ச் சேர்ந்தார். தம்முடைய இருபதாவது வயதிலிருந்தே இவர் பாட்டுக்கச்சேரி செய்யத் தொடங்கிவிட்டார். இவர் கதாகாலக்ஷேபம் செய்ய முற்பட்டபோது, அந்த சங்கீத ஞானம் இவருக்கு ஓர் உற்ற துணைவனைப் போல் கைகொடுத்து உதவியது.

ஆரம்பகாலத்தில், இவருக்குத் தியாகராஜஸ்வாமிகளின் சரித்திரத்தைத் தவிர, வேறு யாதொரு கதையுமே செய்யத் தெரியாது. ஒரு சமயம், கன்னடமொழியிலே பற்றுள்ளவர்கள் நிறைந்த ஒரு கிராமத்துக்கு இவர் அழைக்கப்பட்டிருந்தார். அந்த ஊரில் உள்ள எல்லோருமே நன்கு படித்தவர்கள். அவர்களில் பெரும்பாலோர் தாமே கதை பண்ணக்கூடிய ஆற்றல் படைத்தவர்கள். அவர்களுக்கெல்லாம் தலைவர்போல் விளங்கிய ஒரு பெரியவர், கடைசி நிமிஷத்தில், தியாகராஜஸ்வாமிகளின் கதை வேண்டாம் என்று கூறிவிட்டார்

நமது சாம்பசிவ பாகவதருக்கு, அந்த ஒரு கதையைத் தவிர இரண்டாவது கதை தெரியாது. எனவே, ஒரு யுக்தி செய்தார். ''இராம பக்தி அனுபவ ஸாரம்'' என்ற தலைப்பிலே, ஒரு கதை செய்வதாகச் சொல்லி அனுப்பினார். அதற்கு அவ்வூர்க்காரர்கள் சம்மதித்தார்கள்.

குறிப்பு: * இந்த இராஜகோபால பாகவதரின் தந்தையான எட்டயபுரம் இராமச்சந்திர பாகவதர், மதுரை புஷ்பவனம், மதுரைப் பொன்னுசாமிபிள்ளை போன்ற மஹாமேதைகளைத் தம் மாணவர்களாகப் பெற்றிருந்தவர்.

அவ்வூர்ப் பெரியவர்கள், ஸ்ரீ புரந்தரதாஸரின் பக்தர்கள் என்பது பாகவதருக்குத் தெரிய வந்தது. ஆனால், புரந்தரதாஸரின் உருப்படிகள் இரண்டே இரண்டுதான் அவருக்குப் பாடம். அவ்விரண்டு உருப்படிகளையும் பாடி, அவற்றிற்குப் பொருள் விளக்கம் கூறினார். அதைக் கேட்டவுடன், எல்லோரும் பரவசம் அடைந்து விட்டார்கள். அதன் பிறகு, பக்த ராமதாஸரின் உருப்படி ஒன்றும், தியாகப்ரம்மத்தின் உருப்படி ஒன்றும் பாடி, அவற்றிற்கும் விரிவான நுண்பொருள் விளக்கம் கூறினார். இதற்குள் மூன்றரை மணி நேரத்துக்குமேல் ஆகிவிட்டது. கதாகாலக்ஷேபமும் முடிந்துவிட்டது.

கதை முடிந்ததும், அவ்வூர்க்காரர்களுக்கெல்லாம் தலைவராக விளங்கிய பெரியவர், நமது பாகவதரை வந்து கட்டித் தழுவிக் கொண்டார். தியாகராஜஸ்வாமிகளின் கதை வேண்டாம் என்று சொன்னதற்காக மன்னிப்பும் கேட்டுக் கொண்டார்.

எனினும், "இனிமேல் தியாகராஜஸ்வாமிகளின் கதையை மட்டுமே நாம் சொல்லிக்கொண்டிருக்கக்கூடாது" என்ற ஒரு முடிவுக்கு வந்தார் பாகவதர். அடுத்த நாளே, புரந்தரதாஸரின் கதையைத் தயார் பண்ணுவதற்கு அவர் தொடங்கி விட்டார்.

புரந்தரதாஸருக்குப் பிறகு இராமதாஸர், ஆழ்வார்கள், நாயன்மார்கள், இப்படி ஏராளமான கதைகளைத் தயார் பண்ணுவதற்கு, கதாகாலக்ஷேப வாய்ப்புகள் அவருக்கு அடுத்து அடுத்து வந்து கொண்டேயிருந்தன. சீதா கல்யாணம், மீனாக்ஷி கல்யாணம், ஆண்டாள் கல்யாணம் போன்ற பல கல்யாணங்களும், புராண இதிஹாஸ உபாக்யானங்களும் உள்பட, மொத்தம் 125 கதைகளை இப்போது அவர் தம் காலக்ஷேபங்களில் கையாண்டு வருகிறார்.

இந்தியாவில் உள்ள பிரதான நகரங்கள் அனைத்திலும், நமது பாகவதரின் கதாகாலக்ஷேபங்கள் நடந்திருக்கின்றன, 1960-ம் ஆண்டில், ரிஷிகேசத்திலே ஸ்வாமி சிவானந்த ஸரஸ்வதியவர்கள் இவருடைய கதையைக் கேட்டு மகிழ்ச்சி அடைந்து, ஹரிகதா காலக்ஷேப ஜ்யோதி என்னும் ஓர் உயரிய பட்டத்தை வழங்கி, இவரை ஆசீர்வதித்தார்கள்.

ஸ்ரீ பாகவதரவர்கள் ஸம்ஸ்க்ருதம், தமிழ், தெலுங்கு, கன்னடம்போன்ற பல்வேறு மொழிகளில் ஸாஹித்யம் இயற்றும் ஆற்றல் படைத்தவர். தியாகையர் கீர்த்தனங்களில் தற்போது வழக்கில் இருந்து வருகிற சுமார் 700 உருப்படிகளும் இவருக்குப் பாடம். அவற்றைத் தவிர, புரந்தரதாஸ் உருப்படிகளில் சுமார் இருநூறும், ராமதாஸ் உருப்படிகளில் சுமார் நூற்றைம்பதும் இவருக்குப் பாடம் உண்டு. இந்த

உருப்படிகளோடு, ஸ்ரீ முத்து ஸ்வாமி தீக்ஷிதர், ஸ்ரீ சியாமா சாஸ்திரிகள் ஆகியோரின் ஏராள மான கீர்த்தனைகளும், ஐந்நூறுக் கும் மேற்பட்டசொந்தசாகித்யங் களும் சேர்ந்து, இவருடைய கதா காலக்ஷேபங்களுக்கு ஒரு தனிப் பட்ட சோபையை அளிக்கின் றன.

எடுப்பும் குழைவும் ஒருங்கே கலந்த ஓர் இனிய சாரீர ஸம் பத்து இவருக்கு வாய்த்திருக் கிறது. கேட்போர் உள்ளத்தில் பக்தியையும் பண்பையும் உரு வாக்கும் வகையில், இவருடைய காலக்ஷேப பாணி அமைந்திருக் கிறது. உயர்தரமான நகைச்சுவை யும், கவர்ச்சியான வாக்விலாஸ மும் இவரிடத்தே காணப்படு கின்ற சிறப்பான அம்சங்கள் ஆகும்

இப்போது 55 வயதை எய்தி யிருக்கும் ஸ்ரீ பாகவதரவர்கள், இன்னும் நீடூழி காலம் இந்நில மிசை வாழ்ந்து. மக்களின் உள் ளத்தில் பக்திப்ரவாஹத்தைப் பெருக்கிக் கொண்டிருக்குமாறு, எல்லாம்வல்ல இறைவன் இன் னருள்புரிவானாக!

❋

திருச்சிற்றம்பலம்

அருட்பெருஞ் சோதிஎன் ஆருயி
ரில்கலந்(து) ஆடுகின்ற
அருட்பெருஞ் சோதிஎன் அன்பில்
கலந்(து)அறி வாய்விளங்கும்
அருட்பெருஞ் சோதிதென் ஆரமு(து)
ஆகிஉள் அண்ணி நிற்கும்
அருட்பெருஞ் சோதிநின் ஆசையொன்
றேஎன்னுள் ஆர்கின்றதே!

ஆர்கின்ற தெள்ளமு தின்சுவை
என்னென்(று) அறைவன் அந்தோ!
சார்கின்ற சிற்றம் பலம்பெருஞ்
சீரினைச் சாற்றுதொறும்
சேர்கின்ற நாவுடன் உள்ளமும்
ஆவியும் தித்தித்தலே
நேர்கின்ற தால்என் அருட்பெருஞ்
சோதி நிறைந்(து)உளத்தே!

—திருவருட்பா

சாதனைக்கு உகந்த சூழ்நிலை



பகவான்
ஸ்ரீ ராமகிருஷ்ண
பரமஹம்ஸர்

ஆத்ம சாதகன் ஒருவன், சிராத்தச் சடங்கு நிகழ்கிற வீட்டிலே அருந்துதற்கு அன்னம் ஏற்றுக் கொள்ளலாகாது.

ஞானி ஒருவன், தான் அருந்தும் உணவைத் தன் சரீரத்திலிருக்கும் குண்டலினி சக்திக்கு ஆகுதியாகப் படைக்கிறான். எனவே அவன் எதை வேண்டுமானாலும் உண்ணலாம். ஆனால் பக்தனுடைய நிலைவேறுபட்டது. அவன் தூய உணவையே அருந்தக் கடமைப் பட்டிருக்கிறான்.

நேர்மையான வழியில் சம்பாதித்த பணத்தைக் கொண்டே, சாது மகாத்மாக்களுக்குக் கனி முதலியவைகளை வாங்கிக் கொண்டு போகவேண்டும். தூயதல்லாத உணவுகளை அவர்களுக்குப் படைக்கலாகாது.

தீயோர் தந்த உணவை அருந்த குருநானக் முயன்றபொழுது, அவ்வுணவானது ரத்தத்தில் தோய்ந்திருப்பதாகக் கண்டார். ஆதலால் அதை அருந்த அவருக்கு இயலவில்லை.

கண்காட்சி சாலையில் காட்சி ஒன்று எனக்குக் காண்பிக்கப்பட்டது. பூமியில் புதையுண்ட விலங்கின் கூடு கல்லாக மாறிவிட்டது. சூழ்நிலை அதை அப்படிச் செய்துவிட்டது. தெய்விகச் சூழ்நிலையில், மனிதன் தெய்வத்தன்மையைப் பெறமுடியும்.

ஆத்ம சாதகன் ஒருவன் தான் இருக்குமிடத்தில் தெய்விகப் படங்களை வைத்திருப்பது நலம். அவைகளைப் பார்க்கும் பொழுது, அருள் உணர்வு உள்ளத்தில் உதிக்கிறது.

கொடிய தீங்கும், காலக்கிரமத்தில் நலனாக மாறியமைகிறது. நோய் வாய்ப்பட்டிருக்கும் ஒருவன் குணமடைந்து வரும் தருணத்தில், அவனுக்கு வைத்தியன் மருந்தை வழங்குகிறான். நோய் குணமடைந்ததுமருந்தினாலா? அல்லது தற்செயலாகவா? காலத்துக்கு நிகரான மருந்து இல்லை.

பழங்காலத்து ரிஷிகள், வனத்தில் கரடி புலிகளுக்கிடையில் வசித்திருந்தார்கள். அவர்களு

டைய தியானம், அக்கொடிய விலங்குகளால் பாதிக்கப்படவில்லை. உலகில் கரடி புலியின் சுபாவங்களையுடைய மக்களுக்கிடையில் நீ வாழ்ந்து வருகின்றாய். இவர்களுடைய புல்லிய போக்கைப் பொருட் படுத்தாது, நீ பகவத் சிந்தனையிலேயே ஊறியிருக்க வேண்டும்.

மனிதன் ஒருவன், தனக்கு வாய்த்துள்ள உலகக் கிருத்தியங்களையும் முறையாகச் செய்ய வேண்டும்; கடவுள் பக்தியையும் ஆழ்ந்து பண்ணவேண்டும். அவன் தனித்திருக்கும் பொழுது, பாகவதம் போன்ற பக்தி புகட்டும் நூல்களை வாசிக்கவேண்டும்.

புதிதாகப் பட்டணத்துக்கு வருகிற ஒருவன், தங்கியிருக்க முதலில் இடந்தேடிக்கொள்ள வேண்டும். பிறகு வேண்டியவாறு அவன் ஊர் சுற்றிப் பார்க்கலாம். பகலிலேயே தங்குமிடம் தேடிக்கொள்ளாவிட்டால், இரவில் இருக்க இடமில்லாது அவன் தவிப்பான். இவ்வுலகு என்னும் பட்டணத்துக்குள் வந்துள்ள நீ, இறைவனுடைய அருள் என்னும் தங்குமிடத்தை முதலில் தேடிக்கொள். பிறகு வேண்டியவாறு உலக வாழ்வை நடாத்து. அருளைத் தேடிக்கொண்டால், அந்திய காலத்தில் நீ அல்லல்படமாட்டாய்,

கரி பிடித்துள்ள அறையில் நடமாடுகிறவர்கள் எவ்வளவு எச்சரிக்கையாக இருந்தாலும், அவர்கள்மீது கொஞ்சம் கரி படிந்துவிடும். அதே விதத்தில், ஆத்ம சாதனங்கள் புரிகிற குடும்பி ஒருவன் எவ்வளவு எச்சரிக்கையாக இருந்தாலும், குடும்ப வாழ்வின் விளைவாக அவனிடத்து ஏதேனும் ஒரு குறைபாடு வந்துவிடும்.

உலக சுகபோகங்களை ஓரளவு அனுபவித்துப் பார்த்து, அவை யாவும் நித்தியமானவை அல்ல என்பதையும், அவை மனிதனுக்குப் பெருங்கேடு விளைவிக்கின்றன என்பதையும் அறிந்தான பிறகு, மனதைக் கடவுளிடத்துத் திருப்புவது எளிது.

உலகப் பற்றுடைய ஒருவன், அகத் துறவு பூண்டு பழகவேண்டும். அதாவது, பற்றற்ற நிலையை மனதினுள் வருவித்துப் பழகவேண்டும். ஆனால், சந்நியாசி ஒருவன், அகத்திலும் புறத்திலும் அனைத்தையும் துறந்துவிடவேண்டும்.

ஒரு பெரிய ஜனக்கூட்டத்தைப் பார்க்கும் பொழுது, என் உள்ளத்தில் பரபோதம் தானாகப் பொங்கித் ததும்பி எழுகிறது.

பக்தன் ஒருவன், நாடகத்திலும்கூடப் பொய் பேசும் பாத்திரத்தை, எடுத்துக் கொள்ளலாகாது; பொருந்தாத செயல் எதையும் அவன் நடிக்கலாகாது. நாடகத்தில் அப்படி நடிப்பது கூட, படிப்படியாக மனதைக் கெடுத்து விடுகிறது.

உள்ளம் என்னும் குகை, ஜன சஞ்சாரமில்லாத இடம், வனப்பு வாய்ந்த வனம் ஆகியவைகள், தியானத்துக்கு ஏற்ற இடங்களாம்.

கட்டி ஒன்று நன்றாகப் பழுப்பதற்கு முன்பு, ரண வைத்தியன் அதன்மீது கத்தி வைப்பதில்லை. அதே விதத்தில், சிலர்க்கு சாதனத்தில் ஈடுபடுதற்குத் தகுந்த காலம் வரும் வரையில் காத்திருந்தாக வேண்டும்.

இயந்திரம் ஒன்றில் போடப்பட்டுள்ள தானியங்களெல்லாம், அறைபட்டுப் போவதினின்று தப்பிக்க முடியாது. ஆனால் இயந்தி

ரக்கல்லின் நடுவிலிருக்கும் மூளைக்குப் பக்கத்தில் இருக்கும் தானியங்கள், அரைபடாது தப்பித்துக் கொள்கின்றன. அதேவிதத்தில், கடவுளை உறுதியாகப் பிடித்துக் கொண்டவர்கள், உலக வாழ்வு என்னும் இயந்திரத்தில் கசக்கப்படுவதில்லை.

சிறு செடிகளுக்கு வேலிகட்டிப் பாதுகாக்க வேண்டும். இல்லையேல் ஆடுமாடுகள் அவைகளை மிதித்துப் பாழ்படுத்திவிடும். ஆரம்ப தசையிலிருக்கும் ஆத்ம சாதகன், அங்ஙனம் தனக்கு சத்சங்கம் என்னும் வேலி போட்டுக் கொள்ளவேண்டும்.

செடி பெரிய மரமான பிறகு, அதற்கு வேலி தேவையில்லை. ஒரு யானையையே அதனிடத்துக்கட்டி வைக்கக் கூடிய வலிவு, அதற்கு வந்துவிடுகிறது. பரிபக்குவமடைந்துள்ள ஆத்மாக்களுக்கு, உலகம் எந்தவிதமான இன்னலையும் செய்யமாட்டாது.

குடங்களில் தண்ணீரும், ஜாடிகளில் ஊறுகாயும் வைத்துள்ள அறைக்குள், தாக ஜுரத்தில் வருந்துகிற ஒருவனை விட்டு வைக்கலாகாது. உலகப்பற்று என்னும் தாக ஜுரத்தில் வருந்துகின்றவனை, உலக விஷயாதிகளுக்கிடையில் வைத்திருக்கலாகாது. ஊறுகாய் என்று கூறும்பொழுதே நாவில் ஜலம் ஊறுகிறது. விஷய போகம் ஊறுகாய்க்கு நிகர். சாதகன் ஒருவனை அச்சூழ்நிலையினின்று பிரித்து, ஏகாந்த வாசத்துக்குப் போகும்படி செய்ய வேண்டும்.

★

உ

திருச்சிற்றம்பலம்

"நயந்தநட நாயகர்உன் நாயகரே எனினும்,
நாடியமந் திரங்கள்சில கூடிஉரை யிடவே,
வியந்தமற்றைத் தேவரெலாம் வரவும்அவர் நேயம்
விரும்பாதே இருப்ப(து)என் நீ?" என்கின்றாய் தோழி;
வயந்தரு(ம்) இந் திரர்பிரமர் நாரணர்கா ரணர்கள்
மற்றையர்கள் மற்றையர்கள் மற்றையர்கள் எவர்க்கும்
பயந்தகுடி அல்லடி நான் திருச்சிற்றம் பலத்தே
பதிநடஞ்செய் அடிப்பணிக்கே பதித்தகுடி அறியே!

"நயந்தநட நாயகர்உன் நாயகரே எனினும்,
நங்கைநினைக் கண்டிடவே நாடிமற்றைத் தலைவர்
வியந்துவரு கின்றது கண்(டு)உபசரியா(து) இங்கே
மேல்நோக்கி இருப்பதென் நீ?" என்கின்றாய் தோழி;
வயந்தருபார் முதல்நாதம் வரையுளநாட் டவர்க்கும்
மற்றவரை நடத்துகின்ற மாநாட்டார் தமக்கும்
பயந்தகுடி அல்லடி நான் திருச்சிற்றம் பலத்தே
பதிநடஞ்செய் அடிப்பணிக்கே பதித்தகுடி அறியே!

—திருவருட்பா

அண்ணனுக்குத் தம்பி சொன்ன அறிவுரை



பாரதஸிம்ஹம் பிரம்மஸ்ரீ
சேங்காலிபுரம்

அனந்தராம தீக்ஷிதர்

திருதராஷ்டிரன் கேட்கிறுன்: ஓ விதுர, தேவதைகளும், தர்மம் அர்த்தம் இவைகளை நித்யமாக உடையவர்களும், வேத சாஸ்திர ஸம்பன்னர்களும், மஹாகுலங்களின் விஷயத்தில் ஆசை வைக்கின்றனர். அந்த மஹாகுலங்கள் எவை?

விதுரர் கூறுகிறுர் :

தவம், இந்திரியங்களை அடக்குதல், வேதத்தைப் பொருளாக வைத்துக் கொள்ளுதல், பொறுமை, யாகம், தக்க குலத்தில் விவாஹம், இன்சொல், அன்னதானம் ஆகிய இந்த எட்டு குணங்களும் எவர்களிடத்தில் இருக்கின்றனவோ, அவர்களின் குலங்களே மஹாகுலங்கள்.

எவர்களுடைய நடையானது தவறுகிறதில்லையோ, வம்சமும் தவறுகிறதில்லையோ, தெளிந்த மனத்துடன் எவர்கள் தர்மத்தை அனுஷ்டிக்கின்றனரோ, எவர்கள் தம் குலத்தில் சிறந்த புகழை விரும்புகிறுர்களோ, பொய்யை விட்டு இருக்கின்றனரோ, அவர்களுடைய குலங்களே மஹாகுலங்கள் எனப்படும்.

யாகமின்மையினுலும், சாஸ்திரமுறை தப்பி விவாஹம் செய்வதாலும், வேதம் கற்பதை விடுவதனுலும், தர்மத்தைமீறி நடப்பதாலும், நல்ல குலங்கள் கெட்ட குலங்களாக ஆகிவிடுகின்றன.

கோயில் பொருளை பாழாக்குவதாலும், பிராம்மணர்களின் பொருளை அபஹரிப்பதாலும், பிராம்மணர்களை மீறி நடப்பதாலும், நல்ல குலங்கள் கெட்ட குலங்களாகின்றன.

பிராம்மணர்களை அவமதிப்பதாலும், அவர்களை நிந்திப்பதாலும், அடைக்கலம் வைத்த பொருளை எடுத்துக் கொள்வதாலும். நல்ல குலங்கள் கெட்ட குலங்களாகின்றன.

பசுக்களையும் மனிதர்களையும் பொருள்களையும் நிரம்பத் தொடர்ந்து அடைந்து இருந்தாலும், ஆசாரத்தை விட்டு விட்டால், அந்தக் குலங்கள் நற்குலங்களின் சேர்க்கையில் சேருவதில்லை.

சிறிது செல்வமுடையவைகளாயினும், நன்னடத்தையிலிருந்து நழுவாத குலங்கள் நற்குலங்களின் கணக்கில் சேருகின்றன. பெரும் புகழையும் தம்மிடம் இழுக்கின்றன.

ஆசாரத்தை நல்ல முயற்சியுடன் பாதுகாக்க வேண்டும். பொருள் போகும் வரும். தனத்தால் குறைந்தவன் குறைந்தவனல்லன். ஆசாரத்தால் கெட்டவன் கெட்டவனே.

ஆசாரத்தை விட்ட குலங்கள், பசுக்களாலும் குதிரைகளாலும் செழிப்பாகப் பயிரிடுவதாலும் முன்னேறி வருவதில்லை.

ஓ அரசனே, நமது குலத்தில் ஒருவனுவது வைரத்தைச் செய்கிறவனும், அரசனே மந்திரியோ பிறருடைய பொருளை அபகரிக்கிறவனும், நண்பனுக்கு துரோகம் செய்கிறவனும், வஞ்சகனும், பொய் சொல்லுகிறவனும், பித்ருக்கள் தேவர்கள் அதிதிகள் இவர்களுக்கு முன்பு புஜிக்கிறவனுமாக இருக்கவேண்டாம்.

நம்மில் எவன் பிராமணர்களை துன்பப்படுத்துவானே, நம்மில் எவன் பிராமணர்களை பகைப்பானே, நம்மில் எவன் க்ருஷிக்கு இடையூறு செய்வானே, அவன் நமது ராஜ சபையில் பிரவேசிக்க வேண்டாம்.

அதிதிகளுக்குக் கொடுக்கும்படி, படுப்பதற்குப் பாய் முதலியவைகளும், உட்காருவதற்குத் தரையும், தாகத்திற்குத் தீர்த்தமும், நான்காவதான இனிமையான சொல்லும், ஸாதுக்களுடைய வீட்டில்ஒரு போதும் இல்லாமல் இருக்காது.

புண்யசாலிகளான தர்மிஷ்டர்களுக்கு மிகுந்த சிரத்தையுடன் இம்மாதிரியான பாய் முதலிய

வைகளை அளிப்பது, மஹத்தான பூஜை செய்ததாக ஆகிவிடும்.

ஓ அரசரே, சிறிதாயிருந்தாலும், வண்டியின் பாரத்தை இரிசுக்கட்டை தாங்குவதுபோல் மற்ற மரங்கள் தாங்குவதில்லை. அது மாதிரி, ராஜ்ய காரியங்களை மஹாகுலத்தில் பிறந்தவர்கள் தான் நிர்வஹிப்பார்கள். மற்றவர்களால் முடியாது.

எவனுக்கு எவனுடைய கோபத்திலே பயமிருக்கிறதோ, அவனுக்கு அவன் மித்ரனல்லன். எவன் பயந்து உபசரிக்கப்பட வேண்டியவனோ, அவனும் மித்ரனல்லன். எந்த மித்ரனிடத்தில் தகப்பனிடம் போல் ஆறுதலை அடைகிறானோ, அவனே மித்ரன். மற்றவர்கள் பெயருக்கு மாத்திரம் சேர்க்கைகள்.

எவனுயிருந்தாலும், காரணத்தால் கட்டுப்படாமல் மித்ரத் தன்மையுடன் இருக்கிறவனே பந்து. அவனே மித்ரன். அவனே கதி. அவனே மேலான ஸ்தானம்.

நிலைத்த மனமில்லாதவனும், பெரியோர்களை அடுக்காதவனும், அறிவு மயக்கமுள்ளவனுமான மனிதனுக்கு, மித்ரனுடைய சேர்க்கையானது எப்பொழுதும் நிலையில்லாததாய் இருக்கிறது.

சலிக்கின்ற சித்தமுடையவனும், புத்தியில்லாதவனும், இந்திரியங்களுக்கு வசத்தை அடைந்தவனுமான மனிதனை, வற்றின குளத்தை அன்னப் பறவைகள் எப்படி அடைவதில்லையோ, அவ்வாறே பொருள்கள் விட்டு விலகி விடும்.

காரணமில்லாமல் கோபிப்பதும், காரணமில்லாமல் சந்தோஷப்படுவதுமாகிய அஸாதுக்களுடைய சீலமானது, சஞ்சலமான மேகம் போன்றது.

பூஜிக்கப்பட்டும், உபகாரத்தை அடைந்தும், அவ்வாறு செய்தவனை எவர்கள் மறக்கின்றனரோ, இறந்த பிறகும் அவர்களுடைய பிணத்தை, மாம்ஸம் உண்ணும் பக்ஷி மிருகங்கள் கூட உண்பதில்லை.

சோகத்தினுல் நிறம் குன்றுகிறது. ஸந்தாபத்தினுல் பலமும் குறைகின்றது. ஸந்தாபத்தினுல் ஞானம் நசிக்கின்றது. சோகத்தினுல் மனிதன் வியாதியை அடைகிருன்.

சோகப்படுவதால் கோரிய பொருள் கிடைத்து விடாது. சரீரமும் தாபத்தை அடைகிறது. பகைவர்களும் இதைப் பார்த்து சந்தோஷப்படுவார்கள். ஓ அரசனே, மனதை சோகப்படும்படி செய்யாதீர்.


மனக்கவலை நீங்குவதற்கு என்ன உபாயம் என திருதராஷ்டிரன் கேட்டதற்கு, விதுரர் பதில் கூறினுர்.

மந்திரங்கள், பகவதாராதனம், இந்திரியங்களை ஜயித்தல், லோபத்தை (அதிக ஆசையை) விடுதல் ஆகிய இவைகளைத் தவிர, உமக்கு மனச்சாந்திக்கு வேறு வழியை நான் காண்கிறேனில்லை.

அறிவினுல் பயம் வராமல் விலக்கிக் கொள்ளலாம். பகவானை ஆராதிப்பதால் சிறந்த வஸ்துக்களை அடையலாம். பெரியோர்களுக்குப் பணிவிடை செய்வதால் அறிவைப் பெறலாம். தியான யோகத்தால் மோக்ஷ ஸுகத்தை அடையலாம்.

★

சிவகுரு



ஸ்ரீ திருமுருக
கிருபானந்த வாரியார்

முருகவேள் முக்கட்பெருமானுக்கு வேத முதல்மொழியாகிய பிரணவப் பொருளை உபதேசித் தருளினர்; அதனால் அவர்சிவகுரு, சுவாமிநாதன், தகப்பன்சாமி என்றெல்லாம் பேர் பெற்றார்.

சிவன் வேறு — குகன் வேறு அன்று! ''ஈசனேயவன் ஆடலால் மதலையாயினன்காண்''! என்று வீரவாகுதேவர் கூறுகின்றார்!

சிவமூர்த்தியே நடராஜராகவும் தட்சிண மூர்த்தியாகவும் காட்சி தருவதுபோல், முருக மூர்த்தியாகவும் வந்து அருள் புரிகின்றார்.

முருகவேளைச் சிவமூர்த்தியென்று அறியாத பாவத்தினலேயே, சூரபன்மன் அழிவுற்றான்.

ஆகவே, ''சிவபெருமானுக்கு முருகப்பெருமான் உபதேசித்தார் என்பதன் கருத்து யாது?'' என்று அறிஞர் உள்ளத்தில் ஒரு வினா எழும். அதற்கு விடை விளம்பும் கடப்பாடு உண்டு தானே?

சிவபெருமான் சனகாதி முனிவர்க்குக் கல்லாலின் புடையமர்ந்து, எல்லாமாய் அல்லதுமாய் இருந்ததனை இருந்தபடி இருந்து காட்டி, சொல்லாமல் சொல்லி உபதேசித்தருளினர்.

உலகிலே தந்தை எப்படிச் செய்கின்றாரோ, அப்படி மைந்தரும் நடக்க விரும்புவார்கள்! தந்தை பாடினல் மகனும் பாடுவான். உலகத் தந்தையாகிய சிவபெருமான் குருநாதனாக நின்று உபதேசித்தபடியால், மைந்தர்களாகிய ஒவ்வொருவரும் குருவாகஇருக்கவே விரும்புவார்கள். குருவாக இருப்பது அரிது; சீடனாக இருப்பது எளிது. ஆதலால், குருவாக நின்று உபதேசித்த சிவபெருமான், சீடனாகவும். நிற்கத் திருவுளங்கொண்டார். சிவபெருமானே சீடனாகி உபதேசங் கேட்டுக் கொண்டால், நாமும் குருவை நாடி உபதேசம் கேட்டுக் கொள்ளவேண்டும் என்று உயிர்கள் விரும்பும்.

ஆதலால், அரனார் தனக்குத் தானே மகனாகி, தனக்குத்தானே உபதேசித்துக் கொண்டார்.

தணிகைப் புராணம் கூறும் இந்த அரிய பாடலைப் பார்க்க.

தனக்குத்தானே மகனாகிய தத்துவன்
தனக்குத்தானே யொரு தாவருங் குருவுமாய்த்
தனக்குத்தானே யருள் தத்துவங் கேட்டலும்
தனக்குத்தான் நிகரினான் தழங்கி நின்றாடினான்.

ஒரு சமயம், திருக் கயிலை மலையில் சிவபெருமானுடைய திருக் கோயிலின் ஒரு புறத்து, நவவீரர்கள் சூழ ஆறுமுகப் பெருமான் அமர்ந்திருந்தார்.

திருமால், இந்திரன், சந்திரன், குபேரன், கிம்புருடர் முதலியோர்கள், சிவபெருமானை வணங்கும் பொருட்டுச் சென்றார்கள். கோயிலுக்கு முன் அமர்ந்துள்ள குருமூர்த்தியை அன்புடன் பணிந்து பணிந்து கோயிலுக்குள் சென்றார்கள்.

படைப்புத் தொழிலைச் செய்கின்ற பங்கயன் வந்தான். அவனுக்கு அன்று அஷ்டமத்தில் சனியிருந்தது போலும். முருகவேளைக் கண்டான்.

''நான் சிருஷ்டி கர்த்தன். இவர் நேற்றைப் பாலகன்'' என்று எண்ணி, அகந்தையுடன் முருகவேளை வணங்காது சென்றான். உட்சென்று, சிவபெருமானையும் உமாதேவியாரையும் தொழுது துதித்து, அருள் பெற்றுத் திரும்பினான். முருகவேளைக் கண்டும் காணாதவனைப் போல் சென்றான்.

இறைவன் எல்லாவற்றையும் பொறுப்பான். பொய்ம்மையைப் பொறுக்க மாட்டான்.

முருகன் வீரவாகுதேவரை நோக்கி, ''வீரவாகு! அவனை இங்கு அழைத்துவா'' என்று பணித்தருளினார்.

வீரவாகுதேவர் பிரமனைப் பார்த்து, ''ஓய் நாலுமுகம்! ஆறுமுகம் அழைக்கின்றது'' என்றார். இதனைக் கேட்டுப் பிரமன் நடுங்கினான். வீரவாகு தேவருடைய முகம், சிறுமுகமாக இருந்தது. அழைப்பது ஆறுமுகம். அவனுக்கு மாறுமுகமாயிற்று. வேறு முகம் ஆதரவு தர ஏது? நின்றாலும் தண்டனை; சென்றாலும் தண்டனை. குட்டுப் பட்டாலும் மோதகக்கையன் பால் குட்டுப்படவேண்டும் என்று கருதி, முருகனிடம் வந்தான்.

சிறிது நிமிர்ந்து நின்று கை குவித்தான். அகந்தை கொண்ட அயனை நோக்கி, ''உனக்கு வேதம் வருமோ?'' என்று வினவியருளினார். ''வரும்'' என்றான்.

''வேதம் ஓது'' என்றார்.

வேதன் வேதத்தை ஓதத் தொடங்கி, ''ஓம்'' என்று ஆரம்பித்தான்.

முகத்தில் ஒன்றதா அவ்வெழுத்துடையதோர் முருகன்
நகைத்து முன்னெழுத்தினுக் குரை பொருளென நவில
மிகைத்த கண்களை விழித்தனன் வெள்கினன் விக்கித்
திகைத் திருந்தனன் கண்டிலன் அப்பொருள் திறனே!

''பிரமனே! முன்னுரைத்த முதல் எழுத்துப் பொருள் கூறுதி'' என்றார். வேதனை வேதனைப் படுத்தியது அவ்வினா. பிரணவப் பொருளினை அறியாது, பிரமன் எட்டுக் கண்களையும் விழித்தான். வெட்கினான்.

விக்கினன். தலை குனிந்து நின்றுன்.

ஈசன் மேவரு பீடமாய் ஏனையோர் தோற்றும்
வாசமாய் எலா எழுத்திற்கும் மறைகட்கும் முதலாய்க்
காசி தன்னிடை முடிபவர்க் கெம்பிரான் கழறும்
மாசில் தாரகப் பிரமமாம் அதன் பயன் ஆய்ந்தான்.

பிரணவம் என்ற தனிமந்திரம், சிவபெருமானுக்குப் பீடம். ஏனைய தேவர்களுக்குப் பிறப்பிடம். எல்லா எழுத்துக்கும் வேதங்கட்கும் முதலாவது. காசியில் இறந்தவர்க்கு ஈசன் கூறும் தாரகமாவது. (தாரகம்—தாண்டச் செய்வது). அதன் பொருளை ஆய்ந்து நின்றுன். பிரமன் அறியாது திகைத்தான்.

தூமறைக்கெலாம் ஆதியும் அந்தமும் சொல்லும்
ஓமெனப்படும் ஓரெழுத் துண்மையை யுணரான்
மாமலர்ப்பெருங் கடவுளும் மயங்கினன் என்றல்
நாமினிச்சில அறிந்தனம் என்பது நகையே.

செவ்வேட் பரமன் பிரமனை நோக்கிப் புன்னகை புரிந்து, "பேதையே! நீ வேதம் ஓதிய விந்தை இதுவோ? முதல் எழுத்துக்கு உரை தெரியாத நீ படைப்புத்தொழிலைப்புரியவல்லையோ?" என்று கூறி, தலைஒன்றுக்கு மூன்று கரங்களாக அமைத்து, பன்னிரு கரங்களாலும் நான்கு தலைகளிலும் குட்டினர்.

எட்டு மூக்குகளிலும் உதிரம் பெருகியது. தலைகளில் இருந்த குடுமி விபூதிபோல் உதிருமாறு குட்டினர். மெல்லத்தான் குட்டினர். திருவடி தீண்டி உதைத் தருளினர்.

எட்டொணுதவக் குடிலையின் பயன் இனைத்தென்றே
கட்டுரைத் திலன் மயங்கலும் இதன் பொருள் கருதாய்
சிட்டி செய்வதித் தன்மையதோ எனச் செவ்வேள்
குட்டினன் அவன் நான்குமா முகங்களுங்குலுங்க.
—கந்தபுராணம்

நாலுமுகனுதி அரியோமென அதார முறை
யாத பிரமாவை விழமோதி பொருள் ஓதுகென
நாலு சிரமோடு சிகை தூளிபட தாளமிடும் இளையானே!
—திருப்புகழ்

நான்கு முகமுடைய பிரமதேவனை, கந்தவெற்பில் வீரவாகு தேவரைக் கொண்டு சிறையில் இட்டனர்.

முருகவேள் தாமே ஒரு திருமுகமும் நான்கு திருக்கரங்களும் ஜெபமாலையும் கமண்டலமும் ஏந்தி, வரதம் அபயம் அமைத்து, படைத்தற் ருெழிலைப் புரியலானர். இளம்பூரணன் படைத்தல் தொழிலைப் புரியும்போது, ஆன்மாக்கள் அறநெறியில் நின்றன.

★

தவம் கலைந்த தம்பிரான்



ஸ்ரீ வித்யா மார்த்தாண்ட
பிரம்மஸ்ரீ
C. V. ஸ்வாமி
சாஸ்திரிகள்

தக்ஷனுடைய யாகத்திலே தாக்ஷாயணியை இழந்த பரமேஸ்வரன், இமய மலையை அடைந்து, கங்கைக் கரையிலே தவக்கோலத்தில் அமர்ந்திருந்தார்.

அப்போது தாக்ஷாயணி, ஹிமவானுடைய புத்ரியாக, கௌரி என்ற பெயருடன் வளர்ந்து வந்தாள்.

ஒருநாள் நாரதமஹரிஷி ஹிமவானிடம் வந்து, சாக்ஷாத் பரமேஸ்வரியையே அவன் தன் பெண்ணைப் பெற்றிருக்கின்ற உண்மையை அவனுக்கு உணர்த்திச் சென்றார்.

அவருடைய சொற்படியே, தவத்தில் ஈடுபட்டிருக்கும் பரமேஸ்வரனுக்கு சுச்ரூஷை செய்வதற்காக, ஹிமவான் தன் அருமந்தச் செல்வியை அனுப்பி வைத்தான்.

இந்த சமயத்தில், சூரபத்மனுடைய தம்பியாகிய தாரகாசுரனால் துன்புறுத்தப் பட்ட தேவர்கள், பிரம்மதேவரிடம் போய் சரணடைந்தார்கள். பிரம்மதேவர் அவர்களை மன்மதனிடம் அனுப்பி வைத்தார்.

மன்மதனிடம் போய், தேவர்களும் அவர்களுடைய தலைவனை இந்திரனும், பின்வருமாறு பேசினார்கள்:

"சிருஷ்டியின் ஆரம்ப காலத்தில், பிரம்மதேவர் தாமே ஓய

வொழிவு இல்லாமல் எல்லா உயிர்களையும் படைத்துக் கொண்டிருந்தபடியால், களைப்படைந்தார்.

"உடனே அவர் தம் மன மொழி மெய்களை அடக்கி, ஸ்ரீ மஹாவிஷ்ணுவைக் குறித்துத் தவம் புரியலானார்.

"நெடுங்காலத்துக்குப் பிறகு மஹாவிஷ்ணு பிரஸன்னராகி, பிரம்மாவைப் பார்த்து 'உனக்கு என்ன வரம் வேண்டும்?' என்று கேட்டார்.

" 'ஸ்வாமீ, சராசரவடிவமான இந்த உலகங்களைப் படைத்துப் படைத்து நான் களைப்பு அடைந்து விட்டேன். இனி மேலாவது எனக்கு சிரமம் இல்லாமல், தாங்களே இந்த ஜகத்தைத் தங்கள் அருளால் படைக்க வேண்டும்' என்று வேண்டிக் கொண்டார் பிரம்மதேவர்.

"உடனே விஷ்ணு ஸ்ரீ மஹாலக்ஷ்மியைப் பார்த்தார்.

"அப்போது, சகல உலகங்களையும் மோஹம் அடையச் செய்யக் கூடிய ஓர் அதிசுந்தர வடிவத்தோடு, மன்மதனாகிய நீ தோன்றினாய்.

"உனக்குக் கரும்பு வில்லும் மலர்க் கணைகளும் ஆயுதங்களாகக் கொடுக்கப்பட்டன.

" 'உன்னை எவராலும் ஜயிக்க முடியாது. ஆனால், நீ எல்லோரையும் வெல்லுவாய்!' என்று விஷ்ணு உனக்கு வரம் கொடுத்தார்.

"பிறகு அவர் பிரம்மாவை நோக்கி, 'இனிமேல் இந்த மன்மதனே சிருஷ்டி காரியங்களை கவனித்துக் கொள்வான். நீ வெறும் ஸாக்ஷியாக (அதாவது, பார்வையாளனாக) இருந்து, ஓய்வு எடுத்துக் கொள்' என்று அருளிச் செய்தார்.

"அன்று முதல், படைப்புத் தொழிலை உன்னிடத்தில் ஒப்படைத்து விட்டு, பிரம்மா சுகமாக ஓய்வெடுத்துக் கொண்டிருக்கிறார்.

"உன்னுடைய பலமும் வீர்யமும் எல்லையற்றவை. உன்னுடைய புஷ்ப பாணங்களின் ஆற்றல்கள் அளவற்றவை,

"இப்போது தாரகன் என்னும் அசுரன், தேவர்களாகிய எங்களை மட்டும் அல்ல, எல்லா உலகங்களையுமே துன்புறுத்திக் கொண்டிருக்கிறான்.

"அவனுக்கோ, பரமேஸ்வரனிடமிருந்து தோன்றிய ஒரு குமாரனால் தான் மரணம் ஏற்பட இயலும்.

"அந்தப் பரமேஸ்வரனே, ஹிமாலயத்திலே ஆத்ம நிஷ்டராக அமர்ந்து, தவம் புரிந்து கொண்டிருக்கிறார்.

"அவரை நீ உன் மலர்க்கணைகளால் அடித்து, அவருடைய மனத்தில் கௌரியின்பால் காம வேட்கை தோன்றுமாறு செய்ய வேண்டும்.

"அப்படிச் செய்தால், பரமேஸ்வரனுக்குக் குமாரன் பிறப்பான். அவன் தாரகனை சம்மாரம் செய்வான்.

"ஆகையால், எங்களைக் காப்பாற்றுவதற்காக, நீ இப்போதே

பரமேஸ்வரனிடம் செல்ல வேண்டும்.''

இந்திராதி தேவர்களின் இந்த வேண்டுகோளை மறுக்க மாட்டாமல், மன்மதன் இமயமலையைச் சென்று அடைந்தான்.

அங்கு, நிஷ்டையில் இருக்கும் பரமேஸ்வரனையும், அவருக்கு கந்தபுஷ்பாதிகளால் உபசாரம் செய்து கொண்டிருக்கும் பார்வதியையும் பார்த்தான்.

பார்த்து, யாருக்கும் தெரியாதபடி தன் உருவத்தை மறைத்துக் கொண்டு, பரமேஸ்வரனைத் தன் புஷ்பபாணங்களால் அடித்தான்.

உடனே பரமேஸ்வரன் தன் நிஷ்டை கலைந்து, அருகில் இருக்கும் கௌரியைப் பார்த்துச் சிறிது காமபரவசம் ஆயினர்.

ஆனால் அடுத்தபடியாக, தன் நிஷ்டை கலைந்ததற்குக் 'காரணம் என்ன என்ற வியப்பு அவருக்கு ஏற்பட்டது. அப்போது தான், அது மன்மதனுடைய வேலை என்பது விள்ங்கியது, தன் முன்னல் நிற்கும் மன்மதனை, மூன்று உலகங்களையும் எரிக்கக் கூடிய சக்தி வாய்ந்த தனது நெற்றிக் கண்ணினல் கோபத்தோடு நோக்கினர்.

மன்மதன் எரிந்து சாம்பலானன்.

இந்தக் காட்சியைக் கண்ட கௌரி, மிகவும் துக்கத்தோடு தன் பிதாவிடம் சென்றாள்.

அவருடைய அனுமதியைப் பெற்று, தவம் செய்வதற்காக அவள் வனத்துக்குச் சென்றாள்.

மன்மதன் எரிந்த சாம்பலைப் பார்த்தார் மஹாகணபதி.

அவர் வேடிக்கையாக அந்தச் சாம்பலைக் கொண்டு, ஓர் ஆண் வடிவத்தை உருவாக்கினர்.

விசித்ரமாக இருந்த அந்த சாம்பல் பதுமையைப் பரமேஸ் பார்த்தார்.

பரமேஸ்வரனுடைய பார்வை பட்டதும், பதுமை உயிர் பெற்று எழுந்தது.

மன்மதனைப் போலவே பேரழகு வாய்ந்து, மஹா பலவானகவும் காட்சியளித்த அந்த ஆண் மகனை, கணேசர் மிகவும் அன்போடு ஆலிங்கனம் செய்து கொண்டார். அத்துடன், சதருத்ரம் என்ற மஹா மந்திரத்தையும், அவனுக்கு அவர் உபதேசித்தார்.

அந்த மந்திரத்தை ஜபித்து, அவன் பரமேஸ்வரனை ஆராதனை பண்ணினன்.

அதனல் சந்தோஷம் அடைந்த பரமேஸ்வரன் அவன் எதிரில் காட்சி அளித்து, ''குழந்தாய், உனக்குஎன்ன வரம் வேண்டும்?'' என்று கேட்டார்.

அதற்கு அந்த பாலகன், 'ஸ்வாமீ, நான் யாரோடு போரிட்டாலும், எதிரியின் அஸ்திரசஸ்திரங்களால் எனக்கு ஒரு தீங்கும் ஏற்படக் கூடாது. அத்துடன், எதிரியின் பலத்திலே பாதி, என்னை வந்து அடைய வேண்டும்'' என்று வரம் கேட்டான்.

பரமேஸ்வரன் சிறிது சிந்தித்து விட்டு, ''நீ அறுபதினுயிரம் ஆண்டுகள் அவ்வாறே ஆட்சி புரிந்து வருவாய்'' என்று வரம் அளித்தார்.

அந்த பாலகனை பிரம்மதேவர் பார்த்து ''பண்டு!பண்டு'' (அதாவது, ''நன்று! நன்று!!'') என்று கூறினுர்,

பிரம்மதேவர் அவ்வாறு கூறியதால், அவன் பண்டன் என்று பெயர் பெற்ருன்.


ருத்ரனுடைய கோபாக்கினியின் சாம்பலிலிருந்து தோன்றின படியால், அவன் ரௌத்ர ஸ்வ பாவம் உடையனுகவும், மிகப் பெரிய பலசாலியாகவும் விளங்கினுன்.

அவனிடம் அசுர குணங்களும் காணப்பட்டன. அதனுல், அவன் பண்டாசுரன் என்றே அழைக்கப் பெற்ருன்.

பரவேஸ்வரனும் அவனுக்குப் பல அஸ்திர சஸ்திரங்களை அளித்தார்.

சில முக்கியமான தர்மங்கள்

வேத வேதாந்த
வித்வரத்னம்
பிரம்ம ஸ்ரீ
ஆர். முத்துகிருஷ்ண
சாஸ்திரிகள்



பிறர் மனைவியிடம் ஆசை வைக்கக்கூடாது. சீதையிடம் ஆசை வைத்த காரணத்தால் இராவணன் கொல்லப்பட்டான்.

விதூரதன் என்ற அரசன், மனைவியை நன்கு உணர்ந்து கொள்ளாமல், அவளிடம் பூர்ண நம்பிக்கைவைத்த காரணத்தால், அவளாலேயே கொல்லப்பட்டான்.

இராவணனுக்கு எல்லாவித ஐச்வர்யமிருந்தும், உலகம் முழுவதும் அவனைக்கண்டு நடுங்கிக் கொண்டிருந்தபோதிலும், இராமனுடைய அம்புகளால் கடைசியில் உயிர் துறக்க நேர்ந்தது. அதற்கு முக்கிய காரணம், அவன் பிறர் மனைவியான சீதையிடம் ஆசை வைத்ததுதான். மந்தோதரீ புலம்புங் காலத்திலும், மற்றவிடங்களிலும், ஸ்ரீ வால்மீகி முனிவர் இவ்வாறே கூறியுள்ளார்.

விதூரதன் என்ற அரசன், தன் மனைவிக்குத் தன்னிடம் பிரியமில்லை என்பதை உணராமல், அவளிடம் பூரண நம்பிக்கையுடன் பழகி வந்தான். ஆனால், அவள் தன் தலைப்பின்னலுக்குள் ஓர் கத்தியை அவன் அறியாமல் வைத்துக்கொண்டிருந்து, அதனால் அவனைக் கொன்றுவிட்டாள் என "ப்ருஹத் ஸம்ஹிதை"யில் காணப்படுகிறது.

மதுபானத்தில் மிகவும் ஈடுபட்டு மதம் பிடித்தவனுக ஆகி, வேதாளங்களைப்போல் சேஷ்டைகளைச் செய்யலாகாது. யாதவர்கள் மதுபானம் செய்து மதம் பிடித்தவர்களாக ஆகி, ஒருவரையொருவர் கோரையால்அடித்துக் கொண்டு நாசத்தை அடைந்தனர்.

யாதவர்கள் பிரபாஸ தீர்த்தத்தில் ஸ்நானம் முதலியவற்றைச் செய்வதற்காகச் சென்று, அங்கு ஏராளமாகக்குடித்து விட்டு, அக்குடிமயக்கத்தில்யாரையார் அடிக்கின்ருேம் என்ற அறிவு கூட இல்லாமல், தகப்பனைப் பிள்ளேயும், பிள்ளையைத் தகப்பனுமாக, அங்கு முளைத்திருந்த கோரைகளைப் பிடுங்கி அடித்து மாண்டனர் என்று, மஹாபாரதத்திலும் பாகவதத்திலும் காணப்படுகிறது.

பொறுமையே கலகத்திற்கு மூலம். பொறுமையே ஐச்வர்யங்களுக்கு மூலம். பொறுமை யென்ற குற்றத்தால், ஜனமேஜயன் என்ற அரசன், பிராம்மண சாபத்தை அடைந்தான்.

ஜனமேஜயன் என்ற அரசன் கார்க்கியமுனிவருடைய குமாரன் சூரனை இருப்பதைக் கண்டு பொறுமை கொண்டு, அவனை ஹிம்சித்தான். அதற்காக கார்க்கியர் அவனை சபித்தார். அவன் பலதுன்பங்களையடைந்து, இறுதியில் அழிந்தான் என ஹரிவம்சத்தில் கூறப்பட்டிருக்கிறது.

எவ்வளவு கஷ்ட தசையை அடைந்த போதிலும், தர்மத்தின் எல்லையைத் தாண்டலாகாது. ஹரிச்சந்திர மஹாராஜன் தர்மத்தை இரக்ஷிக்க விரும்பி, சண்டாளனுக்கு ஊழியனுக இருக்குந் தன்மையைக்கூட சகித்தான்.

ஸத்யத்தையே பேசுதல் என்ற விருதத்திற்குப் பங்கம் செய்து, புத்தியுள்ளவன் தன் சொந்தக் காரியத்தை சாதித்துக் கொள்ளக் கூடாது. தர்ம புத்திரர் ஸத்ய விருதத்தை அழித்ததால், நரகத்தில் உள்ள கிலேசத்தை நேரில் தரிசித்தார்,

தர்மபுத்திரர் மிகவும் ஸத்ய ஸந்தர். ஒருபொழுதும் பொய் சொல்லத் துணிய மாட்டார். அப்படிபட்டவருக்குக் கூட, ஒரு சமயம் பொய் பேச நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டது.

துரோணருடன் பல தினங்கள் போர் புரிந்தும் அவரைக்கொல்ல முடியாமல் தவித்துக் கொண்டிருக்கும் தருணத்தில், "அவருக்கு மிகவும் பிரியமான பிள்ளை அச்வத்தாமா இறந்து விட்டான் என்று ஒருவர் கூறினல், அதைக் கேட்டவுடன்வருத்தந்தாங்காமல் ஆயுதங்களைத் துறந்து விடுவார். அப்பொழுது அவரை சுலபமாக ஜயித்து விடலாம்" என்று ஸ்ரீ கிருஷ்ணன் கூறினர்.

அதற்கு அர்ஜுனன் இணங்கவில்லை. ஆனல் பீமன் மிகுந்த

உத்ஸாகத்துடன் உடனே எழுந்திருந்து, தன் சேனையைச் சேர்ந்த மாளவராஜனுடைய ''அச்வத்தாமா'' என்று பெயருள்ள ஓர் யானையைக் கொன்று, துரோணுசார்யருக் கெதிரில் ''அச்வத்தாமா இறந்துவிட்டான்'' என உரக்கக் கூறினன்.

ஆனல் தன் பிள்ளையின் வீர்யத்தை நன்கு உணர்ந்த துரோணர், பீமன் வார்த்தையை முதலில் நம்பவில்லை. ''எவனுடைய நன்மையின்பொருட்டுத் தாங்கள் உயிர் வாழ்கின்றீர்களோ, அவன் இறந்த பின்பும் ஏன் தாங்கள் பிராணனை வைத்துக்கொண்டிருக்கிறீர்கள்?'' என பீமன்வினவ, சந்தேகங் கொண்ட துரோணர், அச்வத்தாமாவைப் பற்றி சமீபத்தில் நின்று கொண்டிருக்கும் தர்மபுத்திரரைக் கேட்டார்.

அக்காலத்தில் பொய்யைச் சொல்லவும் தர்மபுத்திரர்விரும்பவில்லை. உண்மையைச் சொல்லுவதற்கும் மற்றவர்கள் சம்மதிக்கவில்லை. ஆதலால் ,'அச்வத்தாமா ஹத:'' என்று உரக்கச் சொல்லிவிட்டு, ''குஞ்ஜர:'' என்று தாழ்ந்த குரலில் கூறினர். குஞ்ஜர: என்பது துரோணர் காதில் விழாததால், தன் மகன் அச்வத்தாமாவே இறந்துவிட்டான்எனக் கருதி, கையில்உள்ள ஆயுதங்களை எல்லாம் எறிந்துவிட்டு, முடிவில் பிராணனைத் துறந்தார்.

இங்கு தர்மபுத்திரர் நேரடியாகப் பொய்யைச் சொல்லாத போனலும், அவர் வார்த்தையிலிருந்து பொய்யான விஷயத்தையே துரோணர் உணரும்படி நேர்ந்தது. ஆதலால் தருமர் ஸ்வர்க்கத்திற்குச் செல்லுகையில் நரகத்தில் உள்ள கஷ்டங்களையெல்லாம் நேரில் கண்டார்.

(குஞ்ஜர: யானை. ஹத: கொல்லப்பட்டான்).

ஸாதுக்களுடனேயே ஸ்நேகம் வைத்துக் கொள்ள வேண்டும். குணங்கள் அற்ற அஸாதுக்களுடன்பழகக்கூடாது.விபீஷணன் ஸ்ரீராமனுடைய ஸ்நேகத்தால் பெரிய ராஜ்யத்தைப் பெற்றன்.

தமையன்ஆனலும், அஸத்தாக இருந்ததால் இராவணனை விட்டுவிட்டு, ஸாதுவான ஸ்ரீராமனுடன் சேர்ந்ததால் விபீஷணன் இராஜ்யத்தைப் பெற்றன்.

தாயிடமும் தந்தையிடமும் மிகப்பிரியத்துடன், அவர்களுக்கு சந்தோஷகரமானகாரியத்தையே செய்துவர வேண்டுமல்லாமல், அவர்களுக்குக் கோபத்தைஉண்டு பண்ணக் கூடாது. தாயாருக்கு திருப்திகரமாக நடந்து கொள்ளாததால், ஸர்ப்பங்களுள் பல தாயின் சாபத்தைப் பெற்று ஜனமேஜயனுடைய ஸர்ப்பஸத்ரத்தில் நாசமடைந்தன.

அமிருதத்திற்காக தேவர்களும் அசுரர்களும் சேர்ந்து சமுத்திரத்தைக் கடையுங்காலத்தில், சமுத்திரத்திலிருந்து உச்சைசிரவஸ் என்ற ஓர்குதிரை உண்டாயிற்று.

அதைக் கேள்விப்பட்டதும், ஸர்ப்பங்களின் தாயான கத்ருவுக்கும், கருடனின் தாயான வினதைக்கும், உச்சைசிரவஸ் என்ன நிறம் என்பதைப்பற்றி சர்ச்சை ஏற்பட்டது.

வினதை, அக்குதிரைமுழுவதும் வெளுப்பென்றாள். கத்ரு அதன் வால் கருப்பு என்றாள். பிறகு அதை நேரில் பார்ப்பதென்றும், அப்பொழுது யார் சொன்னது உண்மையாக இருக்கின்றதோ, அவளுக்கு மற்றவள் ஊழியம் செய்ய வேண்டும் என்றும், இருவரும் உடன்படிக்கை செய்து கொண்டனர்.

கத்ரு, தன் வார்த்தை உண்மையாக ஆகவேண்டுமென்பதற்காக, தன் பிள்ளைகளான ஸர்ப்பங்களை அழைத்து, அக்குதிரையின் வாலில் சுற்றிக்கொள்ளும்படி உத்தரவிட்டாள்.

அதற்கு சில ஸர்ப்பங்கள் இணங்கவில்லை. உடனே கோபங்கொண்ட கத்ரு, "ஜனமேஜயனுடைய ஸர்ப்பஸத்ரத்தில் நீங்கள் அழியக் கடவீர்கள்" என சபித்தாள். அவ்விதமே அந்த ஸர்ப்பங்களும் அழிந்தன.

ஆதலால், தாயாருக்கு சந்தோஷகரமான காரியத்தை அவசியம் செய்யவேண்டும். இங்கு தாயின்வார்த்தை நீதியற்றதானாலும், அதை மீறுவது தனயர்களுக்கு தர்மமல்ல என்பது தான் கருத்து.

தனது யௌவனத்தை அளித்து தந்தையின் கிழத்தனத்தை ஏற்றுக்கொண்ட பூரு என்ற பிள்ளை இளையவன் ஆனாலும், அவனே யயாதி என்ற அரசனால் சக்ரவர்த்தியாகச் செய்யப் பட்டான்.

யயாதி என்று ஓர் அரசன் இருந்தான். அவனுக்குப் பிள்ளைகள் உண்டு. அவன் கிழவனாக ஆன பின்பும் யௌவன சுகத்தை அனுபவிக்கவிரும்பி, தன் கிழத்தன்மையைப் பிள்ளைகளுள் ஒருவனுக்கு அளித்து அவனுடைய யௌவனத்தைப் பெற்றுக்கொள்ள முயன்றான்.

கடைசிபிள்ளையான பூரு தான் அவனுடைய விருப்பத்திற்கு இணங்கினான். மற்றவர்கள் இணங்கவில்லை. ஆதலால், பூருவிடம் மிகவும் சந்தோஷங்கொண்ட யயாதி, இளையவன் ஆனாலும் அவனுக்கே இராஜ்யத்தை அளித்தான். ஆதலால், தகப்பன் விருப்பத்தை நிறைவேற்ற வேண்டியது மிக அவசியம் எனத் தெரியவருகிறது.

அவரவர்களுடைய சக்திக்கேற்றவாறு அளந்தே தானம் செய்ய வேண்டும். முதலில் கொடுத்துவிட்டுப் பிறகு வருந்தக்கூடிய ரீதியில், தானம் செய்யலாகாது. பலி சக்ரவர்த்தியால், தானம் செய்த பொருளை முழுவதும் அளித்துத் தான் சுத்தமாவதற்காக, தன் உடலே அளிக்கப் பட்டது.

பலி, யாகம் செய்யுங்காலத்தில் ஸ்ரீ விஷ்ணு வாமநாவதாரம் எடுத்து அவனிடம் யாசகத்திற்காகச் சென்றார்.

அவரைக் கண்டதும் "தாங்கள் எதை வேண்டுமானாலும் கேளுங்கள், தருகிறேன்" என்று வாக்களித்து விட்டான்.

உடனே "என் காலால் அளக்கப்பட்ட மூன்று அடி பூமியை கொடுத்தால் போதும்" என வாமநர் கேட்டுக் கொண்டார்.

அதற்கு பலி சம்மதித்தான். உடனே வாமநர் திரிவிக்ரமராகத் தோன்றி, அவனுடைய சொத்து முழுவதையும் இரண்டே அடிகளால் அளந்து விட்டார்.

மூன்றாவது அடியாக அளக்க வேறு ஒன்றுமே இல்லையென்பதை அறிந்ததும், வாமநரைச் சேர்ந்தவர்கள் பலியை வேறு இடத்திற்குச் செல்ல முடியாமல் கட்டிப் போட்டனர்.

அப்பொழுது, வாக்தானம் செய்ததை மிச்சமில்லாமல் கொடுத்துத் தீர்த்து சுத்தியடைவதன் பொருட்டு, அவனுடைய தலையையே மூன்றாவது அடியாக அளிக்கவேண்டியதாக ஆயிற்று.

ஆதலால் சக்திக் கேற்றவாறு அளந்தே தானம்செய்யவேண்டும்.

★

அடிமுடியில்லாத ஆதிபரம்பொருள்



ஜகத்குரு
ஸ்ரீ காமகோடி பீடாதிபதிகள்

சிவாலயங்களில் கர்ப்பக்கிருஹத்தின் மேற்கு பாகத்தில், லிங்கோத்பவ மூர்த்தியின் பிம்பம் இருக்கும். ஒவ்வோர் ஆலயத்திலும் இருப்பது ஸ்ம்பிரதாயம்.

கர்ப்பக் கிருகத்திற்கு வெளியில் பிரதக்ஷிணம் பண்ணினால், தக்ஷிணத்தில் தக்ஷிணாமூர்த்தி இருப்பார். கர்ப்பக்கிருகத்துக்கு நேர் பின்பக்கத்தில் ஒரு மஹாலிங்கம் இருக்கும். அதற்குள் தீர்க்கவிருத்தமாக (அதாவது, அண்டாகாரமாக) உள்ள ஒரு இடத்தில், பரமேசுவர ஸ்வரூபம் மான் மழுவுடன் இருக்கும்.

சிரஸுமாத்திரம் தீர்க்க விருத்தமாக இருக்கும். அந்த ஸ்வரூபத்தில் சிரஸும் தெரியாது. பாதமும் தெரியாது. பாக்கி எல்லாம் லிங்கத்துக்குள் அந்தர் பாவமாக இருக்கும்.

லிங்கோத்பவ மூர்த்தி என்பது, பரமேச்வரனுடைய அறுபத்து நான்கு மூர்த்திகளுக்குள் ஒன்று. விருஷபாரூடர், அர்த்த நாரீச்வரர், ஹரி ஹரர், நடராஜ மூர்த்தி, பைரவர், தக்ஷிணா மூர்த்தி, ஸோமசேகர மூர்த்தி, பிக்ஷாடனர், ஊர்த்வ நடனர், ஜலந்தராஸுர ஸம்ஹாரர், கால ஸம்ஹாரர் இப்படி அறுபத்து நான்கு மூர்த்திகள் உண்டு. அவைகளுக்குள் ஒன்று லிங்கோத்பவ மூர்த்தி.

அந்த மூர்த்திதான், சிவாலயத்திலுள்ள லிங்கத்துக்கு நேர் மேற்கே பின்புறம் தீர்க்க விருத்தமாகக் காணப்படும். அதற்குக் கீழே ஒரு வராஹ மூர்த்தி இருக்கும்; மேலே ஹம்ஸரூப மூர்த்தி ஒன்று இருக்கும்.

ஸ்ரீ ருத்திராபிஷேகம் பண்ணுவதற்கு முன்பு, ஒரு தியான

சுலோகம் சொல்லிட்டு அப்புறந் தான் அபிஷேகம் பண்ணுவது வழக்கம்.

அந்த சுலோகத்தில், ''பாதாள முதல் ஆகாசபரியந்தம் எல்லை யில்லாத அநந்த ஸ்வரூபமாகப் பிரகாசிக்கின்ற ஸ்படிக லிங்கத் துக்கு அபிஷேகம் பண்ணு கிறேன்'' என்று சொல்லியிருக் கிறது.

ஸ்படிக லிங்கம் நிர்லிப்த மானது. அதற்கு ஒரு வர்ண மும் சொல்ல முடியாது. சுத்த மானது. எந்த வஸ்துவை அதில் வைக்கிறோமோ அதனுடைய பரிணமத்தை அது அடையும். குணதோஷம் இல்லாதது அது.

ஞானம் எப்படி பரிசுத்தமாக இருக்கிறதோ, அப்படி அந்த ஸ்படிக லிங்கம் இருக்கிறது. அதன்மேல் பச்சையை வைத் தால், பச்சையாகத் தோன்றும். சிவப்பை வைத்தால், சிவப்பாகத் தோன்றும். அது நிர்விகார மானது.

பரப் பிரம்ம ஸ்வரூபம் நிர் விகாரமாக இருந்தாலும், நம் முடைய மனோ பாவத்தை எப்படி வைக்கிறோமோ அப்படி தோன்றுமென்பதற்கு திருஷ் டாந்தமாக, அந்த ஸ்படிக லிங்கம் இருக்கிறது. அது எதை யும் மறைக்காது. அதற்கு அப் புறம் உள்ள வஸ்துக்களையும் அதன் வழியாகப் பார்க்கலாம். ஞான ஸ்வரூபமானது ஒன்றை யும் வைக்காமற் போனால் சுத்த மாக இருக்கும். நிர்க்குணமான பரமாத்ம வஸ்துவுக்கு, அது திருஷ்டாந்தம். நினைக்கிற ரூப மாக அது ஆகும்.

அதன் சிரஸில் பூர்ணசந்திர கலை இருக்கிறது. ஸஹஸ்ரார கமலத்தில் உள்ள சந்திர மண்ட லத்தில் ஜ்யோதி ஸ்வரூபத்தைத் தியானம் பண்ணுகிறவர்களுக்கு சந்திர கலையிலிருந்து அமிருதம் ஒழுகுகிறது. ஆதலால் பரமானந் தம் உண்டாகிறது.

ஸமஸ்த பிரபஞ்ச ஸ்வரூபம் அந்த ஜ்யோதி ஸ்வரூபமான லிங்கந்தான். ஆகையால், அது குளிர்ந்தால் லோகமெல்லாம் குளிரும். ஸர்வ காலங்களிலும், ருத்திர அபிஷேகத்துக்கு முன்பு இந்த சுலோகத்தைச் சொல்லித் தியானம் பண்ணவேண்டும்.

ஸகல பிரம்மாண்டமும் சிவ லிங்கம். அபிஷேக காலங்களில் இப்படித் தியானம் பண்ண வேண்டும். ஸ்ரீ ருத்திரத்தில் அது தான் சொல்லப்பட்டிருக்கிறது. ஸர்வ பதார்த்தங்களும், நல்லது கெட்டது எல்லாம் பகவத் ஸ்வ ரூபம் தான் என்று ஸ்ரீ ருத்திரம் சொல்லுகிறது.

பரம மதுரமாகவும் சீதளமாக வும் உள்ள சந்திர மண்டலத் தைத் தியானம் பண்ணவேண் டும்; பின்பு அபிஷேகம் செய்ய வேண்டும். பதங்களை வேகமில் லாமல் சொல்லவேண்டும். த்ரு தம் என்பது வேகம். த்ருத காலம் என்பதைத்தான் துரித காலம் என்று தப்பாகச் சொல்லு கிறார்கள்.

லிங்கோத்பவ மூர்த்தியின் பெருமை, அந்தச் சுலோகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்படி கம் பரிசுத்தத்தைக் காட்டுகிறது. எப்படி எப்படிப் பார்க்கிறோமோ அப்படி அப்படி வந்து அநுக்கிர ஹம் பண்ணுவதை, அது குறிக் கிறது. ஜகத்முடிய அந்த ஸ்வரூ பந்தான்.

விருத்தத்துக்கு, அதாவது வட்டமான ஸ்வரூபத்துக்கு, அடிமுடியில்லை. ஆதியில்லை, அந்தமுமில்லை. மற்றவைகளுக்கு உண்டு. சதுரத்திற்கு உண்டு. ஆத்யந்தமில்லாத வஸ்து என்பதை லிங்காகாரம் காட்டுகிறது.

அந்த மாதிரி மஹாலிங்கத்தை அபிஷேகம் பண்ணித் தியானம் பண்ணுகிறபோது, ஏதாவது ஓர் உருவம் தெரிந்தால்தான் மனதிற்கு ஆநந்தம் உண்டாகிறது. யாராவது பந்துவை நினைக்கிறோம். அவருடைய உருவத்தையும் பார்த்தால் ஸந்தோஷம் உண்டாகிறது. ஒரு மூர்த்திகரத்தோடு அநுக்கிரஹம் பண்ணினால் மனதுக்கு சந்தோஷமாக இருக்கும்.

ஞானிகளுக்கு பரமாத்ம ஸ்வரூபத்தின் உண்மை தெரியும். உருவத்தைப் பார்த்துப் பார்த்து ஆனந்தம் அநுபவிக்கிறவர்களுக்கு, அப்படிக் கண்டால்தான் ஆனந்தம் உண்டாகும். அதற்காகத்தான், லிங்கோத்பவ மூர்த்தியாகப் பகவான் இருக்கிறார்.

பல சிவாலயங்களில், லிங்கோத்பவ மூர்த்தி கர்ப்ப கிருஹத்துக்குப் பின்பு இருக்கிறார். சில கோயில்களில் அந்த இடங்களில் மஹாவிஷ்ணு இருப்பதுண்டு. லிங்கோத்பவத்திலும் மஹாவிஷ்ணு வராஹமாக இருக்கிறார்.

அடிமுடி இல்லை என்றேன். அவர் ஜ்யோதிஸ்வரூபமாக நின்றார். அந்த ஸ்வரூபம் (லிங்கோத்பவம்) ஏற்பட்ட ஸ்தலம் அருணாசலம். ஜ்யோதிர்மயமாக இன்றைக்கும் தீபம் ஏற்பட்டிருக்கிறது.

அப்படி ஜ்யோதி ஸ்வரூபமாகப் பரமேசுவரன் நின்றபொழுது, விஷ்ணு பாதத்தைப் பார்க்கப் பாதாளத்துக்குப் போனார். பூமியைக் கல்லும் ஸ்வபாவம் வராஹத்திற்கு உண்டு. அந்த ரூபத்தை எடுத்துக்கொண்டார்.

பிரம்மா ஹம்ஸஸ்வரூபமானார். பக்ஷிக்குப் பறப்பது ஸ்வபாவம். இரண்டு பேருக்கும் தேடிப் போனவை அகப்படவில்லை.

ஹம்ஸம் வந்தது. 'நான் கண்டுவிட்டேன்' என்று அபத்தம் சொல்லியது. அதனால் பிரம்மாவுக்கு பிரத்தியேகமாகப் பூஜை இல்லாமற் போய்விட்டது. பரிவாரமாக மட்டும் வைத்துப் பூஜை செய்வதுண்டு.

அந்தப் பிரம்மாவுக்கு அநுகூலமாகத் தாழம்பூ இருந்து பொய் சொல்லிற்று. அதனால் அது பரமசிவனுக்குக் கூடாதென ஏற்பட்டது. புராண ஐதிஹ்யத்தில் இப்படி இருக்கிறது.

பிரம்மா ஹம்ஸரூபமாகப் போயும் சிரஸ் அகப்படவில்லை. விஷ்ணு வராஹரூபமாகப் போயும் பாதம் அகப்படவில்லை. ஆத்யந்த ஹீனமானவர் அவர் என்பதுதான், இதனால் அறிந்துகொள்ளவேண்டியது. அப்படி உள்ளதைக் காட்டுவதற்காக, இந்த விஷயம் அருணாசல க்ஷேத்திரத்தில் ஏற்பட்டது.

முந்நூறு வருஷங்களுக்கு முன், ஒரு பெரிய மஹான் இருந்தார். தஞ்சாவூர் ராஜ்யத்தை அவர் ஸ்தாபித்தார். ஒரு ராஜாவுக்குப் பட்டாபிஷேகம் செய்து வைத்தார் அந்தப் பெரியவர். ஜ்யோ

திஷம் பார்த்து, ராஜாவாக ஆவார் என்று தெரிந்து, அப்படியே பண்ணிவைத்தார்.

தஞ்சாவூரில் கருடவ்யூஹமாகக் கோட்டை கட்டி, பேருக்கு அவரை ராஜாவாகவைத்து, எல்லாவற்றையும் தாமே கவனித்து வந்தார். ஆலயங்கள் கட்டினார். வாய்க்கால்கள் வெட்டி பூமிக்கு வேண்டிய ஸௌகரியங்களைச் செய்தார், அருணசல க்ஷேத்திரம் அவர் ராஜ்யத்தில் சேர்ந்திருந்தது.

அவர் பெயர் ஐயன் என்பது. வேறு பெயர் இருந்திருக்கலாம். எல்லோரும் ஐயன் என்று மரியாதையாகக் கூப்பிட்டார்கள். அவர் வெட்டிய குளத்துக்கு ஐயன் குளம் என்று பேர்.

இப்படியே ஐயன் கோபுரம் முதலியவைகள், அவருடைய பேரால் வழங்குகின்றன. ராஜா செய்ததாக அவரைச் சேர்ந்தவர்கள் சிலபேர் சொல்லுவார்கள். ஆனால் லோகமெல்லாம் ஐயன் செய்ததாகத் தான் சொல்லும்.

ஐயனுடைய புத்திரர், அருணசல க்ஷேத்திரத்தில் ராஜா ஒரு குளம் வெட்டி, ஒரு கோபுரம் கட்டினதாகச் சொல்லி யிருக்கிறார்.

கம்பீரமான குளம் ஒன்றை வெட்டி, உன்னதமான கோபுரம் ஒன்றைச் சோணகிரீசருக்குக் கட்டினார் என்று ஒரு சுலோகத்தில் அவர் சொல்லுகிறார்.

எதற்காக அவைகளை உண்டாக்கினார்? மாதவனும் பிரம்மாவும் சேர்ந்து, அந்த கிரீசரின் பாதத்தையும் சிரஸையும் பார்க்கப் போனால், அவர்களுக்குக் கொஞ்ச தூரம் ஸஹாயம் பண்ணுவதற்குக் கட்டப்பட்டவைபோல அவை இருக்கின்றன என்று, உத்ப்ரேக்ஷை பண்ணியிருக்கிறார்.

கோபுரம் ஏணிபோல் இருக்கிறது. அதில் கொஞ்ச தூரம் போகலாம். குளம் ஆழமாக இருக்கிறது. அதில் கொஞ்ச தூரம் போய் அப்புறம் தோண்டலாம் அல்லவா?

அருணசல விஷயம், லிங்கோத்பவத்துக்காக ஆவிர்ப் பவித்தது. அருண ஜ்யோதிஸுக்கு அடையாளமாகப் பர்வதமும், ஜ்யோதிஸுக்குத் தீபமும் ஏற்பட்டிருக்கின்றன.

அந்தப் பரமாத்மாவை, கேவலம் ஆத்யந்த ரஹிதரென்றும், ஜ்யோதி ஸ்வரூபரென்றும் தியானிக்க வேண்டும்.

ஸ்படிக லிங்கம் ஸ்வயம் ஜ்யோதிஸுக்கு அடையாளம். அந்த ஜ்யோதி ஸ்வரூபத்தைத் தெரிவிக்கத் தான், கார்த்திகை தீபம் ஏற்பட்டிருக்கிறது. ஸமயம் நேர்ந்தால், இந்த ஸ்வரூப சம்பந்தமான புராணத்தை வாசித்துத் தியானம் பண்ண வேண்டும். இந்த மாதிரி விசேஷங்களெல்லாம், லோகத்திற்கு நன்மைஉண்டாகிறதற்காக ஏற்பட்டவை. ஆகையால், ஸ்படிகலிங்கஸ்வரூபமாக உள்ள ஸ்ரீ சந்திரமௌளீச்வரருடைய அநுக்கிரஹத்தைப் பெற்று, ஆனந்தத்தை எல்லோரும் அடையவேண்டும்.

★


அனைவருக்கும்
ஆனந்தம் அளிப்பது
காளி
மார்க்
காளி மார்க்
Kali mark
ஸ்டுடியோ 'செட்'டில்
அனைவரையும்
ஆட்டிவைக்கும்
டைரக்டரையும்
ஆட்கொள்வது
காளிமார்க் பானம்.
ஆயிரக்கணக்கானவர்கள்
காளிமார்க்கின் குளிர்ந்த,
புதுமை மாறாத, ருசியை
அனுபவிக்கின்றனர்.
நீங்களும் உங்கள் தாகம்
தணிய காளிமார்க்
பானங்கள் அருந்துங்கள்.
50 ஆண்டுகளாகப் புகழ் பெற்றவை. எங்கும் கிடைக்கும்.

ரிஷப தேவர் கதை

ஸ்ரீ ஜி. வேங்கடேச்வர ராவ்

பக்தியே உயர்ந்தது எனக்காட்டும் கிரந்தம் ஸ்ரீமத் பாகவதம்.

அதன் ஒவ்வொரு ஸ்கந்தத்திலும் பிரம்ம தத்துவமும், ஆத்ம தத்துவமும் பேசப்படுகின்றன.

அப்படிப்பட்ட மஹோந்நதமான கிரந்தத்தில், ரிஷபோபாக்யானம் (அதாவது, ரிஷபதேவரின் கதை) ஒரு மாணிக்யம் போல் பிரகாசிக்கின்றது.

பாகவதத்தில் ஐந்தாவது ஸ்கந்தம் மிகச் சிறந்தது. அதற்குக் காரணங்கள் பல. முதலாவதாக இந்த ஸ்கந்தத்தில் தான், ஞானிகளான ரிஷபதேவர், ஜடபரதர் ஆகியோரின் கதைகள் கூறப்பட்டுள்ளன. ரிஷபதேவர் ஸாக்ஷாத் வைகுண்ட வாசியான ஸ்ரீ மஹா விஷ்ணுவின் ஒரு திரு அவதாரமாகும். இரண்டாவதாக, மூன்ருவது நான்காவது ஸ்கந்தங்களை விதுரருக்கு மைத்ரேய முனிவர் உபதேசித்த வண்ணம் கூறிவந்த ஸ்ரீசுகாச்சாரியார், ஐந்தாவது ஸ்கந்தத்தில் தாமே ஸ்வதந்த்ரமாகப் பேசத் தொடங்குகிருர்.

ஸ்ரீ மஹா விஷ்ணுவின் நாபிக் கமலத்தில் தோன்றியவர் பிரம்மதேவர். பிரம்மாவின் பிள்ளை ஸ்வாயம்பு மனு. ஸ்வாயம்புமனுவுக்கு, பிரியவிரதன், உத்தானபாதன் எனஇரண்டு புத்திரர்கள்.

உத்தான பாதனுடைய பிள்ளைதான் பரம பாகவத உத்தமரான துருவஸ்வாமி. உத்தான பாதனுடைய தமயன் பிரியவிரதன். அவனுடைய பிள்ளை அக்னிதரன், அக்னிதரனுடைய பிள்ளை நாபி என்பவர்.

இந்த நாபியானவர் ஒரு யாகம் செய்தார். ஸ்ரீமந்நாராயணமூர்த்

தியே ரிஷப தேவர் என்ற பெய ருடன், நாபிக்குப் புத்திரனாகப் பிறந்தார்.

ரிஷபர் என்னும் சொல்லுக்கு, சிரேஷ்டர் என்று பொருள். சிரேஷ்டமான அவதூத ஸந்யாஸ ஆசிரம தர்மத்தைக் கடைப்பிடித் துக் காட்ட அவதரித்ததால், அவருக்கு அந்தப் பெயர் வந்தது.

ஸத்புத்ர லாபம் என்பது, நாம் தினந்தோறும் செய்கின்ற ஸத்கர் மாக்களின் ஓர் பயனாகும். புத்ர னுக்கு வயது வந்ததும், குடும்ப பாரத்தை அவனிடம் ஒப் படைத்து விட்டு, தந்தையான வர் ஸ்ரீமந்நாராயணனைப் பூஜிப்ப தற்காகக் காட்டுக்குச் செல்வது, நம்பாரததேசத்தின் பழமையான ஆசாரம். அதன்படியே ரிஷபதேவ ரிடம் இராஜ்ய பாரத்தை ஒப் படைத்து விட்டு, நாபி மன்னர் தன் பத்னியாகிய மேரு தேவி யுடன் தபோவனத்துக்குச்சென்று விட்டார்.

ரிஷபதேவர் இராஜ்யத்தை ஆளும் காலத்தில், அஜநாபம் என்னும் அவருடைய தேசத்தில் ஒரு சமயம் மழை பெய்யவில்லை. தன்னுடைய தயவு இல்லாவிட் டால் உலகில் மழை பெய்ய மாட் டாது என்று இந்திரன் அகம் பாவம் கொண்டிருந்தான். ஆனால் ரிஷபதேவர் தன்னுடைய யோக பலத்தால் மழை பெய்யச் செய்து விட்டார். அதைக் கண்டு இந்தி ரன் வெட்கம்அடைந்தான். தான் இழைத்த தவறைப் போக்கிக் கொள்ளும் பொருட்டு, தன்னு டைய பெண் ஜயந்தி என்பவளை ரிஷபதேவருக்கு அவன் திருமணம் செய்து கொடுத்தான்.

ஜயந்தி நூறு புதல்வர்களை ஈன்றெடுத்தாள். அவர்களில் மூத் தவர் பெயர்பரதன். அவருடைய பெயரால் தான், இன்றைக்கு இந்த நாடு பாரத தேசம் என்று அழைக்கப்பட்டு வருகிறது.

நீண்ட காலம் இராஜ்யபாரம் செய்த பின்பு, ரிஷபதேவர் ஒரு நாள் தன் பிள்ளைகளை சபைக்கு வரவழைத்து, தான் ஓர் அவதூத ஸந்யாஸி ஆகி விடப் போவதாக அறிவித்தார். அத்துடன் அந்தப் பிள்ளைகளுக்குப் பல நல்ல அறி வுரைகளையும், பக்திவைராக்கியம் முதலியவற்றை அடைவதற்கான வழிகளையும், பல பிரம்மரிஷி களின் முன்னிலையில் உபதேசித் தார்.

"பகவானை ஆராதிப்பதற் காகவே இந்த சரீரம் இருக்கிறது. அந்த ஆராதனையினால் சித்தசுத்தி ஏற்படும். ஜனன மரண பந்தத் திலிருந்தும் விமுக்தி கிடைக்கும்" என்று அவர் அறிவுறுத்தினார்.

அப்போது, "தர்மத்தை அறி வதற்கு நாங்கள் எந்தப் புஸ்தகத் தைப்படிக்க வேண்டும்?" என்று கேட்டார்கள் அவருடைய பிள்ளை கள்.

"புஸ்தகங்களைப் படிப்பதால் மட்டும் தர்மத்தை அறிய முடி

யாது. மஹான்களை அண்டி, அவர்களுடைய பாத தூளியால் உங்களை அபிஷேகம் செய்து கொண்டால், நீங்கள் தர்மத்தை அறியலாம். க்ஷேமத்தையும் அடையலாம்'' என்று பதில் அளித்தார் ரிஷபதேவர்.

இப்படி அற்புதமான பல உபதேசங்களைத் தன் பிள்ளைகளுக்கு அருளிய பின்னர், சொத்து சுகங்கள் அனைத்தையும் தியாகம் செய்து விட்டு, ரிஷபதேவர் அவதூதராக (அதாவது நிர்வாண ஸந்யாஸியாக) வெளியேறினர்.

ஆத்ம சுகத்திலேயே லயித்தவராய், ரிஷபதேவர் உலகம் முழுவதும் ஸஞ்சாரம் செய்தார். ஆஹாரத்துக்காக எந்த ஒரு பிரயத்னமும்செய்யாமல், தானகவே கிடைத்த உணவைக் கையால் கூடத் தொடாமல், பசுக்களைப் போல் நேரடியாக வாயாலேயே எடுத்துச்சாப்பிட்டார். இப்படி பட்ட பல அருஞ்செயல்களின் மூலம், உலகத்திற்கு அவதூத தத்துவத்தை விளக்கிக் காட்டினர்.

இத்தகைய மஹா ஞானிகளை நெருப்புக் கூடச் சுடமாட்டாது என்று நிரூபிக்கும் வகையில், அவருடைய உடலில் காட்டுத் தீ பற்றிஎரிந்தபோது, அதனுடைய தாபத்தை அவர் உணராமலிருந்தார். அம்மாதிரிப் பெரியோர்கள் தாம், பிறருடைய தாபத்தையும் போக்கக்கூடியவர்கள் ஆவர்.

பகவத் கீதையில், ''நானும் ஞானியும் ஒன்றே!'' என்று கூறுகிறார் பகவான். ஆகையால், ஞானிகளின் வரலாறுகளைப் படித்து, நமது தாபத்ரயங்களிலிருந்து நாம் விடுபடுவோமாக!

(குறிப்பு: இந்தரிஷபதேவரைத் தான், சமணர்கள் அருகக்கடவுள் என்ற பெயரால் வழிபட்டு வருகிறார்கள்.

—ஆசிரியர்)

★

ஒன்றையும் கேளாதே; எதையும் பதிலாக விரும்பாதே. கொடுக்க வேண்டியிருப்பதைக் கொடு; அது உன்னையே திரும்ப அடையும்— ஆனல் அதைப் பற்றி இப்போது நினையாதே. அது ஆயிரம் மடங்காகப் பெருகி உன்னிடம் மீளும் — ஆனல் அதிற் கவனத்தைச் செலுத்துதல் கூடாது. கொடுக்கும் சக்தி உன்னிடம் உளது; ஆதலின் கொடு; அதோடு நிற்க.

— சுவாமி விவேகானந்தர்

திருப்புகழ் தண்டபாணி ஸ்வாமிகள்

ஸ்வாமி சரவணபவானந்தர்

வண்ணம் பாடுவதில் ''சரபம்'' என்ற பெயரைத் திண்ணமாகப் பெற்றவர், திருப்புகழ் தண்டபாணி சுவாமிகள்.

பின்னால் வந்த வண்ணப் புலவர்களுக்கெல்லாம் வழிகாட்டியாய் வந்தவர்.

சுவாமிகளின் பணியே ஒரு தனி பாணி. எழுந்து விழுந்து சாஷ்டாங்கமாகத் தண்டம் செய்ய வேண்டிய பாணி தான், அந்த தண்டபாணி.

கையில் ஒரு தண்டூன்றிய காரணத்தினால் ''தண்டபாணி'' என்னும் பெயர் பெற்றார் அல்லாமல், கண்ட கண்ட பாணியில் கவி பாடுகின்ற, வீண் தண்டமான பாணியாகிய தண்டபாணியல்ல. முருகனின் அருள் அமுதத்தை முழுவதும் அள்ளி உண்ட பாணி. அதனால், அழியாப்புகழை என்றும் தன்னகத்தே கொண்ட பாணி.

முருகனுக்கே முற்றும் அடிமையானதனாலே, ''முருகதாசர்'' எனப் பெயர் பெற்றார்.

அருணகிரிக்குப் பின்னே, அவதார மூர்த்தியாகவே வந்து பெருமானது பெரும் புகழைப் பாடி, ''திருப்புகழார்'' என்னும் சிறப்புப் பெயர் பெற்றார்.

இயற்பெயர் ''சங்கரலிங்கம்'' என்பது. திருவருள் ஒன்றினால் தான் உயிர்க் கவி பாட முடியும் என்ற உண்மையை, வெண்மையாய் விளக்கிக் காட்டியவர். சந்தம் பாடுவதில் அதி சமர்த்தர்.

அருணகிரி, ''பெருமாளே!'' என்றால், இவர் ''பெருமானே!'' என்றார்.

சரிகமபதநி என்ற ஏழுவகைச் சுரங்களுடன் இசைஎழுவதுபோல தத்த தாத்த தந்த தாந்த தன தான தன்ன தைய என்ற எட்டு வகையான சந்தங்களுடன் பாடுவதற்குத்தான் ''வண்ணம்'' என்று பெயர். அகப்பொருள் துறைகளையமைத்து, ஆண்பெண் என்ற கலைகளுடன் பாடப் பெறுவது.

இயற்கையாக உள்ள வண்ண இலக்கணத்திற்கு மேலும் இலக்கணம்கண்டு ''வண்ணத்தியல்பு'' என்று ஒரு இலக்கண நூலையும் இயற்றினார். புலவர் பெருமக்களால் ''வண்ணச் சரபம்'' என்று வாழ்த்தி வணங்கப் பெற்றார்.

சைவம் - வைணவம் – சௌரம் சாக்தம் – காணபத்தியம் – கௌ

மாரம் என்னும் அறுவகை சமயத்திற்கும் அதிகாரியாய், அதற்கு அதீதமான சமரச கௌமார சமயத்தைச் சார்ந்தவராய், உச்சியிலிருந்து உள்ளங்கால் வரையிலும் திருநீறு அணிந்து, இரு தோள்களிலும் தென்கலை வடகலை திருநாமத்தைச் சாத்தி, கழுத்தில் உருத்திராக்கம் துளசி தாமரை முதலிய மாலைகளையணிந்து, உலகத்திற்கு ஒருபெரும்விநோதக் காட்சியளித்தார்.

அந்த விஷயத்தைத்தமது "குருபர தத்துவம்" என்னும் காவியத்தில் கூறினர் :

"சிறிதுநாள்பொதுவேடமிட்டு
உலவினேன் அவற்றினுள்

திருநாமக்குறி இரண்டும் என்
தோள்களில் பொலிந்தன...!"
என்பதாகும்.

ஒரு லட்சம் கவிகளுக்கு மேல் உருவாக்கியுள்ளார்.

எழுத்து — சொல் — பொருள் யாப்பு—அணி என்று ஐந்து வகையான இலக்கணந்தான் உள்ளது. இவர், அதற்கு மேல் வண்ண இலக்கணம் என ஓர் இலக்கணத்தைக் கண்டார். சொல்லப்போனல், பரத இலக்கணமும் இயற்றியுள்ளார். எனவே, எழுவகையான இலக்கணங்கள் இவர் கண்டுள்ளார்.

அமுதத் தமிழாகிய அறிவுப் பெட்டகம் இருந்த அந்த அறையை எட்டிப் பிடித்த எட்டரை வயதில், அருட்கவி பாடத் தொடங்கினர்.

அஞ்சா நெஞ்சினர்!
வைராக்கிய சித்தர்!
இல்லற ஞானி!
காதல் மணம் இன்னதெனக்
கண்டவர்!

முருகனுக்கு 18 கண்கள் உண்டு என்பதை அநுபவத்தால் அறிந்து, வாதித்து நிரூபித்தவர்.

ஏழாயிரம் பிரபந்தங்களை மிக எளிதாகப் பாடினவர்.

சமயம் 6. சமயாதீதம் 1 ஆக 7க்கும் ஏழு ஆயிரம்.

96 பிரபந்தங்களில் ஒன்ருன "ஒலியல் அந்தாதி" பாடியுள்ளார். 8 திருப்புகழ் சேர்ந்தது போல் 64 கலைகளில், அந்தாதித் தொடர் 30 பாடல்களையுடையது.

வண்ணச் சரப வள்ளல் பாடிய நூல்கள் பல.

புலவர் புராணம்
பழநித் திருவாயிரம்
தில்லைத் திருவாயிரம்
திருவரங்கத்திருவாயிரம்
தெய்வத் திருவாயிரம்
அருணகிரி புராணம்
தமிழலங்காரம்
சத்திய சூத்திரம்
சூரியமாலை
தியாஞ நுபூதி
மயிலாசலக் கலம்பகம்

இன்னும்,

அந்தாதி, மாலை, பதிகம், சதகம், இரட்டை மணிமாலை, மும்மணிக்கோவை, மஞ்சரி, பந்தம், தாழிசை, வண்ணம் திருப்புகழ் வகுப்பு மடக்கு, பிள்ளைத் தமிழ்.

அப்பப்பா! ஆயிரம்! பல்லாயிரம்! இலட்சம்!

இதில், ஏட்டில் எழுதிக் கிழித்துப் போட்டவை எத்தனையோ! ஆற்றில் போட்டவை அனந்தம்!

கொலை-புலை கூடாது என்பது இவரது குறிக்கோள்.

சமரசத்தை விளக்கவந்த அருட்பெருந் தலைவர்கள் நிறைந்த நேரத்திலே வாழ்ந்தவர். கூடுமான வரையிலும் அவர்களோடு நெருங்கிப் பழகினவர்.

குறிப்பாகச்சொல்லப்போனல்,

வடலூர் இராமலிங்க வள்ளல், விற்பன்னர் வேதநாயகம்பிள்ளை, கோடகநல்லூர்சுந்தரசுவாமிகள், கோபால கிருஷ்ண பாரதியார், மகா வித்வான் மீனுட்சி சுந்தரம் பிள்ளை

நல்லூர் ஆறுமுக நாவலர்
பழனி மாம்பழக் கவிச் சிங்க நாவலர்

மற்றும் பலராவர்.

சென்ற அந்தச்சிறந்த நூற்ருண்டிலே, பூ மகள் முகமெனப் புகழ் பெற்று விளங்கும் தென் பாண்டி நாட்டிலே, பொதிய மலையருகே, தாம்பிர பர்ணி தீரத்திலே, திருநெல்வேலியிலே,

சுத்த சைவ வேளாண் குலத்திலே, சிந்தையில் வைத்து வந்திக்கத் தகுந்த ஒருவர்வந்தார். அவர் பெயர் செந்தில் நாயகம் பிள்ளை.

அவர், அம்மாவட்டத்தில், நெற்கட்டும் செவல் என்ற ஜமீனில், தானுதிபதியாய் அலுவல் பார்த்து வந்தனர்.

''இல்ல றத்துணை மனைவியர் நால்வரை
இனிது வல்ல வேதநூல் விதிவழி
முறை முறை மணந்தும் மகப்பேறில்லை''

எனவே, நான்காம் மனைவி பேச்சு முத்தம்மாளும், நாயகரும்பெருங் கவலையடைந்தனர்.

ஓர் ஐப்பசி மாதத்தில் அம்பிகை காந்திமதிஅழகியபவனி வந்தாள். செந்தில் நாயகர் சேவித்தார். தனக்குக்குழந்தை இல்லாக்குறையைச் சொல்லி வருந்தி வணங்கி நின்ருர்.

''கவலைப்படாதே! களிப்புடன் இரு!'' என்று வானெலியில் ஒரு தேனெலி எழுந்தது. அதுதான் அசரீரி. இது கடவுள் வாக்கென முன்தானையில் சேர்த்து முடிச்சுப் போட்டுக் கண்களில் ஒற்றிக் கொண்டு, களிப்புடன் வீடு போய்ச் சேர்ந்தார்.

பேச்சு முத்தம்மாள் பேரின்பக் கனவு கண்டாள். முருகன், தன் புஜத்தில்அமர்ந்துள்ள கிளியிடம்,

''உலகத்தில்சமயவாதனைகளைப் போக்கி, மெய்ச்சமயமாகிய
கௌமார சமயத்தை உபதேசித்து, கொலை புலை தவிர்த்து
புதுமையாகச் சந்தக் கவிகள் தமிழில்பொழிந்து, இறுதியாக
நமதுபதம் வந்து சேர்'' என்று சொல்லி அனுப்பி வைக்கின்ருன்.

இதனை ''தண்டபாணி'' விஜயம் மிக அழகாகக் கூறுகின்றது.

புவியிடத்தினில் சமய வாதனை அறப்போக்கி
கவியும் மெய்ச்சமரச கவுமார மார்க்கத்தை
நவிலலும் கொலை புலை இலா உத்தம நலம் செய்(து)
அவிரும் நன்னெறிபற்பலர்க்(கு) உதவலும் ஆற்றி,
சந்த வான்கவி அன்றி எக்கவிகளும் தமிழில்
முந்தவந்தவர்சொலாதவா(று) அனந்தமாம் மொழிந்து
பிந்த நம்பதம் புகுதி! என்(று) உரைத்து அனுப்பியதால்
வந்தருள் திருநெல்லையில் கருவிடை வாய்ந்தான்

கலி 4941, ஆங்கிலம் 1839, தமிழ் விகாரி வருடம், கார்த்திகை மாதம், 16ம் நாள் சனிக்கிழமை, அஸ்தம் கூடிய சுபதினத்தில், தலைமகனுக நமது கலைமகன் வண்ணச் சரபம் வந்துதித்தது.

மகிழ்ந்தனர். வந்தவர்களுக்கெல்லாம் வரிசை பல வழங்கினர்.

கணித நூல் வல்லவர்கள், ''இது கடவுள் பிள்ளை'' என்றனர்.

குழந்தை, அழுகை-சிரிப்பு-கை கால் உதறல் ஒன்றும் இல்லாத படி அயர்ந்திருந்தது. வேதனை யடைந்தனர்.

இறைவன், கனவில் தோன்றி, "சங்கரலிங்கம்" எனப் பெயர் சூட்டச் சொன்னான். அதன்படி செய்தனர். குழந்தை கைகால் அசைத்து அழவும், சிரிக்கவும் செய்தது. வியந்து மகிழ்ந்தனர்.

பின் பிறந்த பிள்ளை, சித்திர புத்திரர்.

சங்கரலிங்கத்தின் சரியான ஆறும்வயதில், தந்தைஇறந்தார். சின்னத் தம்பி சித்திரபுத்திரர் தேம்பித் தேம்பி அழுதார்.

இவர், "உடல்தந்தை போனார், உயிர்த் தந்தை இருக்கின்றார்" என்ற உறுதியில் தேறியிருந்தார்.

கவுரி குலத்தில் வந்த சீதாரா மன் என்பவர், கணபதி இலக்குமி மந்திரங்களை உபதேசம் செய்து வைத்தார். இவரும், தான் உருப்பட வேண்டி, அதனைத் தொடர்ந்து உருப்போடத் துணிந்தார்.

எட்டு வயதிருக்கலாம். அந்த சமயம், தன் தாயகமாகிய "சுரண்டை" என்னும் ஊர் சென்றார். அங்கு, பூமிகாத்தாள் கோயில் திருவிழா. சிறுவர் களோடு வேடிக்கைப் பார்க்கப் போனார்.

கிராமத்தினர் கூடி, அம்மன் பெயருக்குப் பல பொருள்கூறி வாதாடிக் கொண்டிருந்தனர். இவர் குறுக்கே சென்று "சரி யில்லை. அமுதம் கடைந்த காலத்தில் எழுந்த விஷத்தை இறைவன் உண்ட போது, உலகத்தைக் காக்க வேண்டி அவன் கண்டத் தைப் பிடித்துக் காத்தாள். ஆகவே, 'பூமி காத்தாள்' என் னும் பெயர் பெற்றாள்" என்றார்.

"அமுதம் கடையும் நாள் ஆலம்
வெடித்துத்
திமுத மெனத் தீஎரித்துச் சென்
ற(து)—அமுதமெனத்
தீக்கடவுள் உண்டார் திருக்
கண்டத் தைப்பிடித்துக்
காத்ததனால் பூமிகாத் தாள்."

என்று, ஓர்வெண்பாவைப்பண் பாகப் பாடிப் பலர்க்கும் தெளிவு படுத்தினார்.

அமுதம் என்ற மங்கல மொழி யில், அகரத்தை முதலாகக் கொண்டு, அருள் வாக்காய்க் கவி பாடத் தொடங்கினார்.

உபாசனை பலத்தினால் எழுந்த உயர்ந்த வாக்கு. எனவே, அனை வரும் வியந்தனர்.

குரு கேட்டார். பூசை பலித்த தென்று பூரித்தார். மேலும், ஷடாட்சர மந்திரம், வேல் பூஜை முதலியன உபதேசித்தார்.

"அந்தநாள் வய(து) எட்டரை எனக்கு...!" என்று, தனது பரு வத்தைக் குறிப்பிடுகின்றார்.

(அடுத்த இதழில் முடிவுபெறும்.)

★

ஆசிரியர்: இராம. மணிமேகலை. வெளியிடுபவர்: T. ராமனுதன். 4, தணிகாசலம் செட்டிரோடு, சென்னை-17. அச்சிடுபவர்: கொண்டா. காசி. சீதாராமன், ராமன்ஸ் பிரிண்டிங் பிரஸ், 81-5 பாண்டிபஸார், தியாகராயநகர், சென்னை-17.

ரியர் : கலைச்செல்வி மணிமேகலை

அருள்

அருட்பெருஞ்சோதி



தனிப்பெருங்கருணை

அருள்

தமிழ்மாதம் முதல்நாள் தோறும் வெளிவருகிறது

அன்பார்ந்த வாசகர்களுக்கு

வாழ்க்கையில் உங்களுக்கு அவ்வப்போது ஏற்படக் கூடிய சிக்கல்களையும் பிரச்னைகளையும், சுருக்கமாக — ஆனால் தெளிவாக, எழுதியனுப்புங்கள். அவற்றிலிருந்து நீங்கள் விடுபடுவதற்கு உரிய ஆத்மிக — தார்மிக — சமய ரீதியான ஆலோசனைகளை, "அருள்" பத்திரிகையில் வெளியிடுகிறோம்.

உங்கள் ஊரையோ பேரையோ நீங்கள் எங்களுக்குத் தெரிவிக்கவேண்டிய அவசியம் இல்லை. கையெழுத்துக் கூடப் போடாமல் வெறும் விஷயத்தை மட்டும் ஒரு கடிதத்தில் எழுதியனுப்பினால் போதும். உங்கள் ஊரையும் பேரையும் நீங்கள் குறிப்பிட்டு எழுதினால் கூட, அவற்றை நாங்கள் வெளியிட மாட்டோம்.

— ஆசிரியர்

அருள் 4	ஆண்டுச்	டிசம்பர்
கருணை 3	சந்தா	15-12-69
மார்கழி, சௌமிய	ரூ. 3-60	விலை : 30 காசு

சந்தா அனுப்ப வேண்டிய முகவரி : நிர்வாகி, "அருள்"
4, தணிகாசலம் செட்டி தெரு, தியாகராயநகர், சென்னை-17.

உ

திருச்சிற்றம்பலம்

உலகம் புரக்கும் பெருமான்தன்
    உளத்தும் புயத்தும் அமர்ந்தருளி
உலகை அளிக்கும் பேரின்ப
    உருவே! எல்லாம் உடையாளே!
திலகம் செறிவாள் நுதல்கரும்பே!
    தேனே! கனிந்த செழுங்கனியே!
தெவிட்டா(து) அன்பர் உளத்துள்ளே
    தித்தித்(து) எழுமோர் தெள்ளமுதே
மலகஞ் சுகத்தேற்(கு) அருள் அளித்த
    வாழ்வே! என்கண் மணியேஎன்
வருத்தம் தவிர்க்க வரும்குருவாம்
    வடிவே! ஞான மணிவிளக்கே!
சலகந் தரம்போல் கருணைபொழி
    தடங்கண் திருவே! கணமங்கைத்
தாயே! சரணம்! சரணமிது
    தருணம் கருணை தருவாயே!

—திருவருட்பா